...ரப பதிப்பு விலை சதம் 25 இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




சுத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 புரட்டாதி திங்கள் 17-ம் நாள் (3—10—1965) ஞாயிற்றுக்கிழமை ஐ.ஆகிர் 7 | இதழ் 19

# தமிழ் மொழி பெயர்ப்பு நாசம்

**தமிழ் அரசாங்க ஊழியர்களின் பதவி உயர்வுக்காக, அடுத்த ஆண்டு சனவரித் திங்களில் நடைபெறவிருக்கும் தரம் உயர்வுப் பரீட்சையை முறியடிப்பதற்கான சதி நாச வேலைகள் மொழித் திணைக்களத்தில் நடைபெற்றிருப்பதாக நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரிகிறது. இப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும் நிர்வாகச் சட்டங்கள், நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக் கழக விதிகள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புக்களை இந்த நோக்கத்துடனேயே மொழித் திணைக்களத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் அழித்து விட்டார்களாம்.**

## பதவி உயர்வுத் தமிழ் பரீட்சைக்குத் தடை

1956-ம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்க சேவையில் குறிப்பாக எழுது வினைஞர் சேவையில் தமிழ் மொழி மூலம் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கான பதவி உயர்வுப் பரீட்சைகள் முதல் முதலாக 1966-ம் ஆண்டு சனவரித் திங்களில் நடைபெறவிருப்பது பலரும் அறிந்ததே. இப் பரீட்சையைத் தமிழில் நடைபெற விடாது தடுக்கும் நோக்கத்துடன் அரசகரும மொழித் திணைக்களத்தில் சில நாச வேலைகள் நடைபெற்றிருப்பதாக அறியப்படுகிறது.

எழுது வினைஞர்களுக்கான தரம் உயர்வுப் பரீட்சைகளுக்கு முக்கியமாகத் தேவைப்படும் நிர்வாகச் சட்டம், நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக் கழக விதிகள் ஆகிய மூன்று நூல்களும் பல ஆண்டுகளுக்கு முன்னரே அரசகரும மொழித் திணைக்களத்தால் மொழி பெயர்க்கப்பட்டு அச்சேற்றும் நிலையில் இருந்தனவாம்.

இம் மொழி பெயர்ப்புக்கள் அனைத்தும் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தேவைப்படுகின்றன என்பதை அறிந்தும் மொழித் திணைக் களத்தில் உள்ள சில அதிகாரிகள் அழித்து விட்டார்களாம். இம் மொழி பெயர்ப்புக்களை அழிக்கும் கைங்கரியம் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற நிரந்தரச் செயலாளர்களின் மாநாட்டில் மொழித் திணைக்கள முதல்வர் டாக்டர் என். டி. விசயசேகர பங்குபற்றிய பின்னரே நடைபெற்றிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

1953ம் ஆண்டிலேயே இச் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு விட்டதாகவும், பின்னர் அம்மொழி பெயர்ப்புக்களைச் சரிபார்த்து அச்சேற்றக் கூடிய நிலையில் திணைக்கள முதல்வரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இம்மொழி பெயர்ப்புக்கள் அண்மைக் காலம் வரை இத்திணைக்களத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எப். எக்ஸ். சி. நடராசா, சோ. நடராசா ஆகிய இருவரினதும் பொறுப்பில் இருந்ததாகவும் தெரியவருகிறது.

நிரந்தரச் செயலாளர்கள் மாநாட்டில் இச்சட்டங்களை தமிழில் மொழி பெயர்க்க வேண்டுமென்று கூறப்பட்ட பொழுது, மொழித் திணைக்கள முதல்வர் டாக்டர் என். டி. விசயசேகரா அவற்றைத் தமிழில் மொழி பெயர்க்க பத்து ஆண்டுகள் வேண்டும் என்று கூறினராம். ஆனால் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே இச்சட்டங்கள் மொழி பெயர்க்கப்பட்டு விட்டதற்கான ஆதாரம் 5-9-1953ல் வெளியான 'அரசாங்கமொழிகள் ஆணைக்கழக ஐந்தாவது இடையறிக்கை'யின் 17ம் பக்கத்தில் உள்ளது. மேலும் 1957ம் ஆண்டுவரை வெளிவந்த 'அரசாங்க மொழித்திணைக்கள நிருவாக அறிக்கை'களிலும் இதற்கான பல ஆதாரங்கள் உள்ளன.

இந்த நாச வேலை பற்றி ஆராய நடு நிலையான ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கும் வண்ணமும், சம்பந்தப்பட்டவர்களை பதவியிலிருந்து இடை நிறுத்தும் படியும் தமிழரசுப் பிரதிநிதிகள் சிலர் இராசாங்க அமைச்சரையும், நீதி அமைச்சரையும் கேட்கப்போவதாகவும் அறியப்படுகிறது.

[அரசியல் நிருபரின் குறிப்பு 8-ம் பக்கம்]



நாடெங்கும் நவராத்திரி விழா குதூகலமாகக் கொண்டாடப்படுகிறது. சைவ மகளிரும் சிறுவர்களும் ஆடிப் பாடி மகிழ்ந்திருக்கும் காலமிது. இல்லம் ஒன்றிலே நவராத்திரிக் கொலு அமைக்கப்பட்டிருப்பதையும், கொழும்பு கப்பித்தாவத்தை பால செல்வ விநாயகர் ஆலயத்தில் அம்பாள் பூசை நடைபெறுவதையும் இப்படங்கள் காட்டுகின்றன. பால செல்வ விநாயகர் ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்களும் படத்தில் காணப்படுகிறார்.

## பொது வேலை நிறுத்தம் ஏற்படலாம்

பொது வேலை நிறுத்தமொன்றினை நடத்த எதிர்க் கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டி தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

துறைமுக நிர்வாகத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஐக்கியத்துறைமுகத் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசி திரு. மெண்டிசை மீண்டும் வேலைக்கமர்த்த வேண்டும் என்ற கோரிக்கையின் மீது முதலில் கொழும்புத் துறைமுகத்தில் வேலை நிறுத்தத்தை ஆரம்பிப்பதென்றும், அதனைத் தொடர்ந்து 12-அம்சக் கோரிக்கையின் அடிப்படையிலே பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தத்தைத் தொடங்குவதென்றும், அதனை இதர தொழிற் பகுதிகளுக்கும் விஸ்தரித்து பொது வேலை நிறுத்தத்தை ஏற்படுத்துவதென்றும் கூட்டுக் கமிட்டி திட்டமிட்டிருப்தாகக் கூறப்படுகிறது.

தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை அவர்களின் சங்கங்கள் விரைவில் முடித்துக் கொண்டது, எதிர்வரும் பொதுத்தேர்தலில் கலந்து கொள்வதற்காக தங்களின் 'வெடிமருந்தை' நனைந்து போகாமல் பார்துகாத்துக் கொள்வது தானென்றும் தொழிற் சங்கவட்டாரங்களில் ...

## பாகுபாடு ஏன்?

இந்திய சுற்றுலாவுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் வெளிநாட்டுச் செலவாணியில் தமிழர், சிங்களவர் என்ற பாகுபாடுகாட்டும் முறை இன்னும் நீங்கவில்லை.

தென்னிந்திய சுற்றுலாவுக்குச் செல்லும் ஒரு இலங்கைத் தமிழருக்கு 150/- மட்டுமே வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் தென்னிந்தியா செல்லும் ஒரு சிங்களவருக்கு 300/- வழங்கப்படுகிறது. அதே போன்று இந்தியா பூராவும் செல்லும் ஒரு இலங்கைத்தமிழருக்கு 300/- வும், ஒரு சிங்களவருக்கு 500/- வும் வழங்கப்படுகிறதாம்.

அதே நேரத்தில் மத்திய வங்கியில் உள்ள படிவங்கள் அனைத்தையும் மூன்று மொழிகளிலும் மொழி பெயர்க்கப் போவதாக அறிவித்த அதிகாரிகள், இப்பொழுது வெளிநாட்டுக்கு விமான மூலம் செல்பவர்கள் பயன்படுத்தும் 'பீ' படிவத்தை மட்டுமே மும்மொழியிலும் மொழி பெயர்த்திருக்கிறார்களாம். ஏனைய படிவங்கள் மொழி பெயர்க்கப் படமாட்டாது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறியிருப்பதாக அறியப்படுகிறது.

### அறிவித்தல்
**இலங்கைத் தொழிலாளர் கழகம்**
**இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்**

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நவம்பர் மாதம் 20ம், 21ம் திகதிகளில் அட்டன் நகரில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் விவாதித்தற்குரிய பிரேரணைகள், விதிகளைத் திருத்துதற்குரிய பிரேரணைகள், உத்தியோகத்தினரின் நியமனங்கள் பற்றிய பிரேரணைகள் ஆகியவை அக்டோபர் மாதம் 18ம் திகதிக்கு முன்னர் உறுப்பினர்களிடமிருந்து பொதுச் செயலாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இப்பிரேரணைகள் உறுப்பினர் ஒருவரால் பிரேரிக்கப்பட்டு, வேறு ஒரு உறுப்பினரால் ஆமோதிக்கப்பட்டிருக்கவேண்டும்.

117 ½, டிம்புள்ள வீதி,
அட்டன். 1-10-65.

சே. கலியப்பெருமாள்,
பொதுச் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இலக்கியத்தில் நேருவின் தாக்கம்

'இந்திப் புலவரோ இந்தி எழுத்தாளரோ' அல்லாத பண்டித நேருவினால் இந்தி இலக்கியத்தில் தாக்கம் (INFLUENCE) எப்படி உண்டாக முடியும்? என்ற அய்யம் பலருக்கு எழுவது இயல்பு. தற்கால வரலாற்று நாயகர்களிலே முக்கியமான ஒருவராய் விளங்கியவர் நமது பண்டித நேரு. எடுப்பும் இனிமையும் வாய்ந்த தோற்றம், தெளிவும் திறமும் வாய்ந்த சிந்தனை, பண்பும் மனிதாபிமானமும் கனிந்த உள்ளம்- இவை நேருவிடம் அமைந்திருந்த கவர்ச்சிகள். அதனால் அவர் அகில உலக, அகில இந்தியப் பெருமகனாக விளங்கி, எல்லா மக்களின் அன்பக்கும் பெருமதிப்புக்கும் உரியவராக நின்றார் என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் அவர் எழுதியதெல்லாம் ஆங்கிலத்தில். அவ்வப்போது இந்தியில் அவர் பேசி வந்தாலும், அது பிறர் பார்த்துப் பின்பற்றத் தக்கதோர் நடையில் அமையவில்லை. ஆகவே, நேரடியாக இந்தி இலக்கியத்தில் அவரது தாக்கம் எதுவும் ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது.

## இருமுகப் போக்கு

'ஆனால் தற்கால இந்தியாவின் சிற்பிகளில் முக்கியமான அவருடைய இலட்சிகளும் செயல் முறைகளும் அவர்கால இந்தி இலக்கியத்தைப் பாதிக்கவே இல்லை என்றும் சொல்ல முடியாது. பாதிப்பு அல்லது தாக்கம் ஏற்பட்டது உண்மை. ஆனால் அது நேர்முக (DIRECT)த் தாக்கமாக இல்லாமல் மறைமுக (INDIRECT) த்தாக்கமாகவே அமைந்தது.

'நேரு நமது பாரிய பழமையிலே மதிப்பு மிகக் கொண்டவர். அம்மதிப்பு வெறும் பழமை மோகமாக நின்றுவிடாமல், புதுமை நாட்டத்தால் வேகம் ஊட்டப்பட்டு அவரிடம் சிறப்புக் கொண்டது. இந்த இருமுகப் போக்கு, — பழமை தழுவிய புதுமை ஆக்கம்,— மனிதாபிமானத்தோடு இணைந்த அறிவியல் முன்னேற்றம் அவருடைய அடிப்படைக் கொள்கைகளிலே ஒன்று. இது தற்கால இந்தி இலக்கியத்தில் ஊடுருவியுள்ளதைத் தெளிவாகக் காண்கிறோம்,

## இந்தி மொழி ஆக்கத்தில் நேரு

'சமாதான சகவாழ்வு; நேருவின் இதய யாழில் எழுந்த மற்றொரு நாதம். இந்த நோக்கு இப்போதைய இந்தி இலக்கிய வாணர்களால் பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. சிக்கல்களுக்குப் போர் மூலமே தீர்வு காணவேண்டும் என்ற கொள்கை கொண்டு எழுதுவார் யாருமில்லை.

'இந்திய மொழிகள் எல்லாவற்றிலும், குறிப்பாக இந்திய ஆட்சி மொழியாகக் கருதப்படும் இந்தியில் புதிய அறிவியல் ஆட்சி இயல்களைச் செவ்வனே விளக்குதற்கு வேண்டிய வளம் இல்லை என்பது நேரு அடிக்கடி மனம் நொந்து எடுத்துக்காட்டிய குறை. இக்குறையைப் போக்குவதற்கான அகராதி தயாரிப்பு முயற்சிகள் கலைச்சொல் தயாரிப்பு முயற்சிகள் தீவிரப்பட்டிருப்பதற்கு இத்திசையில் நேரு காட்டிய ஆர்வமே காரணமென்று கூறவேண்டும்.

## குழந்தை இலக்கியம்

'நேரு குழந்தைகளிடம் கொண்டிருந்த அபரிமிதமான ஈடுபாடு உலகறிந்தது. தமது நாட்டுக் குழந்தைகள் எதிர்காலத்தில் நற்குடிகளாக வளர அவர்களுக்குச் சிறந்த இலக்கிய ஊட்டம் வேண்டும் என்று நேரு கொண்ட பேராவல் இந்தி இலக்கியத்தின் குழந்தை இலக்கியப் பகுதியில் புதியதோர் சுறுசுறுப்பை ஏற்படுத்தியது.

'நேருவின் மிகப் பெரிய இலட்சியம் உணர்ச்சி பூர்வமான தேசிய ஒருமைப்பாடு, திட்டுத் திட்டாகப் பிரிந்திருந்தே வளர்ந்துவிட்ட நாம் ஒன்றுபட்டாலன்றி நமது நாட்டுக்கு உய்வு இல்லை என்பதை மிக ஆழமாக உணர்ந்தவர் நேரு. சுதந்திர எழுச்சிக்காலத்திய இந்திய இலக்கியம், எல்லா மொழிகளிலும், மிகு சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருந்தாலும், அது தேசிய ஒருமைப்பாட்டு உணர்ச்சியைக் கட்டி எழுப்பவில்லை. ஆதலால் அத்திசையில் ஓங்கிய குரலெடுத்துப் பேசினார் நேரு. இந்தச் சிந்தனை இப்போதைய இந்திய எழுத்தாளரில் முக்கியமான அனைவரையும் பற்றிக் கொண்டுள்ளது. இந்தி மொழியில் இத்திசை நோக்கிய படைப்புக்கள் அண்மைக் காலத்தில் மிகுந்துள்ளன.

> இந்தி மொழி இலக்கியத்தில் மட்டுமல்லாது இந்திய இலக்கியத்திலேயே நேருவினால் தாக்கம் ஏற்படுத்த முடிந்தது என்பதை அண்மையில் தில்லியில் நடைபெற்ற ஒரு இலக்கியக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய தில்லிப் பல்கலைக்கழக இந்திப் பேராசிரியர் டாக்டர் நாகேந்திரர் பல ஆதாரங்களுடன் வலியுறுத்தியுள்ளார். பேராசிரியர் தனது உரையில் இந்திய ஒருமைப்பாட்டை நேரு வலியுறுத்தியமை இந்திய இலக்கியவாணர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது என்று கூறிய போதிலும் இந்திய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள இந்திய இலக்கியங்கள் எதையும் குறிப்பிட முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'இந்திய இலக்கியத்தில் நேருவின் தாக்கம்' என்ற தலைப்பில் பேராசிரியர் நிகழ்த்திய பேருரையின் சுருக்கம் இங்கு கட்டுரை வடிவம் பெற்றுள்ளது.

## தாக்கம் உண்மையே

'நேரு மிக உயர்ந்த உள்ளம் படைத்தவர், மதிப்பு வாய்ந்த அரசியல் மேதை என்பது உண்மை. நாட்டு மக்களின் நலனே உயர் லட்சியம் என்று உழைத்த அவர் தம் காலத்திய பல இலக்கியப்பாத்திரங்களுக்கு முன் மாதிரியாக விளங்கினார் என்பதும் உண்மையே.

ஆனால், என்னதான் பெரியவராக இருந்தாலும், ஒரு தனிமனிதரால் இலக்கிய வாணர்களின் போக்கு அடியோடு மாறிவிடும் என்று எண்ணுவது, மாறிவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் தவறு. ஆக்க இலக்கியவாணரின் போக்கில் அவருடைய தாக்கம் ஓரளவுதான் ஏற்பட முடியும். அந்த அளவு தாக்கம், இந்தி இலக்கியத்தில் நேருவால் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

## காந்தியும் நேருவும்

'இந்திக்காரராக இல்லாத நேரு, இந்தி மொழியில் ஆற்றல் இலக்கியம் எதுவும் படைத்திராத நேரு, ஒரு வகையில் தீவிர இந்தி ஆதரவாளர்களுக்குக் கடும் எதிரியாக இருந்த நேரு இந்தி இலக்கியத்தில் தாக்கம் ஏற்படுத்தியிருக்க முடியுமா?' என்று சிலர் கேட்கிறார்கள். அவர்கள், தமது காலத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நேரு பெற்றிருந்த பெருஞ் செல்வாக்கையும், உள்ளம் நிறைய அவர் கொண்டிருந்த உயர் மனித இலட்சியங்களையும், அவைகளை நிறைவேற்றுவதில் அவர் கொண்டிருந்த பேரார்வக் கனலையும் எண்ணிப் பார்க்கவில்லை என்றே சொல்ல வேண்டும். இம் மாபெரும் வரலாற்று நாயகன் தன்கால இலக்கியத்தில்

(11-ம் பக்கம் பார்க்க)

# இலக்கியத்தில் இரண்டு பரம்பரைகள்

## அன்று முதல் இன்று வரை உண்டு என்கிறார் தெ. பொ. மீ

"தமிழ் இலக்கியத்தில் நெடுகவே இரண்டு பரம்பரைகள் இருந்து வந்துள்ளன. ஒன்று, படிப்பாளிகளுக்கு மட்டுமே பயன்படக் கூடிய இலக்கியம்; மற்றது, கல்லார்க்கும் கற்றவர்க்கும் பயன்படக் கூடியதாக, எளிமையும் மக்கள் கலைகளும் தழுவி எழுகின்ற இலக்கியம்."

இவ்வாறு, தில்லித் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்த சிறப்புச் சொற்பொழிவில் 'நாடோடிப் பாடல்கள்' என்ற தலைப்பில் உரையாற்றிய பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் குறிப்பிட்டார். தமது கருத்தை விளக்கும் வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றிலிருந்து பல மேற்கோள்கள் காட்டிய பேராசிரியர், தொடர்ந்து பேசியதாவது:

சங்க இலக்கியக் காலத்திலிருந்து, இலக்கிய ஆசிரியர்களில் இரண்டு வகையினர் இருந்தே வந்திருக்கிறார்கள். மரபுகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு புலவர்களுக்கே இலக்கியம் பாடி வந்தார்கள் ஒருசார் புலவர்கள். மற்றொரு சாரார் அவ்வக் காலத்திய மக்களின் மொழி நடையையும் மக்கள் இலக்கிய உருவங்களையும் தங்கள் இலக்கியப் படைப்புக்களில் ஏற்றுக் கையாண்டு மொழிக்குப் புத்துயிர் ஊட்டினார்கள்.

சங்க நூல்களில் ஒன்றான ஐங்குறு நூற்றில் வரும் புலாட்டுப்பத்து, வேழப்பத்து, எருமைப்பத்து, வெள்ளாங்குருகுப்பத்து, சிறுவெண்காக்கைப்பத்து, மஞ்ஞைப் பத்து, கிள்ளைப்பத்து, தெய்யோப்பத்து முதலிய தலைப்புக்கள் எல்லாம் 'மக்கள் பாடல்' தலைப்புக்களே. இதில் உள்ள பாடல்களிலும், மற்றச் சங்க நூல்களில் உள்ள அளவு பாட்டு மரபுகள் இல்லை. ஐங்குறுநூறு கருப்பொருள் உரிப்பொருள் மரபுகட்கு மற்ற நூல்கட்போல அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

'சிலப்பதிகாரமும் மணிமேகலையும்' இரட்டைக் காப்பியங்கள் என்று கூறப்படுகின்றன. ஆனால் மணிமேகலை கற்ற புலவர்களுக்கே எழுதப்பட்டது. சிலப்பதிகாரம் மக்களையும் மனத்திற் கொண்டு எழுதப்பட்டது. அதனாலேயே சிலப்பதிகாரம் குரவை, வேட்டுவவரி, வள்ளைப் பாட்டு, ஊசல் பாட்டு முதலிய 'மக்கள் பாடல்' முறைகளை எல்லாம் தழுவிக்கொண்டது.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் இப்படியே அம்மானை, நீராடல், பொற்சுண்ணம், தோணோக்கம், முதலிய 'மக்கள் பாடல்' வடிவங்களை ஏற்றுக் கொண்டு பாடித் தமிழைப் பொது மக்களிடம் கொண்டு சென்றார்கள், அதனாலேயே இடைக் காலத்தில் வந்து புகுந்த பெண் வெறுப்புக் கொள்கை மாய்ந்தது.

ஒட்டக்கூத்தர் போன்ற பிற்காலப் புலவர்கள் சமஸ்கிருதம் கலந்த கடுநடையிலேயே தக்கயாகப் பரணி போன்ற நூல்களை யாத்தனர். அவர்களின் மொழி நடை தொடர்ந்து வந்திருந்தால் தமிழ் மொழி ஒழிந்தே போயிருக்கும். அந்த அபத்திலிருந்து, தமது எளிய நடைக் காவியத்தால், தமிழை மீட்டவர் சேக்கிழார்.

### இரு சாரர் வழக்கு

இப்படியாக மரபுவழி இலக்கிய நெறியும் மக்கள் வழி இலக்கிய நெறியும் மாறி மாறி வந்தன. ஆயினும் ஒன்றை ஒன்று வென்று அடிப்படுத்த முடியவில்லை. ஒரு வகையில் மாறுபட்ட இலக்கிய நெறியின் கையே ஓங்கிவந்தது.

'பழைய இலக்கண இலக்கியங்களை விளக்க வந்த உரை [illegible]

(11-ம் பக்கம் பார்க்க)




### தமிழ்த்துறையின் முதல்வர்

பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் முதல்வராகப் பதவியேற்றிருப்பவர் பேராசிரியர். வி. செல்வநாயகம் அவர்கள் ஈழத்தமிழ்த்துறையின் முதல்வராக, விபுலானந்தர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஆகியோரர் அமர்ந்த பொறுப்புமிக்க பீடத்தில், அமர்ந்துள்ளார்.

அன்பும், பண்பும் நிறைந்த தேரிய நோக்கோடு பேராசிரியருக்கேற்ற கம்பீரவடிவத்தோடு செயலாற்றுமிவர், 'தமிழ் இலக்கிய வரலாறு' எனும் நூலின் ஆசிரியர். தமிழ் இலக்கிய வரலாற்றைச் சுருக்கமாக, சுவையாக எழுதமுடியும் என்பதற்கு இந்நூல் சாட்சி. 'உரைநடை வரலாறு' அன்னாரின் இன்னோர் நூல்.

தமிழ்த்துறையின் புதிய பேராசிரியரை மகிழ்வோடு வாழ்த்துவதோடு, சிலவற்றை அவருக்குக் கூறவும் வேதாளம் விழைகிறது..

பல்கலைக் கழகத் தமிழ்த்துறை இதுவரை காலமும் தமிழிற்கு என்ன செய்தது, என்ற கேள்வி பரவலாக ஈழத்தில் எல்லாராலும் கேட்கப்படுகின்றது. பட்டதாரிகளை உருவாக்கி விடுவதோடு அதன் கடமை முடிந்து விடுகிறதா? ஈழத்தமிழகத்தின் தலைமைப்பீடம், பூசல், பொறாமைகளுக்கு இடம் கொடுக்காது இனியாவது செயலாற்ற வைப்பீர்கள் என எண்ணுகின்றோம்.

பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பற்றி வெளியே பலவிதமான குறைகள் கூறப்படுகின்றன. அவை இனிமேலும் நிகழாது செயலாற்றுவீர்கள் என்று தமிழ் உலகு நம்புகின்றது.

தமிழ் இலக்கியவன்னைக்குச் சேவை செய்த பல தமிழறிஞர்கள் நம்மிடையே உள்ளனர். அவர்களைக் கணித்துக் கௌரவிக்க வேண்டியது தமிழ்த் தலைமைப் பீடத்தின் கடமை. தலைவர் நீங்கள்!

இன்று பல்கலைக் கழகத்தில் உங்களது கடமை தமிழ்த்துறையோடு நின்றுவிடவில்லை. தமிழ் மொழி மூலம் கல்வி கற்பித்து வரும் ஏனைய பல துறைகளின் மொழித் தலைவரும் நீங்களே. அவற்றின் விருத்திக்கும் செயலாற்றுங்கள்.

எப்பக்கமும் சாராத உங்களைத் தமிழ் துறையின் பேராசிரியராகப் பெற்றமைக்கு ஈழத்தன்னை நிச்சயமாக மகிழ்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர்.கே. கரன்,
மட்டக்களப்பு.

கே: 'குயுக்தி அண்ணை! சில படித்த பெரியோர்கள் மற்றவர்கள் புகழடைவதையும், முன்னேறுவதையும் கண்டு பொருமை கொண்டு பிதற்றுகிறார்களே!

ப: பெரியோர்களிடம் பொருமை இருக்கமுடியாது. நீங்கள் குறிப்பிடும் ஆசாமிகள் படித்தவர்களாகஇருக்கலாம்-ஆனல் பெரியோர்களாக இருக்க முடியாது. காரணம் பொருமையை ஒழித்தாலன்றி பெரியோராக முடியாததுதான்.

ஃ

லிங்கம்,
மீசாலை.

கே: நான் பாடசாலைக்குச் செல்லும் போது இரு பெண்கள் என்னைக் கண்டதும் சிரிக்கின்றார்கள். அவர்களின் சிரிப்பைக் கண்டதும் என்னை அறியாமலே எனக்கும் சிரிப்பு வருகின்றது. இதன் மர்மம் என்ன?

ப: பிறர் நம்மைப் பார்த்துச் சிரிக்கும் போது நமக்கும் சிரிப்புத் தோன்றுமேயன்றி அழத்தோன்றாது. எனவே அவர்களின் சிரிப்பைக் கண்டு நீங்களும் சிரிப்பது ஆச்சரியமல்ல, அவர்களின் சிரிப்பில் ஏதேனும் பொருள் பொதிந்து கிடக்கிறதா? அதனைப் புரிந்து கொண்டுதான் நீங்களும் சிரிக்கிறீர்களா? அவ்விருவரின் சிரிப்பும் ஒரே மாதிரியானதா? அதில் வித்தியாசம் காணப்படுகிறதா? எதற்கும் உங்களின் பதில் சிரிப்பு காதலுக்கு வித்திடாதிருக்கப் பார்த்து கொள்ளுங்கள்.

ஃ

எஸ். சுந்தரம்,
சாவகச்சேரி.

கே: தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த கே. எம். பி. ராஜரத்தினவுக்கு மந்திரிப் பதவிக்குரிய சம்பளம் வழங்குமாறு ஜே. ஆர். கூறுகிறாரே. இதன் மர்மம் என்ன?

ப: நீங்கள் செய்தியைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஜே. ஆர். வாங்கியுள்ள வீரகேசரி நிறுவனத்தால் நடத்தப்படுவதாகக் கூறப்படும் ஒரு சிங்களப் பத்திரிகையின் ஆலோசக ஆசிரியராக திரு. இராஜரத்தினு கடமையாற்றுகிறாராம். அந்த வேலைக்குதான் அந்தச் சம்பளம்.

ஃ

மோ. பங்கிராஸ்,
மன்னர்.

கே: இம்முறை தேசிய அரசாங்கத்திடம் தமிழரசுக்கட்சி தமிழுக்குரிய இடத்தை பெறுவிட்டால், இனி தமிழரசுக்கட்சியால் பயனில்லையென்கிறேன்!

ப: நீங்கள் ஓர் அவசர குடுக்கை. தேசிய அரசாங்கமாக இருந்தாலும் சரி, வேறு எந்த அரசாங்கமாக இருந்தாலும் சரி தமிழரசுக் கட்சி தமிழ் மொழிக்குரிய அந்தஸ்தைப் பெற்றே தீரும்

ஃ

வி. ஆர். கிருஷ்ணன்,
நிர்கொழும்பு.

கே: பெண்களால் உலகம் அழிந்து போவதாக கூறுகிறார்களே! உண்மைதானு?

ப: உண்மையாக இருக்கலாம்! ஆனல் அழிவிலிருந்து உலகத்தைக் காப்பாற்றி வருபவர்களும் அவர்கள் தான் என்பதை அப்படிக் கூறுகிறவர்கள் மறந்துவிடக் கூடாது.

ஃ

எஸ். எஸ். ராஜா,
கொழும்பு-7.

கே: எனக்குத் திருமணமாகி இன்னும் சரியாக ஏழுமாதங்களாகவில்லை. அதற்குள் எனது மனைவி ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டாள். காரணமென்ன?

ப: கவலைப்படாதீர்! முதலாவது குழந்தையைப் பொறுத்தவரையில் சில பெண்களுக்கு இப்படி நடைபெறுவதுண்டு. ஆனல் அதற்குப் பிறகு இப்படி என்றுமே நடைபெருது.

ஃ

டி. ஆர். ரத்தினம்,
மட்டக்களப்பு.

கே: நான் எனது உத்தியோகத்தை இப்பொழுது மிகவும் திறமையாகச் செய்கிறேன். என் திறமை மென்மேலும் வளர நான் என்னசெய்ய வேண்டும்.

ப: உடனே அந்த உத்தியோகத்தை ராஜினாமா செய்துவிட்டு வேறு வேலைக்குப் போங்கள், அதுவே மேலும் திறமையானவன் ஆவதற்கான வழி.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

என். சி. மைக்கேல்,
கொச்சிக்கடை.

கே: அமெரிக்காவில் ஒரு நாணயத்தைப் போட்டதும் மணப்பெண் வரக்கூடிய இயந்திரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்களாமே?

ப: பூ! இதென்ன பெரிய பிரமாதம்! ஒரு மணப்பெண்ணைப் போட்டதும் நாணயம் வரக்கூடிய ஓர் இயந்திரத்தை நான் இங்கே கண்டு பிடித்திருக்கிறேனே!

ஃ

கே. எம். அழகேசன்,
திருமலை.

கே: கலியாணம் என்பது என்ன?

ப: குற்றமோ, கெட்ட நடத்தையோ செய்தாலொழிய சிறையை விட்டு விடுதலை பெற முடியாத ஓர் ஆயுள் தண்டனைதான் கலியாணம்.

ஃ

முருகானந்தன்,
யாழ்ப்பாணம்.

கே: எனது மனைவி இறந்து நாலாண்டுகளாகிவிட்டன மறுமணம் செய்யலாமா?

ப: ஒரே தவறை இரு தடவை செய்யப் போகிறீர்களா?

ஃ

கே. எஸ். தங்கமா,
லுனுகலை.

கே: காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் சிறிலங்கா சுதந்திரகட்சியின் நியமன எம். பி. யாக இருந்த போது தோட்ட தொழிலாளருக்கு என்ன நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தார்?

ப: ஒன்றுமில்லை- அன்று மட்டுமென்ன? இன்றும் ஒன்றுமில்லை.

ஃ

[illegible],
மட்டக்களப்பு.

கே: நான் இலங்கைப் பெண்ணைக் கலியாணம் செய்து இருக்கிறேன். எனக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. பிரசாவுரிமை கோரி விண்ணப்பம் செய்தேன். எனது மனு மறுக்கப்பட்டது முன்னள் பிரதம மந்திரியனல். நான் இனி பிரசாவுரிமை பெற என்ன முயற்சி எடுக்க வேண்டும்?

ப: மீண்டும் ஒரு முறை முயற்சி செய்து பாருங்கள்—புதிய பிரதமர் அனுதாபத்துடன் கவனிக்கக் கூடும்.

ஃ

ஜே. எஸ். தமிழ்அன்பன்,
மஹறாஊவா.

கே: இராகலையில நடந்த ஒரு இ. தொ. கா. கூட்டத்தில் ஒருவர் சொன்னர்; 'தமிழரசுக் கட்சி' வடக்கு—கிழக்கு மாகாணங்களில் தோல்வி கண்ட பின்புதான், மலையகத்தில் 'தமிழரசார்' காலடி வைத்தார்கள் என்று, உண்மையா?

ப: இல்லை தொண்டமான், அஸீஸ் என்னும் இரு தலைவர்களால் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதுவித பயனும்ஏற்படப் போவதில்லை என்று கண்டபிறகுதான் தமிழரசாரின் மலையகப் பிரவேசம் நடைபெற்றது.

ஃ

காசி. செல்லையா,
சின்னஎலிபொடை.

கே: தற்பொழுது திரு. வெள்ளையன் மலைநாட்டுப் பகுதியில் எதற்காகப் பாடுபடுகிறார்?

ப: எதற்காகப் பாடுபடுகிறார் என்பது பற்றி தகவல் இல்லை. ஆனல் அவரது நடவடிக்கையால் இ. தொ. காங்கிரஸ் கோட்டையின் ஒரு பக்கம் தகர்ந்து கொண்டிருக்கிறது.

ஃ

நா. புஷ்பலீலா,
யாதகல்.

கே: பணம் அதிகம் வந்து விட்டால் நிம்மதி போய் விடுகிறதே! ஏன்?

ப: தனி நபரின் பிரச்சினைகள் பெரும்பாலும் பணத்தைச் சுற்றியே சுழல்கிறது. பணமிருக்கும் இடத்தில்தான் பணத்தைப் பற்றிய கவலையும் இருக்கும். எனவே பணம் பிறர் கையிலிருக்கும் வரை அதைப் பற்றிய கவலையும் குறைவு. அதுதன் கைக்கு வந்தவுடன் அதைப் பற்றிய கவலையும் வந்து விடுகிறது. பணம் நம் கையிலிருக்கும் வரை பணத்தைச் சுற்றிச் சுழலும்பிரச்சினைகள் நம்மைச் சுற்றியும் சுழல்கின்றன. கவலையும் இப்பிரச்சினைகளும் நமது நிம்மதியைக் கெடுத்துவிடுகின்றன.

ஃ

பா. சி. மலர்,
ஈவினை.

கே: கல்லூரியில் ஒரு வாலிபன் படிப்பிலும், விளையாட்டுக்களிலும் என்னுடன் போட்டி போடுகிறார். பொருமையால்லல இது கடைசியில் எப்படி முடியுமோ?

ப: போட்டி ஏற்படுவது நன்று-நீங்களும் கடுமையாகப் போட்டியிட்டால், இறுதியில் உங்களுக்கு வெற்றியாகவே முடிவடையும்.

ஃ

கே. திராவிடத்தம்பி,
உந்துகொடை.

கே: ஐ. நா.வுக்கு சென்றுள்ள திரு. பொன்னம்பலத்தின் சத்தமே இல்லையே. வழி தெரியாமல் வேறு எங்காவது போய்விட்டாரோ?

ப: ஒரு வழியாகப்போய்ச் சேர்ந்து விட்டார். ஐ. நா இலங்கைச்சட்டசபை அல்ல. உலக இராஜதந்திரிகள் கூடியிருக்கும் இடம். அங்கே இவரும் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். அவ்வளவுதான் அதற்குமேல் அவர் அங்கே வேறு என்னதான் செய்யமுடியும்?

ஃ

க. முத்துலிங்கம்,
கைதடி.

கே: சந்திரமண்டலத்துக்கு மனிதன் சென்றால்......?

ப: சந்திரன் பூவுலகத்துக்கு வந்துவிடுவான்.

ஃ

எம். எம். ஏ. ஸ்டோரிஸ்,
நொச்சாயகமம்.

கே: 3வது உலக யுத்தம் வந்தால் நீர் என்ன செய்வீர்?

ப: இலங்கை மீது ஓர் அணுக்குண்டு விழாதவரை உங்களின் கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருப்பேன்.

ஃ

கே: இன்பம் துன்பமாக மாறுவது எப்போது?

ப: இன்பத்தின் விளைவை அனுபவிக்கும் போது.



நல்ல யோசனை

ஆணலும் மனைவியுமான ஆசிரியர்கள் இனிமேல் ஒரே பாடசாலையில் கடமைபுரிய முடியாது.

—கல்வி அமைச்சர்

பாடசாலையையே தங்களுடைய வீடாக நினைத்து இருவரும் சச்சரவுப்பட ஆரம்பித்து விடுகின்றனர் போலும்.

அறிக்கை ஏன்?

வேலை நிறுத்தம் நீடிப்பதால், அறிந்து அறிவித்தல் வரை தபால் போடாதீர்கள்.

—தபால் இலாகா அறிக்கை

வேலை நிறுத்தமில்லாத காலங்களிலும் பத்திரமாகத் தபால்கள் பட்டுவாடா செய்யப்பட்டன என்று இத்தால் உத்தரவாதமளிக்கின்றனரோ?

பயம் வேண்டாம்

விமான எண்ணெய் கையிருப்பு மிகவும் குறைந்துவிட்டது.

—செய்தி

இப்பொழுதுதான் நாடெங்கணும் நல்ல மழை பொழிகிறதே. எல்லாவற்றிலும் கலப்படம் செய்யும் உள்ளூர் நிபுணர்களைக் கலந்தாலோசித்தால் மழை நீரையே விமான எண்ணெயாக ஆக்கித்தரமாட்டார்களா?

இது என்ன பிரமாதம்

செல்வி மரியா டெலஸ் சோல் என்ற பல்கேரியப் பெண்மணி 73 பிரயாணிகள் கொண்ட விமானத்தை வெற்றிகரமாக ஓட்டி விமானமோட்டிய முதலாவது பெண்மணியாகி விட்டார்.

—செய்தி

பூ......இது என்ன பிரமாதம்! நாங்கள் கார் ஓட்டும் வேகத்தில் சாலைகளின் ஓரத்திலே மரந்துவௌனஸ்போடி அவஸ்தைப்படும் ஆண்களை விட மேற்படி விமானத்தில் இருந்த பிரயாணிகள் ஒருபடி குறைவுதான், என்று 'பம்பல'-வத்தை' நங்கை ஒருவர் தமது காரில் பிரயாணம் செய்துவந்த பிரயாணிகளிடம் கூறினார்.

எதிர்காலத்திட்டம்

இளைஞர்கள் மத்தியில் அரசியல் வகுப்புகளை நடாத்த சமசமாஜக் கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.

—செய்தி

வயது வந்தவர்களிடம் தங்கள் வண்டவாளங்கள் செல்லுபடியாகாதென்பதை கடந்த தேர்தலில் கண்டு கொண்டனர். வருங்காலத் தேர்தல்களிலாவது [illegible] புத்தேட இப்பொழுதே [illegible] மிட்டு விட்டார்கள் போலும்.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் சாந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய சேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டாட்சிவாதிகளின் இன்றைய போக்கு

## அன்றைய குற்றச்சாட்டை அம்பலப்படுத்துகிறது

**பழைய கூட்டரசாங்க வாதிகளான இன்றைய எதிர்க் கட்சிகள் கடந்த ஆறு மாதங்களாக எடுத்து வரும் நடவடிக்கைகளை ஊன்றிக் கவனிக்கையில், அவர்கள் மீது முன்னர் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மையென்றே தோன்றுகிறது. ஒரு இனம், ஒரு மொழி, ஒரு மதம் என்ற கூச்சலுடன் தொடங்கிய பிரச்சாரம் எதிர்க் கட்சிகள் எதிர் பார்த்த பலனைக் கொடுக்காததும், இன்று புது வழியை நாடியுள்ளார்கள். எதிர்க் கட்சிகளின் புதிய போக்கு நாட்டில் பெரும் ஆபத்தான நிலையை உருவாக்கக் கூடும். அத்துடன் எதிர்க் கட்சியினரின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் மீது சுமத்தப்பட்ட சர்வாதிகாரக் குற்றச்சாட்டும் இன்று நிருபணமாவதாகவும் இங்கு கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்.**

பாராளுமன்ற ஆட்சி முறையில் எதிர்க் கட்சிகளின் பணி முக்கியமானது. பாராளுமன்ற சனநாயகத்தைக் கட்டிக்காத்து முழுமை பெறச் செய்யும் பொறுப்பு எதிர்கட்சிகளினுடையதாகும். இந்த அடிப்படைச் சனநாயக உண்மையை இலங்கையிலுள்ள எதிர்க்கட்சிகள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

எதிர்கட்சியென்றால் ஆளும் கட்சியின் எதிரிக் கட்சியென்ற நிலையிலேயே இலங்கையில் உள்ள எதிர் கட்சிகள் இயங்கி வருகின்றன. ஐந்து ஆண்டுகாலம் எதிர்வரிசையில் பொறுமையுடனும் பொறுப்புடனும் அமர்ந்திருந்து, ஆக்கபூர்வமான முறையில் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணம் எதிர்க்கட்சிகளைச்சார்ந்தவர்களிடம் சிறிதேனும் இல்லை.

### ஆறு மாதங்கள்

பொதுத்தேர்தல் முடிந்து ஆறுமாதங்கள் கடந்துவிட்டன. இந்த ஆறுமாத கால எல்லைக்குள் எதிர்கட்சிகள் அடித்த குத்துக்கரணங்களும், கொள்கை மாற்றங்களும் பல. 'நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த பொறுப்பானவர்கள் நாங்கள்' என்பதை மறந்த நிலையில் எதிர்க்கட்சியினரின் பிரச்சாரங்கள் அமைந்திருக்கின்றன.

நாட்டின்முதலமைச்சராக இருந்த திருவாட்டி சிறிமாவோ பண்டாரநாயக்கா முதல் சாதாரண அரை அமைச்சர்கள் வரை 'தமிழ் எதிர்ப்புக்' கோசங்களை உச்ச தொனியில் ஓங்கி ஒலிக்கிறார்கள். எதிர்கட்சிகளில் உள்ள பொறுப்பான தலைவர்கள் என்று கருதக்கூடிய டாக்டர் என். எம். பெரேரா, திரு. பீட்டர் கெனமன் போன்றோரும் பச்சை வகுப்புவாதத்தை பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் பச்சை பச்சையாகக் கக்குகிறார்கள்.

உலகெங்கும் பாட்டாளிகள் தினமாகக் கொண்டாடப்படும் மே நாளை எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து 'தமிழர்கள் எதிர்ப்பு' நாளாகக் கொண்டாடினார்கள். எதிர்க்கட்சிகளின் தீவிர தமிழ் எதிர்ப்புக் கோசத்தையும், மிதமிஞ்சிய சிங்கள—பௌத்த தீவிர வாதத்தையும் கண்டு எதிர்க் கட்சிகளின் அனுதாபிகளே அருவருப்புக்கொள்ளும் நிலை உருவாகிவருகிறது.

தமிழ் எதிர்ப்பு நடவடிக்கையை வலுப்படுத்துவதற்கும், தீவிரப்படுத்துவதற்கும் என்றே இரண்டு சிங்கள நாள் இதழ்களை எதிர்கட்சியினர் தொடக்கி நடத்தி வருகிறார்கள்.

### எதிரி மனப்பான்மை

எதிர்க்கட்சிகளின் இந்தத் தீவிர நடவடிக்கைகளினால் அரசாங்கம் நாட்டில் பிளவுண்டு கிடந்த இரு இனமக்களையும் ஒன்றுபடுத்தும் தீவிர நடவடிக்கைகளை அமுல் நடாத்த முடியாது தயங்கிவருகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வடபகுதிமக்கள் மீது தனித்தார்பார் ஆட்சி நடத்தி வந்த இராணுவத்தை வெளியேற்றும் வண்ணம் மக்கள் கேட்டார்கள், அந்த மக்களின் கோரிக்கையை ஆட்சியாளர்ஆராய முற்பட்ட நேரத்தில் எதிர் கட்சிகள் இத்திட்டத்திற்கு எதிரான ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள்.

இது போன்று பல நல்ல காரியங்களையெல்லாம் ஆட்சியாளர் செய்ய முற்படுகின்ற போதெல்லாம் அதற்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டு எதிர்க் கட்சிகள் எதிரிக்கட்சிகளாகவே நடந்து கொள்கின்றன.

வகுப்புவாதக் கூச்சலை எழுப்பி தேசிய அரசாங்கத்தை வீழ்த்தி விடலாம் என்று தப்புக்கணக்குப் போட்டார்கள் எதிர்க்கட்சியினர். அவர்களின் வகுப்புவாதக் கூச்சல், அவர்கள் எதிர்பார்த்த பயனைக்கொடுக்கத் தவறியதை உணர்ந்ததும், புதிய ஒரு கோணத்திற்குத் திரும்பியுள்ளார்கள்.

### வேலை நிறுத்தம்

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும், நாட்டில் செழிப்பான ஒரு நிலையை உருவாக்குவதற்கும் தேசிய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை முறியடிப்பதே எதிர்க்கட்சிகளின் புதிய வழியாகும்.

இதன் முதற்படியே இன்று தபாற் திணைக்களத்தில் தொடக்கி விடப்பட்டவேலை நிறுத்தமாகும். கொழும்பு மத்திய தபாற் திணைக்களத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்றுவரும் சீர்கெட்ட நிலை நாடறிந்ததே. மக்கள் பணம் கொடுத்து

**பூங்குன்றன்**

அனுப்பும் கடிதங்கள் உரிய நேரத்தில் உரியவர்களிடம் சென்றடைவதில்லை. அவசர காரணமாக அதிக பணம் கொடுத்து அனுப்பப்படும் தந்திகள் ஆடி அசைந்து சதாரண தபால்களாக குறித்த இடங்களைச் சென்றடைகின்றன. இதனால் சாதாரண பொதுமக்கள் அனுபவிக்கும் இடர்ப்பாடுகள் கொஞ்சமல்ல.

முக்கியமாக பெரிய வியாபார நிலையங்களால் வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் வான் அஞ்சல்களில் உள்ள விலை உயர்ந்த தபாற் தலைகளை எடுத்து விட்டு கடிதங்களை குப்பைக் கூடையில் போடும் சம்பவங்கள் தலைமைத்தபால் நிலையத்தில் மிகச் சாதாரண சம்பவமாகும். இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்காது அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராகவே வேலை நிறுத்தம் முடுக்கி விடப்பட்டது.

### திட்டம் பழையது

இந்த இடமாற்றத் திட்டத்தை வகுத்தவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள் அல்ல.

இன்று வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிட்டு பின்னணியில் நின்று முடுக்கிவிடுபவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தகால் அவர்களின் அமைச்சரினாலேயே இந்த இடமாற்றத் திட்டம் வகுக்கப்பட்டது. எதிர்க்கட்சிகள் தபால் தரம்பிரிப்பாளர்களை இட மாற்றம் செய்வதற்கு எதிராக வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிட்டார்கள் என்றால், அதன் பொருள் அவர்கள் [illegible] எதிராக நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றே பொருள். இதுவொன்றே எதிர்க்கட்சிகள்-எதிர்க்கட்சிகளாக இல்லாது எதிரிக் கட்சிகளாக மாறியிருப்பதற்குச் சான்றாகும்.

தபால் தரம் பிரிப்பாளர்கள் ஏன் இடமாற்றம் செய்யப்படுகிறார்கள் என்று ஆராயவேண்டும். நாட்டு மக்களின் பெரும் குறையைப் போக்கி, மக்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இடமாற்றம் செய்யப்படுகிறார்கள்.

### மக்களின் எதிரிகள்

இந்த இடமாற்றத் திட்டத்தை எதிர்க் கட்சிகள் எதிர்க்கிறார்கள் என்றால், அவர்கள் இந்நாட்டு மக்களுக்குச் செய்து கொடுக்கப்படும் வசதிகளை எதிர்க்கிறார்கள் என்றே பொருள்படும். அப்படியானால் எதிர்க் கட்சிகள் இந் நாட்டு மக்களில் ஒருவிகிதத்தினரைத்தானும் பிரதிநிதித்துவப்படுத்த வில்லையா? எதிர்க்கட்சிகளும் இந்நாட்டு மக்களில் குறிப்பிடக் கூடிய தொகையினரை-அவர்கள் ஒரு மத, ஒரு இனத்தவர்களாக இருந்தாலும்-பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். அப்படியானால் எதிர்க் கட்சியினர், இன்று அரசாங்கம் மக்களின் வசதிக்காக எடுக்கும் நல்ல நடவடிக்கையை எதிர்ப்பதேன்? இதுதானா எதிர்க் கட்சிகளின் பணி?

### உண்மையா?

எதிர்க்கட்சிகள் [illegible]ன்று எடுக்கும்ஒவ்வொரு நடவடிக்கையும் இந்த வகையிலேயே அமைந்திருக்கிறது என்பதை நியாய புத்திபடைத்த எவரும் மறுக்கமாட்டார்கள். தமிழ் மொழி விசேட சட்டம், மாவட்ட சபைத் திட்டம் இவையனைத்தும் எதிர்க் கட்சிகள் கடந்த காலத்தில் அமுல் நடாத்தப் போவதாகக் கூறிய திட்டமே. இதை எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, நாட்டு மக்களும் மறந்திருக்க மாட்டார்கள். இன்று அவற்றையெல்லாம் எதிர்க்கிறார்கள். எதிர்க் கட்சிகள் என்றால் எதிரிக் கட்சிகள் என்ற நிலையில் நடப்பதாக எதிர்க் கட்சித் தலைவர்கள் எண்ணுகிறார்களா? அல்லது சனநாயக ரீதியில் பெரும்பான்மை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இன்றைய தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சிக்கிறார்களா?

எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் ஒரு உண்மையை திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகிறது. நாடு எக்கேடு கெட்டாலும் கவலையில்லை. ஆனால் இந்த நாட்டின் ஆளும் பொறுப்பு என்றுமே நம்மிடம் இருக்க வேண்டும். எதிர்க்கட்சியின் இன்றைய போக்கிலிருந்து-இவர்களின் ஆட்சிக் காலத்தில் இவர்கள் ஒரு தனிக் கட்சி ஆட்சியை நிலைநிறுத்த முற்பட்டார்கள் என்ற குற்றச் சாட்டு நிரூபிக்கப்படுகிறது. இந்த உண்மையை எதிர்க்கட்சிகள் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது.

---

## அமரரின்பேரில் அன்னதானம்

'தமிழ் பேசுமினத்தின் பறிபோன உரிமைகளுக்காக; சம உரிமைக்காக; சமத்துவ வாழ்வுக்காக; சாதி-இன-மத-மொழி பாகுபாடற்ற சுபீட்சமான வாழ்வுக்காகப் போராட, இருளை ஓட்டும் உதயனைப் போல் தோன்றியவர் அமரர் வன்னியசிங்கமாவார். ஈழத் தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சியைத் தட்டிவிட்ட முதற் பெருந்தகையும் அவரே-அந்த போற்றற் குரிய தலைவரின் நினைவாக இன்று 'அன்னதானம்' நிகழ்வது பெருமைக்குரியதாகும்'

கடந்த 19ந் திகதி கல்முனை தமிழரசுக் கட்சிக் கிளைப் பணிமனையில், அமரர் கு. வன்னியசிங்கத்தின் நினைவை யொட்டி வெகு விமரிசையாக நடைபெற்ற 'அன்னதானம்' வைபவத்தின் போது, பண்டிதர் மா. நாகலிங்கம் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார். அன்னாருக்கு அஞ்சலி செலுத்து முகமாக இரண்டு நிமிடம் மௌனம் சாதிக்கப்பட்டது.

ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள், மிகுந்த உற்சாகத்தொடு கலந்து கொண்டு இவ்வைபவத்தைச் சிறப்பித்தனர். கிளைக் கொடி ஸ்தம்பத்தில் மூவர்ணக் கொடி அன்று பூராவும் கம்பீரமாகப் பறந்தது.

## 'சிவாயவாசி' ஆசிரியர் மறைவு

'சிவாயவாசி' என்ற சைவ சமய மாத சஞ்சிகையின் ஆசிரியரான திரு. மா. வடிவேல் வியாழன் 23ம் திகதிகாலையில்கொழும்பில் காலமானார். கொழும்பு கிறீன்லண்ட்ஸ் கல்லூரி ஆசிரியராக இவர் பணி புரிந்தார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வடிவேல் 1945-ம் ஆண்டு தொடக்கம் பல சமூக சமயப் பணிகள் புரிந்துவந்துள்ளார். தூய கதராடையுடனேயே இவரை எப்பொழுதும் காணலாம். சைவ சமயப் பணிக்காக 'சிவாயவாசி' என்ற மாதவெளியீட்டை நடாத்தி வந்தார்.

—

## அண்ணா விழா

இத்திங்கள் 3ம் திகதி கொழும்பில் நடைபெறவிருந்த அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா தொடர்ந்து பெய்து கொண்டிருக்கும் மழை காரணமாக 17ம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருப்பதாக விழாக்குழுச் செயலாளர் திரு. நா. வீரசிங்கம் அறிவித்துள்ளார்.


## 'மாய ஜோதி' ஊதுபத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊதுபத்திகளே!

ஏன்?

★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்ரீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.



## 'சுதந்திரன்' புதிய சந்தா விபரம்

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
சுதந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்த 'சக்தி' பற்றி பண்டாரநாயக்காவே வருந்தினார்

'சமஷ்டி முறையின் மூலமே இலங்கைச் சிறுபான்மைமக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்று 1926-ம் ஆண்டிலே பண்டாரநாயக்கா கூறினார். இக்கருத்தை மனதில் இருத்தியே பண்டாரநாயக்கா—செல்வநாயகம் அவர்களுடன் 1957-ம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து கொண்டார். தம்மையும் மீறிய சக்தி ஒன்றின் தூண்டுதலே இவ்வொப்பந்தத்தைக் கிழித்தெறியத் தூண்டியது என்று அவர் வேதனையுடன் கூறியிருக்கிறார்.' கடந்த செவ்வாய்க்கிழமை மூதவையில் வரவு செலவுத்திட்ட விவாதம் நிகழ்ந்த போது அமைச்சர் திருச்செல்வம் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் திருச்செல்வம் தமதுரையில் தொடர்ந்து கூறியதாவது:

திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1926ம் ஆண்டு ஜூலை மாதம் 17ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைமாணவர் காங்கிரசில் உரை நிகழ்த்துகையில், இலங்கைக்கு சமஷ்டிக்கூட்டாட்சி முறையே உகந்தது என்றும், இவ்வாட்சி முறை ஒன்றின் மூலமே இங்குவாழும் கண்டியரும் கரை நாட்டுச் சிங்கள

## நாட்டைத் துண்டாட நாம் விரும்பவில்லை

வரும் தமிழரும் தத்தமது கலை கலாச்சாரம் பண்பாடு முதலானவற்றைப் பேணிக் காக்க வழிபிறக்கும் என்றும் கூறினார். 'மோர்ணிங் லீடர்' என்ற சஞ்சிகையில் அப்போது வெளியான இச்செய்தியை இதோ வைத்திருக்கிறேன். தமிழ் மக்களுடையதும் சிங்கள மக்களுடையதுமான பண்பாடும் நாகரீகமும் வாழ்க்கை முறையும் சமஷ்டி முறையினால் மாற்ற மடைந்துவிடும் என்று எவரேனும் கருதுவார்களேயானால், அவர்கள் சித்த சுவாதீன மற்றவர்களேயாவர் என்றும் பண்டாரநாயக்கா கூறினார்.

### தீய சக்தி

திரு. பண்டாரநாயக்கா இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையே உகந்தது என்பதை திரிகரண சுத்தியுடன் அன்றே ஒப்புக்கொண்டிருந்தார். இடைக்காலத்தில் துரதிர்ஷ்டவசமாக இக்கருத்தை மறந்திருந்தாலும், 1957ம் ஆண்டில் அக்கருத்துக்கு மீண்டும் மதிப்பளித்தார். இதுவே செல்வநாயகம்—பண்டாரநாயக்கா ஒப்பந்தம் கைச்சாத்தாக வழி அமைத்தது.

செல்வநாயகம் அவர்களுடன் பண்டாரநாயக்கா செய்து கொண்ட உடன்படிக்கையைக் கிழித்தெறிவதற்கு தம்மையும் மீறிய ஒரு சக்தி தம்மைத் தூண்டுவதாகவும் அதையிட்டுத் தாம் வருந்துவதாகவும் திரு. பண்டாரநாயக்காவே தமது நண்பர் ஒருவரிடம் கூறியிருக்கிறார். விரைவில் தமிழ் பேசுவோர்—சிங்களவர் ஒற்றுமையுடன் இயங்க வழி பிறக்கும் என்றும் அப்போதே அவர் குறிப்பிட்டுள்ளார்.

### புதிய ஆயுதம் அல்ல

சமஷ்டி ஆட்சி ஒன்றும் புதுமையானதல்ல. சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் சிறுபான்மை இனப்பிரச்சினைகள் தீர்வடைய சமஷ்டி ஆட்சியே வழி வகுத்தளித்துள்ளது. ஆகவே இம்முறை எம்மால் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு புது ஆயுதம் என்று எவரும் கருதிவிட வேண்டாம்.

தேசிய அரசாங்கத்தில் இணைந்ததால் பலர் தமிழரசுக் கட்சியைத் திட்டித் தீர்க்கத் தலைப்பட்டுள்ளனர். தமி-

ழரசுக் கட்சியினர் கொள்கைகளை உதறி எறிந்துவிட்டனர் என்றும் குறை கூறுவோர் உண்டு. யூ. என். பி. யுடன் தேசிய அரசில் அங்கம் பெற்றமையினால் தமிழரசார் தங்கள் இலட்சியத்தை விட்டுவிடவில்லை. அதே போன்று, ஐக்கிய தேசியக் கட்சியும் தங்கள் இலட்சியங்களை இழந்து விடவில்லை.

### பிளவை விரும்பவில்லை

தமிழ்பேசும் மக்கள் பண்டு தொட்டு வாழ்ந்து வரும் பிரதேசமான வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியில் ஆட்சி நடைபெறவேண்டும் என்று தான் விரும்புகிறோம். பிரதேச ரீதியாக நாட்டைப் பிளவுபடுத்தி, தனி ஆட்சி பெற்று சிங்களவருக்கு எதிராகப் போர் தொடுப்பது எமது நோக்கமல்ல.

கடந்த ஆட்சி எமக்கு எண்ணற்ற வாக்குறுதிகளைக் கொடுத்தது. ஆனால், எவற்றையும் நிறைவேற்ற நினைக்கவேயில்லை. தேசிய அரசாங்கத்தில் நாம் இன்று சேர்ந்து ஒத்துழைப்பு நல்குவதற்குரிய காரணம், ஐக்கிய தேசியக் கட்சி எமது இனத்தின் உரிமைகள் பலவற்றை மீட்டுத் தர வாக்களித் திருப்பதேயாம்.

இனத் துவேஷத்தால் இந்நாடு முன்னேற்றமடைய வழியில்லை என்பதனை ஐக்கிய தேசியக் கட்சி அறிந்து கொண்டது. சகல இன மக்களுக்கும் சம வாய்ப்புகளை வழங்கிவிட முடிவுசெய்து செயற்பட்டுவருகிறது.

தமிழரசுக் கட்சிக்கு தேசிய அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதற்கான அறி குறிகள் தென்படுகின்றன. தேசிய அரசாங்கத்தின் இன்றைய செயல் முறையில் நாம் திருப்தியடைந்துள்ளோம். ஆகவேதான் தேசிய அரசாங்கத்தை ஆதரித்து வருகிறோம்.

**மூதவையில் திருச்செல்வம்**

## புதிய சமாதான நீதிபதி

மல்லாகத்தைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞரும் சமூக சேவையாளருமான திரு. சுப்பிரமணியம் நடராசா அவர்கள் அண்மையில் சமாதான நீதிபதியாகவும் உத்தியோகத் தொடர்பற்ற நீதிபதியாகவும் நியமனம் பெற்றுள்ளார். இவர் பர்மா புகையிரதத் திணைக்களத்தில் கடமையாற்றிய மறைந்த திரு. சுப்பிரமணியத்தினதும், திருவாட்டி சுப்பிரமணியத்தினதும் மகனாவர்.



திரு. நடராசா அவர்கள் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், கொழும்பு சகிராக் கல்லூரியிலும் ஆரம்பக் கல்வி பெற்ற இவர், இரங்கூன் சர்வகலாசாலையிலும், இலங்கைச் சட்டக் கல்லூரியிலும் படித்து 1938ல் வழக்கறிஞராகத் தேர்ச்சி பெற்றார்.

திரு. நடராசா அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர். தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளராகவும் பல முறை பதவி வகித்துள்ளார். கடந்த ஆட்சியாளரால் இரு முறை தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட இவர், 1961ம் ஆண்டுச் சத்தியாக்கிரகத்தின் போது நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கமான சமநிலைத் தபால் நிலைய அமைப்புப் போராட்டத்தில் பிரதம தபால் அதிகாரியாகவும் இருந்துள்ளார். அச் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் முடிவில் இராணுவத்தினரின் மிருகத்தனமான தாக்குதலுக்கு இவர் இலக்காகியது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆளும் கட்சிக் கூட்டத்தில் பண்டிதரின் தீர்மானங்கள்

கடந்த வாரம் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. அவையாவன:

- பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் சாகித்திய மண்டல மசோதாவில் சிங்கள இலக்கியத்திற்குக் கிடைப்பது போலவே தற்காலத் தமிழ் இலக்கியத்திற்கும் கவிதை, கதை, நாடகம், மொழி பெயர்ப்பு ஆகிய பகுதிகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட வேண்டுமெனத் திருத்தம் செய்தல்.
- யாழ்ப்பாண பெரிய மருத்துவ மனையைப்பல வகைகளிலும் முன்னேற்றஞ் செய்ய வேண்டுமென்றும், இம் முன்னேற்றத்தைக் கவனிப்பதற்கும், ஆலோசனைகள் வழங்குவதற்கும் வட பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டும். இம்மருத்துவ மனையின் முன்னேற்றத்தைக் கவனிக்கும் பொறுப்பு தனியொரு பிரதிநிதியிடம் இல்லாது சகல வடபகுதி எம். பி. களுக்கும் வசதி ஏற்படுத்துதல்.
- கூட்டுறவுகளிலும், அரசாங்கத் துறைகளிலும்

(9-ம் பக்கம் பார்க்க)

# இனத்தின் உரிமைக்காக உயிரை அர்ப்பணித்தார்

## அமரர் நினைவுக் கூட்டத்தில் சா. ஜே. வே. விளக்கம்

"வன்னியசிங்கம் தமிழ் பேசுமினத்தின் உரிமைகளுக்காகத் தன் உயிரை அர்ப்பணித்தார். எம்மிடையை நிலவும் சாதிப் பூசல்களை நீக்குவதற்கு வாழ்நாள் முழுதும் அயராது உழைத்தார். அவர் இருந்தால் சாதிக் கொடுமைகள் தீர்ந்திருக்கும். தமிழரசுக்கட்சி தோன்றி வளரவும் காரணமானவர் வன்னியசிங்கமேயாகும். அவரின் தியாகமே எமக்கு ஆறுதலையளித்துள்ளது."

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள்



திரு. அ. அமிர்தலிங்கம்

மாவிட்டபுரத்தில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் விழாவிற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் திரு. சு. நடராசா பேசுகையில் கூறியதாவது:-

'இந்நாட்டு மக்களின் சுதந்திரத்தைக் காப்பதென்ற அடிப்படையிலும், தமிழரசுக்கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதென்ற அடிப்படையிலும் தேசிய அரசாங்கத்தை ஆக்கினோம். நமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுது வட-கிழ் மாகாணங்களில் சிங்களத்தைக் கற்பிக்கக் கல்வி அமைச்சர் கொண்ட முடிவை மாற்றுது விட்டால், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு அவரே பொறுப்பாவர். உரிமை கிடைக்காதவரை சிங்களம் படிப்பிக்க விடோம்' என்றார்.

திரு. க. பொ. இரத்தினம் பா. உ. பேசியதாவது:-

'சிங்களம் [illegible] வருமானால் தமிழன் தன் [illegible] மான வாழ்வுக்காகத் தமிழ



திரு. கா. பொ. இரத்தினம்

ரசு வேண்டும் என வாதாடியவர் வன்னியசிங்கமே. காந்தி அடிகள் இந்தியாவில் சுதந்திர உணர்ச்சியைத் தட்டியெழுப்பியது போல இலங்கையிலும் தமிழினம், உரிமைகளுக்காக உயிரையுங் கொடுப்போம் என்ற புத்துணர்வை ஏற்படுத்தியவர் அவரே.

சிங்கள மக்களிடம் உள்ள மொழி, இனப்பற்று தமிழரிடம் இல்லாதது கவலை தருவதாகும். தாய் மொழியிலேயே நாம் தொடர்பு கொள்ள வேண்டியது அவசியமாகும். அப்பொழுது தான் தமிழ் மொழிக்குரிய இடம் கிடைக்கும். இந்த நாட்டில் சமஷ்டி ஏற்பட்டாலொழியத் தமிழினம் நிரந்தர உரிமைகளுடன் வாழ முடியாது. என்ன துன்பம் வரினும் சமஷ்டிக் கொள்கையைக் கைவிடோம். வன்னியர் வாய் மொழியும் அஃதேயாம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையர் சங்கம்

## கருத்துமேடை

# ஒழுங்கும் ஒழுக்கமும் உயர்ந்தோங்க வேண்டும்

—செல்வி ஆனந்தி அன்பரசன்—

### கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா? [12]

அந்நிய ஆதிக்கம் எம் நாட்டிற்கு வந்த போது அடிமை வாழ்வுமேற் கொள்ளப்பட்டது. இதனால் ஒரு சிலர் லாபமடைந்தார்கள். எண்ணற்ற மக்கள் கல்வியை கற்க முடியாது தவித்தார்கள். மத அடிப்படையில் மட்டும் கல்வி வளர்ந்தது. பெரும்பாலான மக்கள் கல்வி பெற வாய்ப்புக் கிடைக்கவில்லை.

சுதந்திரம் கிடைத்த பின்னர் இலவசக் கல்வி நடைமுறைக்கு வந்தது. நாட்டின் முன்னேற்றம் மக்கள்கையில் இருந்ததால் மக்கள் ஓரளவு பாகுபாடின்றி, வேற்றுமையின்றி கல்வி பெற வாய்ப்பு ஏற்பட்டது.

கல்வியில் முன்னேற வேண்டுமென்ற ஒரே ஆர்வம் ஒவ்வொருவரிடமும் தலையெடுத்ததனால் கல்வியில் நாட்டம் அதிகரித்ததே தவிர சூழலில் நாட்டம் செல்லவில்லை. கல்வி விருத்தி அரசாங்க உத்தியோகங்களோடு தொடர்புபட்டு அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்ததுடன் எண்ணிறந்த மாணவர்கள் உயர் கல்வியில் நாட்டம் செலுத்தாது சூழலில் கவனம் செலுத்தினர்.

#### ஆண்களின் வீழ்ச்சி

இலவசக் கல்வி நடைமுறைக்கு வந்ததன் பின்னர் பொதுப்பரீட்சையில் 60 சதவீதமான பெண்கள் சித்தி எய்துகிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆரம்பகாலக் கல்வியின் போது, 90 சதவிகிதமான ஆண்கள் சித்திசெய்தி, தற்பொழுது அதன் தொகை வீழ்ச்சியடைந்தமைக்கு மூல காரணம் யாது என்று கல்வி அமைச்சும் அதன் குழுவும் ஆராய்ந்தபோது, கூட்டுக் கல்வியைத் தவிர வேறொரு காரணங்களையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு இருபாலாருடைய பங்கும் அவசியம் தான்.. ஆனால் அந்நாட்டின் உயர்ச்சிக்கு அதிக முக்கியமானவர் ஆண்களென்று அறிய முடிகின்றது. இந்நிலையில் ஆண்களின் கல்வி இயற்கைச் சூழலால் பாதிக்கப்படுகிறதென்பதை அறிய முடிகிறது. கூட்டுக் கல்வியற்ற முறையில் இயங்கும் பாடசாலைகளில் கல்வியின் தரம் ஓரளவு உயர்ந்திருப்பதையும் நன்கறிய முடிகின்றது.

#### ஆசிரியர்களின் நிலை

சமூகத்தின் உயர்ச்சி ஆண் பெண்ணோடுதொடர்புபட்டு இருப்பதனால் ஒழுக்கமோடு வாழ்க்கையையும் அளிக்கவல்ல ஒரு சிறந்த கலைச்சாலையாக கூட்டுக்கல்வி நிலையங்கள் இயங்கிவந்தன. ஆசிரியர்களின் கட்டளைக்கு செவிமடுக்க வேண்டிய நிலை அன்று இருந்ததினால் உயர் நிலை பெற்றது. ஆனால் இன்றோ மாணவ மாணவிகளின் மகாநாடுகள், ஆசிரியர்கள் அடக்கு முறையைப் பிரயோகிக்கக் கூடாதென்று வற்புறுத்துவதால், கட்டுப்பாடுகள் தளர்ந்து போய் விடுகின்றன. இக்காரணமே கூட்டுக்கல்வியைதகர்பதற்குரிய வழிக்காரணம் என்று கூறினாலும் பொருந்தும். ஆசிரிய ஆசிரியைகளும் முன்னிருந்த மனப்பான்மையை மறந்தனர். 'கடமைக்காக நாம்' என்பது நீங்கி, 'எமக்காகக் கடமை' என்று வழி நடக்கத்தலைப்பட்டனர்.

தலைமை ஆசிரியர் ஒருவருக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலை இன்று அத்தியாவசியமற்றுப்போய் விட்டது. இவைதாம் இரு இனத்திடையேயும் வளரவிருக்கின்ற நேசமனப் பான்மையை தகர்த்துவிட்டு குரோதமும் குதர்க்கமும் தோன்ற வைக்கிறது.

இன்றைய நிலையில் இலங்கையில் கூட்டுக்கல்வி உதவாது. தான்கெடுவதுமன்றி தக்காரையும் கெடவைத்தலைப்போன்று நடைமுறை உள்ளது. கூட்டுக் கல்வி எல்லா நிலையங்களிலும் மாணவ மாணவிகளின் பாலுணர்ச்சியைக் கூட்டுவது மல்லாமல் கல்வியில் சிரத்தையின்மைக்கும் தூண்டு கோலாகின்றது. ஆசிரிய ஆசிரியைகளுக்கு மாணவ மாணவியர் பண்டைக் காலத்தைப்போல் பயந்து, கட்டுப்பட்டு, ஒழுங்கையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்கமுன்வரவாய்ப்பில்லாவிட்டால், நன்மைகள் சில விருப்பினும், தீமையே கூட்டுக் கல்வி முறையினால் அதிகரிக்கும். கல்வி அமைச்சும், கற்றுணர்ந்த பெரியோர்களும் எதிர்கால சமுதாயத்துக்கு ஏற்ற வழியினைத் தேடுவார்களாக.

# நவராத்திரி-தத்துவ விளக்கம்

## சக்தி வழிபாடு

நவராத்திரி விரதம் ஆரம்பமாகிறது என்றவுடனே தமிழ்ப் பெண்களுக்கும் சிறுர்களுக்கும் ஆனந்தமும் குதூகலமும் ஆரம்பமாகி விடும். ஆலயங்களிலே விசேட பூசைகள் நடைபெற்றாலும் இல்லங்களிலே நிகழும் பூசைகள் குதூகலமாக நடைபெறும்.

இலங்கையைப் பார்க்கிலும் இந்தியாவில்—தமிழகத்தில் நவராத்திரி நோன்பு மிகவும் சிறப்பாக நடைபெறுவதுண்டு. இல்லங்கள் தோறும் பொம்மைக் கொலு வைத்து குடும்பத் தலைவியர் விழாவெடுப்பர். மாலை வேளைகளில் அயலிலுள்ள குழந்தைகள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து, ஆடிப் பாடி ஆனந்திப்பர். சுமங்கலிகள் சுறுசுறுப்புடன் மங்கலச் சின்னங்களுடன் மகிழ்ந்திருப்பர்.

எமது நாட்டிலே இப்பொழுது தான் நவராத்திரி நோன்பின் சிறப்பியல்புகள் ஓரளவு தோன்ற ஆரம்பித்து வருகின்றன. ஆலயங்களில் நடைபெறும் பூசைகளுடன் மட்டும் நில்லாது சக்திபூசை வீடுகள் தோறும் நடைபெறுவதைக் காண்கிறேம்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது சக்தி. சக்தியின் தோற்றங்களோ அனந்தம். சக்தியை இயக்கம் என்றே பொதுவாகக் கூறலாம். எந்தப் பொருளுக்கும் இயக்க சக்தி உண்டென்பது விஞ்ஞானத்தின் முடிவு.

#### ஆன்மாவின் இயக்கம்

இன்று விஞ்ஞானம் கூறும் இயக்க சக்தியை முன்னளில் தமிழர்கள்—குறிப்பாகச் சைவர்கள்—பேணி போற்றி வந்தனர் என்பதற்கு இன்று நாட்டில் நடைபெறும் சக்தி வழிபாடே சான்று பகர்கின்றது. ஆன்மாவின் இயக்கமே சக்தி என மதம் கூறுகிறது. இறையை ஆன்மாவுடன் இணைத்து, அதன் இயக்கத்தைச் சக்தியாகக் கற்பித்து சிவசக்தி வழிபாட்டை பண்டைய தமிழகம் கண்டது.

ஆன்மாவின் இயக்கம் பல தொழில்களை இயக்குகிறது. சடப் பொருட்கள், அசையும் பொருட்கள், உயிருள்ள உயிரற்ற சகலத்துக்கும் ஏதோ ஒருவகைச் செயல் உண்டு என்று அந்நாளிலேயே சைவநெறி காண்பித்தது. இந்நாளைய விஞ்ஞான—அறிவியல் ஆராய்ச்சி முடிவுகளும் இதனை மெய்ப்பிக்கின்றன.

இயக்க சக்திகளை பண்டைய மனிதன் ஒன்பது வகையாக வகுத்தான். அவற்றின் ஒரு பகுதியே கலைகளின் வளர்ச்சியாகும்.

ஆன்மாவை ஆண்மையின் சின்னமான சிவமாக்கி, ஆன்மாவின் இயக்கத்தை அன்னை பராசக்தியாக்கி அன்று வாழ்ந்த மனிதன் தந்தான். அரும் பெரும் உண்மை பொதிந்த இந்தத் தத்துவத்தை இன்றுதான் அனைத்துலகமும் ஏற்கக் காண்கிறேம்.

அன்னை பராசக்தியின் ஒன்பது செயற்பாடுகளை விளக்கும் பேருண்மை நிறைந்த வரலாறே நவராத்திரியின் இரகசியமாகும். விஞ்ஞான ரீதியாக விளக்கப்படத்தக்க இந்தத் தத்துவத்தை தமிழர்கள்--குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் பேணிப் பாது காத்துப் போற்றி வளர்க்கக் கடமைப் பட்டவர்களே.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் பராசக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

'உமா'

# மாலை சூடிய மங்கைக்கு மாற்றான் நினைவு?

**செல்வி அக்காவிடம் சில கேள்விகள்**

கேள்வி 1.

எனது மாமன் மகனையே எனக்குக் கலியாணம் செய்து தருவதாக ஆதியிலிருந்தே கூறிவந்த என்பெற்றோர் இன்று வேறு ஒருவரை எனக்கு கலியாணம் செய்து வைத்துவிட்டார்கள். எனது அத்தானிடம் இளமையிலேயே மனதைப்பறி கொடுத்துவிட்டேன். இன்று கணவரிடம் உண்மையிலேயே என்மனம் விருப்பம் கொள்ளவில்லை. என் கணவரும் சதா குடித்துவிட்டு என்னைத் துன்புறுத்துகிறார். எனது கஷ்டங்கள் நீங்க வழி கூறுவீர்களா?

.....................

திருக்கோணமலை.

இளமையில் ஆயிரம் எண்ணங்கள் அலைமோதலாம். ஆனால் மணமான பின் மங்கைக்கு மாங்கல்யம் அணிவித்தவனே தெய்வம். இதுவே தமிழர் பண்பாடு. சிரமப்பட்டு மனதைக் கட்டுப்படுத்தி உங்கள்கணவரிடமே பக்தி செலுத்துங்கள். 'இன்று அடிக்கும் கரமே நாளை அணைக்கும்'—அந்த இன்ப நாள் எப்போதாவது வந்தேதீரும் என்ற நம்பிக்கையைத் தளர்த்திவிடாமல், மனம் கோணமல் உங்கள் மணவாளனுக்குப் பணிவிடை செய்யுங்கள். உங்கள் பதிசேவையே உங்கள் கணவனை மனம்மாற வைத்து, அவரை நல்வழிப் படுத்தும்.

கேள்வி 2.

### 'அவரி'டம் கூறுவதெப்படி?

எனது அண்ணனுடன் எனது வீட்டுக்கு அடிக்கடி வரும் ஒரு வாலிபரிடம் எனக்குக் காதல் ஏற்பட்டு விட்டது. அவருடைய எண்ணத்தை அறிய முடியவில்லை. எனது அக்கா தங்கைகளுடன் பழகுவதுபோலவே என்னுடனும் அவர்பழகிறார் அவருடைய கருத்தை அறிய வழிஉண்டா?

செல்வி...........
மானிப்பாய்.

உங்கள் வினவுக்கு இப் பத்திகளில் விடை அளிப்பது மிகவும் சிரமமானதாகும். மேலும் உங்கள் கருத்தை 'அவரி'டம் வெளிப்படுத்துவதற்கேற்ற வழியை வேறொருவர் எடுத்துக் கூறுவதும் பொருந்தாது, 'அவரை' தனியே காணும் சந்தர்ப்பங்களில் உங்கள் கருத்தை 'அவ'ருக்கு பக்குவமாக வெளிப்படுத்திக் காட்டிப் பாருங்கள்.

கேள்வி 8.

### கருச்சிதைவு ஏற்படாமல்......

எனக்கு மணமாகி ஆறு வருடங்களாகின்றன;

(9-ம் பக்கம் பார்க்க)

# நீங்களும்.... ........நானும்

சகோதரிகளே!

'கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா?' என்ற கருத்து மேடையில், சாதக பாதகமான கருத்துக்களை, 12 சகோதரிகள் பரிமாறக் கண்டீர்கள். இன்னும் ஏராளமான சகோதரிகள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பியுள்ளனர். ஆனால் அவை யாவற்றையும் தொடர்ந்து வெளியிட முடியாதிருக்கிறது. இதற்காக சகோதரிகள் பொறுத்தருள வேண்டும்.

'குடும்பக்கலை சம்பந்தமான பாடங்கள் கல்வி நிலையங்களில் எவ்வளவு தூரம் பயிற்றப்படலாம்' என்பதனையிட்டு உங்களுடைய ஆலோசனைகளைத் திரட்ட ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த எண்ணியுள்ளோம். இதற்கிடையில் எமது சகோதரிகள் வேறோர் துறைக்கு, நம் கருத்தைத் திருப்பியுள்ளனர்;

பெண்மணிகளின் மானத்தைப் பறிக்கும் வகையில் மேலை நாட்டுச் சினிமாப் படங்கள் இப்பொழுது இந் நாட்டில் மிக வேகமாகப் பரவி வருவதைக் காண்கிறேம். 'இப் படங்களும், இவற்றுக்காகச் செய்யப்படும் விளம்பரங்களும் நமது சமுதாயத்தை எந்த வகையில் பாதிக்கின்றன; அல்லது பாதிக்கவில்லை'—என்ற பொருளில் ஒரு கருத்தரங்கத்தை நடாத்தக் கருதியுள்ளோம்.

"ஆபாச சினிமா ஆபத்தானதா" என்ற தலைப்புடனேயே இக் கருத்து மேடையைத் தொடங்குவோம்.

17-10-65-ல் முதலாவது கருத்துமேடைக் கட்டுரை இடம் பெறும். எங்கே உங்கள் கருத்துக்களை மோதவிடுங்கள் பார்க்கலாம்;

கருத்துமேடைக்குரிய கட்டுரைகளை அனுப்பும் போது 'கருத்துமேடை' என்று கடித உறையில் குறிப்பிட மறக்க வேண்டாம்.

—செல்வி அக்கா.

**சில கேள்விகள்**
செல்வி அக்கா,
**சுதந்திரன்**
த. பெ. எண் 1183
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ. ஜீ. அடகுவைத்த உரிமைகளை மீட்பதே திருச்செல்வத்தின் வேலை

—————o—————

## அமரர் நினைவு விழாவில் அமிர்தலிங்கம் விளக்கம்

நிகழ்ச்சிகளை மட்டும் கொண்டு நிகழ்ச்சிகளின் தாக்கத்தைக் கணித்துவிட முடியாது. குடிபோதையில் வழிதவறிக் கிணற்றில் விழுந்த ஒருவனும், கிணற்றில் விழுந்த குழந்தையைக் காப்பாற்றக் கிணற்றில் குதித்த ஒருவனும் சமமாக முடியுமா? அன்று திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பதவியென்ற வெறியின் காரணமாக அமைச்சரானர். இன்று தமிழினத்தின் இழந்த உரிமைகளை மீட்டு வருவதற்காக திரு. மு. திருச்செல்வம் அமைச்சரவையில் சேர்ந்தார். இதையுணராத சில அரசியல் வாதிகள் அன்று நாம் செய்ததையே இன்று தமிழரசுக் கட்சியினரும் செய்கிறார்கள் என்று கூறுவது நிலைமையைப் புரிந்து கொள்ள முடியாத பொருந்தாக் கூற்ருகும்' என்று வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் கோண்டாவிலில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாவில் பேசுகையில் கூறினர்.

அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த 17ம் திகதி முதல் நடைபெற்றுவருகின்றன. கோண்டாவில், கொக்குவில் மக்கள் அமரருக்கு கடந்த 19 ம் திகதி பெரியளவில் விழா எடுத்தார்கள். 19ம் திகதி காலை கோண்டாவிலில் அமரர் நினைவாக அன்னதானம் வழங்கப்பட்டது. அன்று பிற்பகல் ராமகிருஷ்ணஸ் அதிபர் திரு. வேலாயுதபிள்ளை அவர்களாலும் ஏனையவர்களாலும் அன்பளிப்புச் செய்யப்பட்ட இனிப்புப் போட்டலங்களை திருவாட்டி கோமதி வன்னியசிங்கம் கொக்குவில் கிழக்கிலும்-மேற்கிலும் குழந்தைகளுக்கு வழங்கினர்.

டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் பிற்பகல் நாலு மணிக்கு கொக்குவிலில் இருந்து புறப்பட்ட ஊர்வலம் கோண்டாவிலுள்ள கூட்ட மைதானத்தை சென்றடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகியது. பண்டிதர் இராசையா வரவேற்புரை நிகழ்த்தினர்.

### தமிழரசுத் தந்தை பேச்சு

தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

'சிறுவயதிலிருந்தே திரு. வன்னியசிங்கம் அவர்களை எனக்குத் தெரியும். அவரின் குடும்பம் சிறப்பும், புகழும் பெற்ற குடும்பம். அவர் தனது சட்டத்தொழிற் பயிற்சியை என்னிடமே பெற்ருர். அப்பொழுதே அவரிடம் திறமையிருந்ததை நான் உணர்ந்து கொண்டேன்.

அவர் அரசியலில் ஈடுபட்ட பின்னர் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. இவற்றையெல்லாம் சிரித்த முகத்துடன் "நான் இனத்திற்காகச் செய்யும் கடமை 'என்று கூறிக்கொண்டு ஏற்றுள்ளார். அவர் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்கப்பாடுபட்டார். அவரின் நினைவு நாளை சமூக ஏற்றத் தாழ்வு ஒழிப்பு வாரமாக அமைத்தது எல்லா வகையிலும் பொருத்தமான ஒன்ருகும்.'

### திரு. திருச்செல்வத்தின் வேலை என்ன?

இக்கூட்டத்தில் தொடர்ந்து திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

'அமரர் வன்னியசிங்கம் செந்நீரும், கண்ணீரும் விட்டு வளத்த இயக்கம் தமிழரசுக் கட்சி. தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கும், தமிழினத்தின் விடுதலைக்கும் தன் வாழ்வை அர்ப்பணித்த நம்காலத்திய மாபெரும் தியாகி அமரர் வன்னியசிங்கம்.

பழமையின் பிடியிலும், சாதிக் கட்டுப்பாட்டின் உயர்விலும் பிறந்த அமரர் வன்னியசிங்கம் சாதிக் கொடுமையை இல்லாதொழிப்பதற்காக செய்த புரட்சிகள் நம் காலத்தில் யாருமே எண்ணிப்பார்க்க முடியாத ஒன்று. தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பிடக் கூடிய தொகையினர் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்வது தமிழினத்திற்கு இழுக்கு என்பதை வலியுறுத்தி வாதிட்ட பெரியார். இந்த இழிவு நிலை மாருதவரை இனத்திற்கு விடுதலை இல்லை என்பதை அணித்தரமாக எடுத்துரைத்தார் திரு. வன்னியசிங்கம்.

தமிழினத்தின் மத்தியில் உள்ள எட்டப்பர்களையும், காக்கைவன்னியர்களையும் சாடி அவர்களின் அரசியல் ஆதிக்கத்தை வேரறுத்த பெருமையும் அமரர் வன்னியசிங்கத்திற்கு உண்டு. தமிழினத்தின் வாழ்வுக்கு எத்தகைய நடவடிக்கைகளையும் துணிவுடன் செய்து அதனுல் ஏற்படக்கூடிய இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் மலர்ந்த முகத்துடன் தாங்கிக் கொண்டார்.

இன்றைய சூழலில் அமரர் வன்னியசிங்கம வாழ்ந்தால் தமிழினத்தின் நிலை மேலும் சிறந்திருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இன்று திரு. திருச்செல்வம் அமைச்சர் பதவியேற்றிப்பது பற்றி திரு. பொன்னம்பலமும் அவர் 'திருக்கூட்டத்தினரும்', தங்களின் அன்றைய வழியை இன்று நாம் பின்பற்றுவதாகக் கூறித் திரிகிருர்களாம். அன்று திரு. பொன்னம்பலம் பதவி வெறியின் காரணமாக தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அடகுவைத்து, இனத்தின் ஒரு பகுதி மக்களை முடமாக்கிவிட்டு அதற்குச் சன்மானமாகப்பதவியைப்பெற்ருர். அன்று திரு. பொன்னம்பலம் அடகுவைத்த தமிழினத்தின் உரிமைகளைத் தேடியெடுப்பதற்காகஇன்று திரு. திருச்செல்வம் அமைச்சர் பதவியை ஏற்றுள்ளார். இதை நன்கு உணர்ந்த திரு. பொன்னம்பலமும் அவர் 'திருகூட்டத்தினரும்' தங்கள் தவற்றை மறைப்பதற்கா இப்படிக் கூறித்திரிகிருர்கள் என்பதை மறுக்க முடியாது. குடிபோதையில் கிணற்றில் விழுந்த ஒருவன் குழந்தையைக் காப்பாற்றுவதற்காகக் கிணற்றில் குதித்தவனின் செயலுடன் ஒப்பிட்டுக் கூறுவது போல் இருக்கிறது பொ. கட்சியினரின் பேச்சு!

### உண்மை வீரன்

அடுத்து பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

'மதத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பில்லையென்று வாதிட சிலர் முற்பட்டிருக்கிருர்கள். இக்கருத்தைக் கூறுபவர்கள் பேராசிரியர்கள் என்பதை அறிய வெட்கமாக இருக்கிறது. மதவளர்ச்சிக்கு முதலில் அரசியல் விடுதலை வேண்டும். இந்த உண்மையை அமரர் வன்னியசிங்கம் தெளிவாக சொல் மூலமும், சம்பவங்கள் மூலமும் அவர் காலத்தில் எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் சுதந்திரம் பெருதவரையில் அவர்கள் கடைப்பிடிக்கும் எந்த மதக்கோட்பாடும் செழிப்புற முடியாது, கடந்த ஆட்சியாளர் காலத்தில் பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மதங்களின் வளர்ச்சி எங்ஙனம் தடைப்பட்டிருந்தது என்பதை நாம் நேரில் கண்டுள்ளோம். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள ஒரு அரசியற் குழுவினரும், ஒரு சில பேராசிரியர்களும் எம் மத்தியில் மதவேறுபாட்டை ஏற்படுத்த முயலுகிருர்கள். ஆனல் பெரும்பான்மை மக்களின் மதத்திஞல் ஆபத்து வரும் பொழுது இவர்கள் கண மூடி மௌனியாகி விட்டார்கள் என்பதை வேட்கத்துடனும் வேதனையுடனும் கூறவேண்டியுள்ளது.

ஆபத்தை எதிர்கொண்டு முறியடிப்பவனே உண்மையான வீரன். இந்தவகையில் அண்ணல் வன்னியசிங்கம் முதன்மையானவர் என்பதை நாம் பெருமையுடன் நினைவு கொண்டு அவர் வழி நிற்போம்.'

### மாபெரும் புரட்சியாளர்

அடுத்து திருவாட்டி அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

'அமரர் வன்னியசிங்கம் இந்நூற்ருண்டில் இந்நாட்டில் வாழந்த தீவிர புரட்சியாளரும் மாபெரும் தியாகியும் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவரின் தியாக மனப்பான்மைக்கும் புரட்சியான போக்கிற்கும் பல வழிகளிலும் துணையாக நின்ருர் அவரது துணைவியார். என்னைத் தீவிர அரசியலில் ஈடுபடச் செய்த பெருமை திருவாட்டி கோமதி வன்னியசிங்கத்திற்கு உண்டு. அவரே எனது அரசியல் வழிகாட்டி என்பதைப் பெருமையுடன்நான் கூறிக்கொள்கிறேன்.'

### எட்டப்பர் துடுக்கடக்கினர்

டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பேசுகையில் கூறியவது:

அமரர் வன்னியசிங்கத்தின் பாராளுமன்றக் காலம் பாராளுமன்ற வரலாற்றில் தனியிடம் பெற்றதாகும். எந்தச்சிக்கலான விடயத்தையும் எழிமையான முறையில் சிறப்புடன் ஆராயும திறன் அவரிடம் இயற்கையாக அமைந்திருந்தது. தமிழினத்தின் எதிரிகள் எப்பக்கம் இருந்தாலும் அவர்களைச் சாடி அவர்களை வாயடைக்க வைத்த பெருமை அமரர் வன்னியசிங்கத்திற்கு உண்டு.'

திருவாளர்கள் நா. அருணசலம், ஆலாலசுந்தரம் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்கள்.

---

## அண்ணல் அடி சேந்தார்க்கு

இந்திய மக்களின் சுதந்திர—உணர்ச்சியைத் தட்டி எழுப்பி — அடிமை விலங்கைத தகர்த்தெறிந்த வீரர்— அரசியல் மேதை— படித்த பட்டம் பெற்ற அறிவுச்சுடர் – இந்திய நாட்டின் இணையில்லாத் தந்தை, கடமை வாழ்வு நடத்துவோரின் கலங்கரை விளக்கம். இவ்வாறெல்லாம் உலகம் போற்றும் உத்தமராக விளங்கிய அண்ணல் காந்தி-அடிகளின் வாழ்க்கை வரலாற்றை அறியாத மக்கள் எவரும் இல்லை யென்றுதான் குறிப்பிடவேண்டும்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக — அஃதிலார் தோன்ருமை நன்று' என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க உலகில் தோன்றிப் பெரும் புகழ் பெற்ற காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாறு உலகத்துக்கே சிறந்ததோர் வழிகாட்டியாகும்.

போர்பந்தலில் 1859-ம் ஆண்டு பிறந்த அண்ணல் 1888-ம் ஆண்டு இங்கிலாந்து சென்று பரிஸ்டரானர். 1891-ம் ஆண்டு தாயகம் மீண்ட காந்தி அடிகளை தென்ஞபிரிக்கா எதிர்[illegible] ழைத்தது. வழக்கறிஞராகத் தென்ஞபிரிக்கா [illegible] விடுதலை வீரஞக மாறினர். நாட்டுவிடுதலைக்கான ஆரம்பகளத்தை தென்ஞபிரிக் காவிலேயே உருவாக்கினர் என்ருல் தவருகாது.

தென்ஞபிரிக்கவிசயத்தின் பின்னரே மாத்மாவின் பணி மக்கள் அரங்கிற்குத் தெரிய வந்தது. அறத்தின் மேன்மை

**பூ. கணேசமூர்த்தி**

யை அகிம்சையின் சிறப்பை தென்ஞபிரிக்கா அவருக்கு உணர்த்தியது.

### தென்ஞபிரிக்காவில்

சத்:- உண்மை, ஆக்கிரகம், உறுதி; ஆகவே சத்தியாக்கிரகம் என்ருல் உண்மைக்காக உறுதியுடன் போராடல் எனப்படும்.

நேர்மைக்கு மேன்மை உண்டு, உண்மைக்கு உயர்வு உண்டு, என்ற கருத்துக்கு உட்பட மாத்மா காந்தி 'டிரான்வாஸ்' அரசியலார் ஆசியப் பதிவுச் சட்டத்தை நிறைவேற்ற முயற்சித்த போது அச்சட்டத்தை எதிர்த்தார். எதிர்ப்பு அவ[illegible] உண்மைக்காக உறுதியுடன் போராடும் சத்தியாக்கிரக



இயக்கத்தின் மூலம் அச்சட்டத்தை எதிர்த்தார். அரசியலார் அவரையும் இன்னும் சிலரையும் கைது செய்தனர். கர்வம் கொண்ட ஆட்சியாளர் அண்ணலுக்கு இரண்டு திங்கள் சிறைத்தண்டனை விதித்தனர். சிறைத்தண்டனையை விருப்புடன் ஏற்று சிறைக் கைதிகளோடு ஒருவராக அண்ணலும் சென்ருர்.

### மக்கள் விட்டார்களா?

சிலர் அண்ணலோடு கைதிகளாகச் சென்ருர்கள். இன்னும் பலர் அறப்போரில் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்ஞர்கள்.

சிறைச்சாலையைத் தவச்சாலையாக எண்ணினர் காந்தியடிகள். தவச்சாலையில் இருக்கின்ற நேரத்திலே டிரான்ஸ்வால் அரசியலில் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவர் அண்ணலைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். சட்டத்தை மாற்றுவதாகக் கூறி அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு சிறச்சாலை அதிகாரிகளிடம் கட்டளையிட்டார்.

இன்னும் பல பிரச்சனைகளைச் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் மூலம் வெற்றியை ஈட்டிபலவகைத் துன்பங்கள் மத்தியில் வாழ்ந்த மக்களை துன்பத்தில் வைத்துக் காப்பாற்றினர்.

### பாரதநாட்டில்

சௌரி— சௌரா என்னுமிடத்தில் பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று நடந்தது. அந்த ஊர்வலத்தைப்போலீசார் தடுத்தனர். பொலீசாருக்கும் மக்களுக்குமிடையே பெரும் போர் மூண்டது. போரிலே பலர் மரண்டனர்.

[14-ம் பக்கம் பார்க்க]

## தோல்வியே இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஒக்டோபர் மாதம் 3-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# வேலை நிறுத்தம்

தேசிய அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் தோன்றிய முதலாவது பெரிய வேலை நிறுத்தமே இவ்வாரம் நடைபெற்ற தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம். இது சமரசமாகத் தீர்க்கப்பட்டது எனினும் அதன் படிப்பினையை நாம் மறந்துவிடக்கூடாது.

இடமாற்றத்தை எதிர்த்தே வேலை நிறுத்தம் நடைபெற்றது. இடமாற்றம் கூட்டரசாங்கத்தின் திட்டம்- தொழிற் சங்கங்களையும் கலந்தாலோசிக்கப்பட்ட ஒரு விடயம். தபால் சிப்பந்திகளைப் பொறுத்தவரையில் அது ஒரு வலுவான கோரிக்கையன்று-அதற்காக வேலை நிறுத்தம் செய்ய வேண்டியதுமில்லை. ஆகவே வரப்போகும் ஒரு பொது வேலை நிறுத்தத்துக்கு ஓர் ஒத்திகையாக இந்த வேலை நிறுத்தத்தை நடத்தியிருக்கக் கூடும்.

'பென்டிஸ்' தகராறில் துறைமுகத்தில் ஒரு வேலை நிறுத்தத்தைத் தொடங்கி, பின்னர் 12-அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் அதனை இ. போ. ச. வுக்கும் இதர பகுதிகளுக்கும் விஸ்தரித்து ஒரு பொது வேலை நிறுத்தத்தை நடத்துவதென எதிர்க்கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தொழிற் சங்கக் கூட்டுக் கமிட்டி முடிவு செய்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இதன் ஒத்திகையே தபால் ஊழியர் வேலை நிறுத்தம். எனவே அரசாங்கம் இறுதி எச்சரிக்கை விடுத்ததாலும் உறுதியாக நின்றதாலும் ஊழியர்கள் வேலைக்குத் திரும்புகின்றனர் என்று சில பத்திரிகைகள் தவறுதலாகக் கூறுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

'பென்டிஸ்' பிரச்சினையைச் சூடேற்றுவதற்காக துறைமுகத் தொழிலாளரின் பொதுக் கூட்டமொன்றை இடதுசாரிகள் இவ்வாரம் நடத்துகின்றனர். துறைமுகத்தில் சலசலப்பை ஏற்படுத்தும் முயற்சிக்கும் தபால் ஊழியர்களின் இடமாற்ற அமுலை அக்டோபர் 15ந் திகதிக்கு ஒத்தி வைத்ததற்கும் தொடர்பு உண்டா? துறைமுகத்திலிருந்து ஆரம்பமாகி வியாபிக்கும் ஒரு பொது வேலை நிறுத்தத்தில் பங்கு பற்ற தபால் சிப்பந்திகளுக்கு இது வாய்ப்பு அளிக்கிறதல்லவா?

தேசிய அரசாங்கம் ஆட்சி பீடமேறியதும் எதிர்க்கட்சியினர் ஒரு பெரிய வேலை நிறுத்தம் செய்வார்களென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஒன்றும் நடைபெறவில்லை. இதற்கு இரு காரணங்கள் உண்டு.

(1) துறைமுகம் போன்ற இடங்களில் நடைபெறும் வேலை நிறுத்தம்தான் சாமான் விலைவாசிகள் உயர்வுக்குக் காரணம் என்று அரசாங்கம் எதிர்க்கட்சிகளைச் சாடினால் அதனை மக்கள் நம்புவார்கள். இனிமேல் வேலை நிறுத்தம் செய்தால் அத்தகைய பிரசாரத்தை மக்கள் நம்பமாட்டார்கள். ஏனெனில், ஆறுமாதங்களாக வேலை நிறுத்தங்களில்லாதிருந்தும்— துறைமுகத்தில் திறமையாக வேலைகள் நடைபெற்றும் விலைவாசிகளை அரசாங்கத்தால் குறைக்க முடியவில்லையே! விலைவாசி உயர்வுக்கும் வேலை நிறுத்தங்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை எடுத்துக்காட்டவே அரை ஆண்டுகளுக்கு வேலை நிறுத்தங்களை எதிர்க்கட்சிகள் ஒத்திப் போட்டன.

(2) வகுப்புவாதக் கூச்சலைப் பயன்படுத்த இக்கட்சிகள் திட்டமிட்டதால் வேலை நிறுத்தப் பாதையைச் சிலமாதங்களுக்குக் கைவிட்டன. சிங்கள மொழி, கலாசாரம், பௌத்தம் என்பனவற்றின் பாதுகாவலரே தாங்கள் என்பதைப் பாமர சிங்கள மக்களுக்கு எடுத்துக்காட்ட இக்கூச்சல் மார்க்சீயவாதிகளுக்குப் பயன் பெற்றதெனினும், அது சுதந்திரக் கட்சிக்குப் பயன் பெறவில்லை. இதில் ஏமாந்தவர்கள் சுதந்திரக்கட்சியினரே.

இறுதியில் வகுப்புவாதத் தீக்குச் சதா எண்ணெய் வார்த்துக் கொண்டிருக்கும் பொறுப்பைச் சுதந்திரக் கட்சியினரிடமே ஒப்படைத்து விட்டு மார்க்சீயவாதிகள் பழைய பாதைக்குத் திரும்பியுள்ளனர். ஆயினும் வகுப்புவாதத்தைத் தங்களின் சுயநலத்துக்குப் பயன்படுத்தும் நரித் தந்திரத்தை அவர்கள் இன்னும் முற்றாகக் கைவிடவில்லை.

சுதந்திரக் கட்சி வகுப்புவாதப் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்தி அரசாங்கத்துக்கு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், மார்க்சீயவாதிகள் வேலை நிறுத்த ஆயுதத்தைக் கொண்டு மறுபக்கத்தில் தேசிய அரசாங்கத்தைத் தாக்கத் தொடங்கலாம்.

வேலை நிறுத்தங்களால் இந்த அரசாங்கத்தை வீழ்த்திவிட முடியாது. ஆனால் தொல்லைகளை விளைவித்து அதன் திட்டங்களை கவிழ்க்கலாம். அத்துடன் நாட்டிலே ஒரு கொந்தளிப்பான நிலையைத் தோற்றுவித்து, தொழிலாளர்களிடையே அரசாங்க—எதிர்ப்பு உணர்ச்சியையும் போராட்ட மனப்பான்மையையும் ஏற்படுத்தலாம். இதனால் நாட்டிலே அமைதி கெட்டு அரசாங்க நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.

திடீரென ஒரு பொது வேலை நிறுத்தம் பொங்கிவிட முடியாது. தனித்தனி வேலை நிறுத்தங்கள் (பல நாட்கள் நீடிக்காதவை) சில நடத்தி தயாரிப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டபின்னர் பொதுவேலை நிறுத்த மொன்றினை நடத்துவார்கள். ஒவ்வொரு வேலை நிறுத்தத்தின் போதும் குற்றத்தை அரசாங்கத்தின் மீது சுமத்துவதற்கான தொண்டிக் காரணங்களையும் தேடிக்கொள்வார்கள்.

ஆகவே ஒவ்வொரு வேலை நிறுத்தத்திலும் அரசாங்கம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். ஒரு சிறியவேலை நிறுத்தத்தின்போது அரசாங்கம் செய்யும் தவறு ஒருபொதுவேலை நிறுத்தத்தையே, கொண்டுவந்து விடக்கூடும்.

ஒரு வேலை நிறுத்தம் ஏற்பட்டவுடனே சிலபத்திரிகைகள் துள்ளிக்குதித்து அரசாங்கத்தைத் தவறான பாதையிற் செலுத்த முற்படுகின்றன. இது ஒரு ஜனநாயக நாடு—இங்கிருப்பது ஒரு ஜனநாயக சோஷலிஸ அரசாங்கம் என்பதை அப்பத்திரிகைகள் மறந்து விடுகின்றன; அல்லது மறைத்து விடுகின்றன.

இப்பத்திரிகைகளின் பிரசாரத்தை நம்பி அரசாங்கம் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர் விஷயத்தில் மிகக் கடுமையாக நடந்து கொள்ளக் கூடாது. உடனே சட்ட உதவிகளை நாடி ஓடவோ அடக்கு முறைகளை உபயோகிக்கவோ கூடாது. அதனால் தொழிலாளர் வர்க்கத்தினிடையே அதிருப்தி தோன்றும். தேசிய அரசாங்கம் தொழிலாளர்களின் நலன்களுக்கு மாறானது என்ற எண்ணமும் ஏற்படும்.

எனவே சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலமே தொழிற் சச்சரவுகளைத் தீர்க்க அரசாங்கம் முன்வரவேண்டும். அந்நியாயமான தொழிலாளரின் கோரிக்கைகளையும் அரசாங்கம் பெற முடியும். அவ்வேளையிலும் அரசாங்கம் உறுதியானது என்ற எண்ணத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

# மொழி திணைக்களத்தில் சதி

## பகிரங்க விசாரணை வேண்டும்

தமிழ் மொழி மூலம் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில தங்கள் பதவி உயர்வுப் பரீட்சைகளை முதல் முதலாகத் தமிழ் மொழி மூலம் எழுதப் போகிறார்கள். இப்பரீட்சைக்கு முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டியவைகள் நிர்வாகச் சட்டங்கள், நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்கழக விதிகளாகும்.

இவ்விதிகளின் தமிழ் மொழி பெயர்ப்புக்கள் இல்லாத காரணத்தினால், இவற்றை எத்தகைய சன்மானமும் பெறாது மூன்று திங்களுக்குள் மொழி பெயர்த்துத்தருவதாக தமிழ் ஊழியர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளார்கள். தமிழ் ஊழியர்களின் இந்த ஆர்வத்தைக் கண்டு பெருமைப்படும் நேரத்தில் ஒரு திடுக்கிடும் செய்தி கிடைத்திருக்கிறது.

இப்பிரமாணங்கள் அனைத்தும் ஏற்கனவே மொழித் திணைக்களத்தினால் மொழி பெயர்க்கப்பட்டு இருந்தாகவும் ஆனால், மொழித் திணைக்களத்தில் உள்ள சில சிங்கள வெறி பிடித்தவர்கள் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதத்தில் இம்மொழி பெயர்ப்புக்களை அழித்து விட்டார்கள் என்பதே அச்செய்தியாகும்.

### தமிழ் 'ஒழிப்பு' திணைக்களம்

மொழித் திணைக்களம் நீண்ட பல ஆண்டுகளாக சிங்கள வகுப்புவாதிகளின் வேட்டைக்காடாக இருந்து வருவது வாசகர்கள் அறிந்ததே. இத்திணைக்களத்தின் பொறுப்பை டாக்டர் என். டி. விசயசேகரா பொறுப்பேற்ற பின்னர் நடைபெற்ற தமிழ் ஒழிப்புச் சம்பவங்கள் பல. ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு மொழி பெயர்க்கப்பட்ட பல அறிவியல், பொறியியல் நூல்கள் தமிழுக்கு மொழி பெயர்க்கப்படாது தடுக்கப்பட்டன. இப்புத்தகங்களின் பட்டியலையும், அவை மொழி பெயர்க்கப்படாததற்கான காரணத்தையும் கடந்த... பாராளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம் தெளிவுபடுத்தியிருப்பது வாசகர்கள் அறிந்ததே.

இதுவரைமொழிபெயர்ப்பில் நடைபெற்று வந்த மோசடி இன்று மொழி பெயர்க்கப்பட்டவைகளுக்கே நடைபெற்றுவிட்டன. நிர்வாகச் சட்டம், நிதிப்பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்கழக விதிகள் ஆகியவற்றை திருவாளர்கள் ஏ. கே. சுப்பிரமணியம், எஸ். சரவணமுத்து ஆகிய இருவரும் மொழி பெயர்த்ததாகவும், அம்மொழி பெயர்ப்புக்கள் திருவாளர்கள் க. கணபதிப்பிள்ளை, எம். குமாரகுலசிங்கம், எஸ். நடராசா ஆகியோரால் சரிபார்க்கப்பட்டு, அச்சேற்றுவதற்குத் தகுதியான முறையில் மொழித் திணைக்களப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த தாகவும் தெரியவருகிறது.

### நிரந்தரச் செயலாளர் மாநாடு

இம்மொழி பெயர்ப்புப் பிரதிகள் திருவாளர்கள் எப். எக்ஸ். சி. நடராசா, எஸ். நடராசா ஆகியவர்களின் பொறுப்பில் இருந்ததாகவும் நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. ஆனால், இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நிரந்தரச் செயலாளர்களின் மாநாட்டுக்கு மொழித் திணைக்கள முதல்வர் டாக்டர் என். டி. விசயசேகரா சென்று வந்த பின்னரே இம்மொழி பெயர்ப்புக்கள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் இப்பொழுது தெரியவந்துள்ளது.

நிரந்தரச் செயலாளர்களின் மாநாட்டில் இப்பிரமாணங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டதாகவும், அப்பொழுது டாக்டர் விசயசேகரா இவற்றை மொழி பெயர்க்கப் பத்து ஆண்டுகள் செல்லும் என்று கூறியதாகவும் கூறப்படும் செய்திகள் இங்கு கவனத்திற்குரியது. கையில் மொழி பெயர்ப்பு இருக்க மொழித்திணைக்கள முதல்வர் பத்து ஆண்டுகள் வேண்டுமென்று கூறியிருக்கிறாராம். அவர் பத்து ஆண்டுகள் வேண்டுமென்று கூறியதை தமிழ் அரசாங்க ஊழியர்கள் மூன்றுதிங்களில்மொழிபெயர்ப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

### ஆதாரங்கள்

இச்சம்பவங்களிலிருந்து மொழித்திணைக்கள முதல்வர்களது தமிழ் ஒழிப்பு மனப்பான்மை தெளிவாகிறது. இப்பிரமாணங்கள் தமிழில் என்றுமே மொழி பெயர்க்கப்படவில்லை என்று மொழித் திணைக்கள முதல்வர் வாதிட முற்படலாம். ஆனால், 1957ம் ஆண்டுக்குரிய 'அரசாங்க மொழித்திணைக்கள நிருவாக அறிக்கை'யின்நாலாம் பக்கத்தில் பின்வருமாறுகுறிப்பிடப்பட்டுள்ளது.

'ஒய்வுப்படிச் சட்டம், நிர்வாகச் சட்டம், நிதிப் பிரமாணங்கள் மொழி பெயர்க்கப்பட்டு, மொழி பெயர்ப்பு மேற்பார்வையாளர்களால் சரிபார்க்கப் பட்டு விட்டன. அரசாங்க சேவை ஆணைக்கழக விதிகள் சரிபார்க்கப்பட்டு வெளியிடுவதற்கான அதிகாரங்களை எதிர்பார்த்திருக்கின்றன.'

இதே போன்று பல ஆதாரங்களை ('அரசாங்க மொழிகள் ஆணைக்கழக ஐந்தாவது இடையறிக்கை: 5-9-53 பக்கம் 17, அரசாங்க மொழிகள் ஆணைக்கழக இறுதி அறிக்கை: 1-10-53 பக்கம் 10, அரசாங்க மொழித் திணைக்கள நிருவாக அறிக்கை: 1955ம் ஆண்டுக்குரியது பக்கம் 9. அரசாங்க மொழித்திணைக்கள நிருவாக அறிக்கை 1956ம் ஆண்டுக்குரியது பக்கம் 4' இவற்றிலிருந்து) காட்டக் கூடியதாக இருக்கிறது.

### நாசவேலை

மேற்காட்டிய ஆதாரங்களிலிருந்து ஒய்வுப்படிச் சட்டம், நிர்வாகச் சட்டம், நிதிப்பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்கழக விதிகள் ஆகிய நான்கும் தமிழ் மொழியிலே மொழி பெயர்க்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு அச்சேற்றும் நிலைக்கேற்றனவாக மொழித் திணைக்களத்திலிருந்தன என்பது உறுதியாகிறது. அப்படியானால், அந்த மொழி பெயர்ப்புப் பிரதிகள் எங்கே போயின?

பாரதூரமான சதிநாசவேலை ஏதோ மொழித் திணைக்களத்தில் நடைபெற்றிருக்கின்றது என்பது தெளிவாகிவிட்டது. ஆகவே இது பற்றி உடனடியாக விசாரணை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

### விசாரணை வேண்டும்

பிளவு பட்டுக்கிடந்த இரு இனமக்கள் மத்தியிலும் ஒற்றுமையை ஏற்படுத்த முயலும் தேசிய அரசாங்கம் சிங்கள வெறியர்களினதும், அவர்களுக்கு ஒத்தூதும் நம்மவர்கள் சிலரதும் வேட்டைக் காடாக இருக்கும் மொழித் திணைக்களத்தை உடன் சீர் செய்ய வேண்டும். இத்திணைக்களத்திற்குப் பொறுப்பான நீதி அமைச்சர் இந்த நாச வேலைசம்பந்தமாகவும், ஏனைய விடயங்கள் பற்றியும் ஆராய ஒரு நடுநிலையான விசாரணைக்குழுவை உடன் நியமிக்க வேண்டும். அப்படியொரு குழு நியமிக்கப்படும் பொழுது இத்திணைக்களத்தைச் சேர்ந்த பல நல்லவர்களே பல தகவல்களை வெளியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய விசாரணைக்குழு ஒன்றை நியமிக்க முன்னர், முதல் வேலையாக இன்று நடைபெற்றுள்ள இச்சதிநாச வேலையிலே தொடர்பு பட்டோர் எல்லோரையும், பதவியிலிருந்து இடை நிறுத்தி வைக்க வேண்டும் என்று பகிரங்கமாக நீதி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறோம்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. மேனன் மீண்டும் அமைச்சராகலாம்

## உருசியாவின் உறவை வலுப்படுத்த புது முயற்சி

### அரசியல் வட்டாரங்கள் ஊகிப்பு

முன்னுளைய இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் மீண்டும் அமைச்சரவையில் இடம் பிடித்துக் கொள்ளலாம் என்று இந்திய அரசியல் வட்டாரங்களில் பலமாக நம்பப்படுகிறது. திரு. கிருஷ்ண மேனன் அமைச்சராகும் பட்சத்தில் அவரிடம் இரும்பு கனரகப் பகுதி ஒப்படைக்கப்படலாம் என்றும் அதே வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

இந்தியா மீது சீனு ஆக்கிரமிப்பு நடாத்திய பொழுது நாட்டின் பாதுகாப்பை திரு. கிருஷ்ணமேனன் சரியான முறையில் கவனிக்கவில்லையென்றும், அவர் ஒரு கம்யூனிச அனுதாபியென்றும் எதிர்க்கட்சிகளும் சில காங்கிரஸ் வாதிகளும் சுமத்திய குற்றச்சாட்டைத் தொடர்ந்து திரு. கிருஷ்ண மேனன் பதவி துறந்ததும், கடந்த தேர்தலின் போது ஆச்சாரியார் கிருபலானி திரு. மேனனை அவர் ஒரு கம்யூனிஸ்டு என்ற காரணத்தை மட்டும் முன்வைத்து எதிர்த்துப் போட்டியிட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

அமைச்சர் பதவியைத் துறந்த திரு. கிருஷ்ண மேனன் அரசியலுக்கே முழுக்குப் போட்டு விடுவார் என்று சிலர் கருதினுர்கள். ஆனுல் அமைதியாக இருந்த திரு. கிருஷ்ணமேனன் அவ்வப்போது பொது மேடைகளில் மட்டுமே தனது கருத்துக்களைத் தெரிவித்து வந்தார். பாராளுமன்ற விவாதங்களில் கூட அவர் அவ்வளவாகப் பங்குபற்றவில்லை.

இப்பொழுது ஏற்பட்டுள்ள இந்திய பாகிஸ்தான் தகராற்றைத் தொடர்ந்து திரு. கிருஷ்ணமேனனைப் பிரதமர் திரு. சாத்திரி முன்னணிக்கு மெதுவாகத் தள்ளி வருகிருராம். அதன் விளைவே கடந்த வாரம் அவரை விசேட தூதுவராக சனுதிபதி நாசரிடம் அனுப்பியது என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

#### எதிர்க்கட்சிகள் ஆதரவு

திரு. கிருஷ்ண மேனன் அமைச்சராவதை எதிர்க் கட்சிகளும் எதிர்க்கமாட்டாது என்று நம்பப்படுகிறது. திரு. மேனன் தன்னை ஒரு கம்யூனிஸ்டு வாதி போன்று காட்டிக்கொண்டு சீனுவுடன் பழகியது, சீனுவின் நிலையை அறிவதற்கே என்றும், அவர் அப்படி நடந்துகொண்டமையினுலேயே தலாய்லாமா இந்தியாவில் புகலிடம் தேடிய பொழுது சீனு இந்தியா மீது தீவிர நடவடிக்கை எடுக்கவில்லையென்றும், திரு. மேனனின் நிலையை சீனர்கள் புரிந்து கொண்ட பின்னரே நேரடி ஆக்கிரமிப்பில் இறங்கினுர்கள் என்றும் இந்திய எதிர்க்கட்சிகள் திடமாக நம்புகின்றனவாம்.

இப்பொழுது 'திரு. மேனன் இடதுசாரி மனப்பான்மை கொண்ட வரேயல்லாமல், முன்னர் எண்ணியது போன்று ஒரு கம்யூனிஸ்டு அல்ல' என்று எதிர்க்கட்சியினர் முடிவு கட்டியுள்ளார்களாம்.

#### உறவு பலப்படும்

திரு. கிருஷ்ணமேனனை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்வதினுல் எகிப்து, உருசியா போன்ற நாடுகளுடன் உள்ள உறவை மேலும் நெருக்கமாக்கிக் கொள்ளலாம் என்று பிரதமர் சாத்திரி காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் கூறியதாகவும் தெரிய வருகிறது.

அண்மையில் பம்பாயில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. மேனன் பேசுகையில் இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையில் உள்ள எல்லைக் கோட்டை இந்தியா அழித்துவிட வேண்டுமென்று கூறியதால் அவரின் செல்வாக்கு இந்தியா பூராவிலும் வலுவடைந்துள்ளதாம்.

இந்தியாவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள பாகிஸ்தான் எதிர்ப்பு மனப்பான்மை திரு. கிருஷ்ண மேனனை அமைச்சரவையில் சேர்ந்துக் கொள்வதற்குச் சாதகமானது என்று பிரதமர் சாத்திரியும் காங்கிரஸ் தலைவர் திரு. காமராசரும் நம்புகிருர்களாம்.

#### அமெரிக்கா...?

திரு. மேனனை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளும் பட்சத்தில் அவரிடம் மீண்டும் பாதுகாப்பு அமைச்சு ஒப்படைக்கப்படமாட்டாது என்றும், அவர் பெரும்பாலும் இரும்பு கனரக அமைச்சைப் பொறுப்பேற்கலாம் என்றும் இந்திய அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன. இரும்பு கனரக அமைச்சை திரு. மேனனிடம் ஒப்படைக்க முடியாவிட்டால், அவர் இலாக பொறுப்பற்ற அமைச்சராகலாம் எனவும் கருத்து நிலவுகிறது. எது எப்படி நடைபெற்ற பொழுதிலும் திரு. கிருஷ்ண மேனன் இந்திய அரசியலில் மீண்டும் முக்கிய மனிதராக விளங்கப்போகிருர் என்பதும், அந்த நிலைக்கு அவரை முன்னுக்குத் தள்ள திரு. சாத்திரி விரும்புகிருர் என்பதும் நிச்சயம் என்று தெரிகிறது.

திரு. கிருஷ்ணமேனன் இந்திய அரசியலில் முக்கிய பங்கேற்பதை அமெரிக்க அரசியல் வட்டாரங்கள் வரவேற்கமாட்டாது என்பதும், இதனுல் இந்தியாவின் முன்னுள் நிதி அமைச்சர் திரு. தேசாய் அரசியலரங்கிலிருது மேலும் பின்தள்ளப் படுவார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆளும் கட்சிக்...

[5-ம் பக்கத் [தொடர்ச்சி]

கடமையாற்றும் நிரந்தரமற்ற ஊழியர்களின் சேவை ஐந்து வருட சேவைக்காலம் முடிவடைந்ததும் கட்டாயமாக நிரந்தரமாக்கப் படவேண்டும்.

- கூட்டரவுகளிலும், பொதுத் துறையிலும் கடமையாற்றும் ஊழியர்களை தற்காலிகவேலை நீக்கம் செய்து கட்டாய விடுமுறையில் அனுப்பினுல் அவர்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகள் அனைத்தும் ஆறுமாத கால எல்லைக்குள் முடிவடைய வேண்டும்.
- சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் விசாரணைகள், வேண்டுகோள்களைக் கவனிக்க தனியாக ஒவ்வொரு துணைச் செயலாளர்களைப் பொறுப்பாக அமைச்சர்கள் நியமிக்க வேண்டும். பா. உறுப்பினர்களின்முறையீட்டின் பேரில் அமைச்சர்களால் விடுக்கப்படும் கட்டளைகளை அமுல் நடத்துவதற்கும் இத்துணைச்செயலாளர்களே பொறுப்பாக இருக்கவேண்டும்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள பெரிய தபால் அலுவலகத்தைச் சேர்ந்த சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கியமையினுல் நாட்டின் உயிர் நாடியான தொடர்புகள் அனைத்தையும் திடீரென ஸ்தம்பித்துவிட்டன. வேலை நிறுத்தம் பரவி, அதினுல் அரசாங்க நிர்வாக இயந்திரமே பாதிக்கப்பட்டு விடுமோ என்ற பயப் பிராந்தியும் மக்களிடம் காணப்பட்டது. ஆனுல் வேலை நிறுத்தம் அஞ்சாயுசில் முடிந்து விட்டது.

# தபால் திணைக்களம் சீராக வழி உண்டா?

நியாயமான கோரிக்கையின் அடிப்படையில் தொழிலாளர்கள் உரிமைப் போர் தொடுத்தால் அதற்கு பொது மக்களின் ஆதரவு எப்போதும் உண்டு. ஆனுல் தபால் இலாகாவைச் சேர்ந்த தொழிலாளர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு பொது மக்கள் எந்த வகையிலும் ஆதரவு கொடுக்கவே தயங்குவர். தபால் இலாகாவிலும், தபால் ஊழியர்கள் மீதும் பொதுமக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்திருப்பதே காரணமாகும்.

பொதுமக்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள அரசாங்க திணைக்களங்களுள் தபால் தந்திப்பகுதி மிக முக்கியமானது. இப்பகுதியில் இன்று நிலவிவருவதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்ந்துவருகின்றன.

#### நம்பிக்கை மோசடி

வெவ்வேறு ஊர்களிலிருந்து தங்கள் குடும்பத்தார், உறவினர், உற்றநண்பர்கள், வியாபார பங்கு தாரர் முதலானேருடன் தொடர்பு கொள்ள தபால் தந்தி இலாகாவின் துணையினையே பொதுமக்கள் முற்றுக நம்பியுள்ளனர். பணம், விலையுயர்ந்த பொருட்கள், பதிப்புவாய்ந்த சிட்டுக்கள் முதலானவற்றை வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பிவைக்கவும் மக்கள் தபால் இலாகாவையே பெரிதும் நம்பியுள்ளனர்.

பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாக இருக்க வேண்டிய ஒரு இலாகா நம்பிக்கை மோசடியில் வளர்ச்சியடைந்துவருவதை அறிந்தபின்னரும் மக்கள் இவ்விலாகாவுடன் கொண்டுள்ள தொடர்பினை துண்டிக்காமலிருக்க முடியுமா? ஆகவே தபால் தந்தித் திணைக்களத்தைப் புறக்கணித்துவிட்டு வேறு வழி வகைகளில் தொடர்பு கொள்ள மக்கள் முனைய முயர்சி எடுத்தாலும் இன்று ஆச்சரியப்படுவதற்கில்லை.

#### மறையும் மாயம்

இருமாதங்களுக்கு முன்னர் கணக்கிடப்பட்டபோது, அதற்கு முந்திய 36 மாதங்களில் பதிவுத் தபால், 'இன்ஷுர்' செய்யப்பட்ட தபால் முதலான முக்கியமான தபால்களாக மொத்தம் 48500 தபால்கள் உரிய இடங்களைப்போய்ச் சேரவில்லையாம். இத்தபால்களுக்குள் விலைமதிப்பு வாய்ந்த பல காசோலைகள், தஸ்தாவேஜுகள், பொருட்கள் அடங்கும். இவற்றின் பெறுமதியினை நாம் கணக்கிட முடியாது. இத்தபால்கள் மறைந்த மாயம் என்ன? இவைமறைவதற்கு காரணமானவர்கள் யார் என்பன போன்ற கேள்விகள் எழும் போது, இக்கடிதங்கள் பிரயாணம்செய்யும் பாதையிலுள்ள அனைவரையுமே சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. கடிதங்களைப்பெற்று பதிவுச்சீட்டுக்கள் வழங்குவோர், இவற்றை ஒன்ருகச் சேகரிப்போர், தெரிவுசெய்வோர், வண்டிகளில் ஏற்றுவோர், புகையிரத நிலையங்களுக்குக் கொண்டுசெல்வோர் அனைவரும் சந்தேகத்துக்கிடமானவர்களே!

பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள இவ்விலாகாவில் இத்தகைய ஊழல்கள் தொடர்ந்து நடைபெற்று வருவது கண்டிக்கத்தக்கதாகும்.

தபால் திணைக்கள ஊழியர்கள் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே வேலை நிறுத்தம் செய்யப்பட்டதாக அறிகிறேம். அமைச்சரின் அறிக்கைகளிலிருந்து, தபால் இலாகா ஊழல்களைக்களைய, இடமாற்றத் திட்டம் ஒரு, பார்க்கும் என்று புலப்படவில்லை. ஆகவே ஊழல்கள் ஒழிக்கப்படுவதற்கு இது வரை எதுவும் உருப்படியாக நடைபெறவில்லை என்பதும் வெளிப்படையாகிவிட்டது.

பொது மக்களின் உடமைகளைத் தங்கள் சொந்த நோக்கு முடிவு பவர்களையும் மக்களின் நம்பிக்கையை நாசப்படுத்துபவர்களையும் தண்டிக்க அரசாங்கம் ஒரு போதும் தயங்கலாகாது. தபால் இலாகாவில் தலைவிரித்தாடும் தகிடுதத்தங்களின் தன்மையினை நாடிபார்க்க இந்த வேலை நிறுத்தம் ஒரு வாய்ப்பினை அரசாங்கத்துக்கு நல்கியிருக்கிறது. காலதாமதமின்றி ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட அரசாங்கம் இன்னமும் தாமதிக்கலாகாது.

## மாலை சூடிய...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று முறை கருச்சிதைவு ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது மூன்று மாதக் கர்ப்பிணி. இதற்கும் சிதைவு ஏற்படுமானுல் எனது கணவரின் மனமே மாறிவிடும். கருச்சிதையாமலிருக்க ஏதாவது புத்தி மதிகள் கூறமுடியுமா?

திருமதி ...........
அக்கரைப்பற்று.


இவ்விஞவுக்குப் பதிலளிக்க ஒரு வைத்தியரால் தான் முடியும். இருப்பினும் உங்களுக்கு மனக்கட்டுப்பாடு மிகவும் அவசியம் என்பதை மட்டும் கூற விரும்புகிறேன். 'நிச்சயமாக இம்முறை அழகான குழந்தையை ஈன்றெடுப்பேன்' என்று உங்கள் மனம் திடமாக நம்பட்டும். நியதை நினையாமல் நன்மையையே என்றும் கருத்தில் கொள்வது இச்சந்தர்ப்பத்தில் இன்றியமையாததாகும். மனந்தளராமல் பார்த்துக் கொள்ளுங்கள். சற்றேனும் அதிர்ச்சி தரத்தக்க சம்பவங்கள் எதுவும் நடைபெருமல் இருப்பதும் நல்லது.

### கணிதத்தில்

உங்கள் பிள்ளைகள்—மாணவ, மாணவிகள் கடந்த பரீட்சைகளில் குறைவாகக் காணப்பட்டால் எமது கணிதங்கள்—மனக் கணிதங்கள் — அக்ஷர கேத்திர கணிதங்களை அவ்வவ் வகுப்புகட்கு வாங்கி வீட்டுப் பாடங்களாகப் படிக்கச் செய்யுங்கள். தேர்ச்சிக்கு உத்தரவாதம். ஆலோசனை கட்கெழுதுங்கள்.

வே. சிவக்கொழுந்து
(நூலாசிரியன்)
கலாபவனம்,
பருத்தித்துறை.


ரிஷி
நேத்திர சஞ்சீவி
தைலம்



இதனை தலைக்கு வைத்து வரின் தலைவலி, கண்வலி, காதுவலி, செவிடு, கண் பார்வை மட்டு, உச்சி, கண், கை, கால், தேக எரிச்சல், காதடைப்பு, பீனிசம் முதலியவைகளைக் குணப்படுத்தி தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு நீண்டு அடர்த்தியாக வளரச் செய்யும்.

புட்டில் 1க்கு ரூ. 3-50
தபால் செலவு 1-10 சதம்

ஞானசுந்தர
வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குட்டி நாய்கள் குரைக்கப்போய்ப் பெரிய நாய்கள் கடித்துக்கொள்வது போலத்தான்—

## குழந்தைகளின் உலகம் புதுமையானது. 'சுவை' என்னும் மையத்தில் சுழலும் 'எழுச்சி' யுலகம் அது!

## குழந்தைகள் குழந்தைகள் தாம்! பெரியவர்கள் பெரியவர்கள் தாம்!

### எமது சிறுகதை




இரண்டு பேருக்கும் ஏறக்குறைய ஏழு வயதுதான் இருக்கும். துள்ளித்திரியும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைக் குஞ்சுகள் அவர்கள். புழுதி விளையாடியதால் அழுக்கேறிய மேனியில் சட்டையும்; அரைக்காற் சட்டையும் அணிந்து, மோட்டார் திருத்தும் 'கராச்சில்' வேலை செய்யும் சிப்பந்திகள் எப்படி அலங்கோலமாக இருப்பார்களோ அதே பாணியில் அந்தச் 'சிறுவர்வாசிக சாலை'யின் வளவில் இவ்விரண்டு பையன்களும் நுழைந்தனர்.

பருவ வளர்ச்சியின் மாற்றத்தைத் தெற்றென விளக்கக் கூடியதாக இருவர் வாயிலும் பல்விழுந்த கடப்பு. 'கிறவல்' புழுதி படித்ததினால், பழுத்து அறுவடைக்குத் தயாராகவுள்ள 'மேட்டுவட்டை'க் கதிர்போல படிந்தும் நிமிர்ந்தும் காணப்படுவதான பழுப்பு நிறக்கேசம். பொத்தான் காசுகளை ஒழுங்காகப் பொருத்தாமலேயே, கையில் உள்ள பெலனுக்குத் தக்கதாகக் காற்சட்டைப் பட்டிகளை இறுக்கித் திருகிச் சொருகியதால் 'உடுகுக்குத்தி' போல தெரிந்து காற்சட்டைக்குமேல் முட்டிமோதி வழிந்து கொண்டிருக்கும் வயிறு. அலுக்காமல விளையாடிப் புழுதியினால் ஏற்பட்ட தடுமல் காரணமாக மூக்குத் துவாரங்களினுள்ளிருந்து 'கர்கர்' என்று உள்ளே உறிஞ்சுவதால், அடிக்கடி புற்றிலிருந்து எட்டிப்பார்க்கும் பாம்புக் குஞ்சுபோன்றமூக்குச்சளி, ஓயாமல், குறுக்கு விசாரணை செய்வது போன்று இருவரிடையேயும் எழும்பும் கேள்வி பதில், இன்னோரன்ன ஆரவாரத்துடன் அந்த 'அரும்புமன்ற' வாசிகசாலை மண்டபத்துக்கு வந்துவிட்டனர்.

மண்டபத்தினுள் நுழைந்த சிறுவர்கள், விளையாட்டு விளையாட்டாக மத்தியிற் கிடந்த அந்தச் சிறு 'பக்கீசுப்' பலகை மேசைமீது ஏறியமர்ந்து விட்டனர். மண்டபத்து வெள்ளைக் குருத்து மண்ணிலே தன்னிச்சையாக அமர்ந்து விளையாடுவதிலும் அந்த மேசையில் ஏறியமர்ந்துவிளையாடுவதிலும் அவர்களுக்கு ஒரு அலாதியான பிரியம் போலும். பிருந்தாவனத்துக் கண்ணன் பிள்ளைப் பிராயத்திலே காட்டிய திருவிளையாடல்களை மலிவாக நேரிலே காண்பது போன்ற பிரமை ஒருகணம்!

'தம்பி... தம்பி... கீழே யிறங்கி உக்காருங்க, பெலனில்லாத மேசையல்லவா இது? முறிந்துவிடும். பள்ளியிலும் மேசைமீதுதானா உக்காருகிறீர்கள்? வாத்தியார் சொல்லித் தரவில்லையா?'— அவர்களைப் பார்த்துப் சொன்னேன் எனினும், அவர்களோடு நானும் சேர்ந்தாலென்ன? என்ற நிலைக்கு என் மனம் பணிந்துவந்ததை என்னால் மறுக்க முடியாத நிலை. முன்னொரு பொழுது நானும்.........

'தம்பி நீங்க பள்ளிக்குப் போகிறதில்லையா?'

'பள்ளிக்குப்போறேமே' இருவரும் சேர்ந்து 'குழுமுயற்சிப்' பாடத்தில் விடையளிப்பது போன்று சொல்லிக் கொண்டனர்.

'அப்படியானால் உங்கள் வாத்தியார் மேசைமேல் ஏறக்கூடாதென்று சொல்லித்தரவில்லையா?'

'இல்ல, எங்கட வாத்தியார் அதெல்லாம் சொல்லித்தரமாட்டார். எந்நேரமும் அடிச்சுக்கொண்டேயிருப்பார்' அந்தக் கறுத்தப்பையன் கதிரேசுமுந்தியடித்துக்கொண்டு 'முதன்மையூக்கத்தை'த்தொழிற்படுத்தினான்.

'இவன் பொய்சொல்றான் ஐயா, எங்கட ஐயா மிச்சம் நல்லவர். பள்ளிக்குக் கள்ளமடிச்சாத்தான் அடிப்பார். இவன் ஒரே பள்ளிக்குக் கள்ளன், அதனால்தான் இவருக்கு எந்நேரமும் அடி விழுற' இந்தத் திருத்தப் பிரேரணையை மற்றச் சிவலைப்பையன் சந்திரன் பிரேரித்தான்.

'சரி, சரி, இப்படி என்னோடு இந்த மண்ணிலேயுட்காந்து இந்தப் புத்தகத்தைப் பாருங்கள். அழகான படமெல்லாம் இருக்கு, பார்த்து விட்டு ஒழுங்கா வைத்துப்போடவேணும்; தெரியுமா?' என்ற நிபந்தனைக் குறிப்புடனே ஒரு படப்புத்தகத்தை இருவரிடமே கொடுத்து விட்டேன். 'டால்ட்டன்' முறைக் கல்வியைக் கையாளுவதான திருப்தி?

'அம்மோய்! என்ன வடிவாரிக்குப் பார்த்தயாடா கதிரேசி'

'ஓம்டா சந்திரா, சரியா வானத்தப் போல இரிக்கிடா இந்த நீலம்'

'போடா முட்ட, நம்மட கடலப்போல இரிக்குப் பாருடா. அண்டைக்கு நான் மாமாவோட கடக்கரைக்குப்போன நானம்பி, இப்புடி நில நெறமாத்தான் இரிக்குக்கடல்'

'ஒண்டோவ் ஒண்டோவ். நானும் பாத்த நான் தான்டா.'

'டேய் கதிரேசி, இஞ்சப் பாருடோவ் கோழிக்குஞ்சுகளை, அம்மோய்! என்ன வடிவாரிக்குடா.'


'எங்க வீட்டயும்கோழிக் குஞ்சிரிக்கம்பி; நான் ஒரே விளையாட்டுத்தான் அதுகளோட.'

'கதிரேசேய், நம்மட பள்ளியில் சொல்லித்தந்த 'ஓடி விளையாடு பாப்பா.... கொத்தித் [illegible] கோழி அதைக் கூட்டி விளையாடு பாப்பா' என்ற பாட்டுப்போல இந்தப் புள்ளயளும் விளையாடுறத்தப் பாருடா.'

'இஞ்சப் பாருடோவ் கீ......கீ......கீ...... டேய் சந்திரோவ் இந்தக் கிழவியப் பாருடோவ், பொல்லுல போறாவு; பல்லொண்டுமில்லாத பொக்குவாய்டா இவக்கு.'

'இவரு பழிக்கார், ஒனக்கும் பல்லு இல்லத்தானடா, மாடு முறிச்ச வேலிமாதிரிக் கடப்பாரிக்கு.'

'எனக்கு மட்டுமா கா; ஒனக்கும்தானே, பன்றி பூந்த கடப்புமாதிரிப் பல்லில்லாம இரிக்கு... ஓமா.'



'ஆ...ஆ... மத்தப்பக்கம் பெரட்டுடா தாழ, என்ன படம் இரிக்கெண்டு பாப்பம்'

பச்சை சிவப்பு நீலம் மஞ்சள் என்ற நிறங்களில் இருந்த படங்களிலுள்ள உருவங்களில் மாறி, 'எண்ணம்' என்னும் விண்ணகத்தில் சிந்தனை— 'கவர்ச்சிக்' காற்றின் போக்குக் கேற்பப் 'பேச்சு' என்னும் பட்டத்தைச் சிறுவர்கள் பறக்க விட்டபடி நேர்முக வருணனை நிகழ்த்தும் வானொலி நிருபராக மாறி விட்டனர்.

கண்கள் கையிலெடுத்து சஞ்சிகையின் எழுத்துக்களை எறும்பாக மேய்ந்தாலும் இவர்களின் உரையா[illegible] குமைந்து கொண்டேன். 'கவர்ச்சி' என்ற தேனிக்கு 'காட்சி' யென்ற தேன் எங்கிருந்தால் தான் என்ன? விரும்பினாலும் வெறுத்தாலும் விட்டு வைக்க முடியுமா? சிறுவர்கள் பக்கங்களைப் புரட்டுகின்றனர்.

'சந்திரோவ், இஞ்சப்பாருடோவ் இந்தப் பயில்வானுகளேய். 'குஸ்தி' போடுறானுகள்டா.'

'அம்மேய்! இது பெரிய 'குஸ்தி'தான்; இவனுகளப் பார்க்கிலும்நான் நல்லாக் 'குஸ்தி' போடுவன தெரியுமா?'

'என்டப்பா! இவரு பெரிய சண்டியன்; அப்படியென்டா என்னோட வாடா பார்ப்பம்.'

'சரி வாடா வெட்டைக்குப் போவம்.'

இரண்டுபேரும் எழுந்து புத்தகத்தை மேசையில் வீசி விட்டுச் சடடைகளைக் கழற்றிக் கம்பி வலைத் தட்டியில் போடுகின்றனர். என்னை அறியாமலேயே கைகள் சஞ்சிகையை மூடிவிட்டன. இருவரும் முற்றத்திற்கு வந்து விட்டனர். மறபோர் என்றால் என்ன வென்று அறியாத சிறுவர்கள் 'இயல்பூக்கத்தின்' பிரதிபலிப்பான 'மன எழுச்சியில்' அள்ளுண்டு; உளநூல் விற்பன்னர் 'மக்டூகல' வகுத்துக்காட்டிய 'போருக்க' முயற்சியில் ஈடுபடுவதை; நான் ஒரு தாய்க் கோழியாக இருந்து குஞ்சுகளின் குழந்தைப் போரைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அப்போய்; அம்மோய்; விடுடா! என்ர கால்ல புண்ணிருக்கு; தாக்குப் பட்டுப் போம் விடுடா... விடுடா." கதிரேசு அலறலும் மூச்சுமாகச் சொன்னான்.

'குருடன் கையில் விரால் அகப்பட்டமாதிரி' த்தானென்றாலும் விவேகத் தொழிற்பாடு வேலை செய்த வகையில்; சந்திரன் தன் பிஞ்சுக் கைகளால் கதிரேசின பின் புறமாகக் குப்புற வளைத்துப் பிடரியின் மேல் ஒரு 'பூட்டை'ப் போட்டுத் தளர்த்தினான்.

"அப்பாடி! இவ்வளவுதான் இவர்ர கெட்டித்தனம். இவனுக்கு ஒன்றுக்கும் ஏலா ஐயா" சந்திரன் கதிரேசைப் பார்த்தபடி என்னிடம் சொன்னான்.

இமயத்தின் பெருமையைச் சாடிய களிப்புச் சந்திரனின் பால் முகத்தில் பரிணமித்தது!

'நீ தான் ஏலாவாளி; என்னோட மட்டுந்தான் 'குஸ்தி' போடுவார்; குண்டன் சினைவனோட பள்ளிக்குள்ள 'குஸ்தி' போடப்போகமாட்டார்.' 'விழுந்தாலும் மண் ஒட்டவில்லையே' என்ற பாவனையில் கதிரேசு சொன்னான். சிறுவர்களென்றாலும் தன்மானமில்லாமலா போகும். கதிரேசி மீண்டும் சந்திரனை அழைத்தான். ஒருவரையொருவர் பாய்ந்து பிடித்தனர்.

மீண்டும் கதிரேசின் அனுகல்; தொடர்ந்து தளர்ச்சி, அடுத்துப் பாய்ச்சல்; ஒன்று, இரண்டு மூன்று 'வட்டங்கள்' ஒவ்வொன்றிலும் சந்திரனுக்கே வெற்றி! கோதாவை அவதானித்துக் கொண்டிருந்த ரசிகனான மனநிலையெனக்கு, உளவியலிற் கற்ற புத்தகப் பாடப்—போருக்கத்தின் தொழிற்பாட்டைப் பரிட்சார்த்தமாக அவதானிக்கும் உளவியற் கலைஞனின் பெருமிதம். போதும்; பிள்ளைகள் களைத்து விட்டனர்!

'தம்பி! 'குஸ்தியை' நிறுத்துங்கள்; போதும். இருவரும் நல்ல கெட்டிக்காரர்கள். கதிரேசுக்குக் காலில் சிரங்கு இருந்ததனால் கொஞ்சம 'சவுத்தட்டான். இல்லாட்டாக் கெட்டிக்காரன்தான்' இருவரையும் தட்டிக் கொடுத்தேன்.

ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்து, வெயர்வையோடு உடம்பில் ஒட்டியிருந்த வெள்ளைச் சீனி போன்ற குருத்து மணலைத் தட்டித் துடைத்துச் சிரித்துக்கொண்டு நின்றனர்.

டேய்! ஏன்டா என்ர பிள்ளையை அடிச்ச நீ? உன்ர கையை முறிச்சுப் போடுவன். அன்றைக்கும் இப்படித்தான் கூட்டிக்கொண்டு என்ர பிள்ளைக்கு அடிச்சுப்போட்டாய்; மிச்சம் கவனமாக இருந்துக்க தெரியுமா?' இரைந்துகொண்டே வந்து தன் மகன் கதிரேசனின் கையைப் பித்தாள் அவன் தாய்.

சிவ பூசையில் கரடி புகுந்த மாதிரித் தான்.

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீந்த முடியுமா?

## விபத்து நேர்ந்தால் விலக்கத் தெரியுமா?

**நீந்தப் பழகிக்கொண்டால் நீர் விபத்துக்களைத் தடுக்கலாம். அத்தோடு மட்டுமல்லாமல், நீச்சல் சிறந்த தேகப் பயிற்சியுமாகும். நீந்தத் தெரிந்தால் மட்டும் போதாது. நீர் விபத்துக்குள் சிக்கியவர்களைக் காத்துக் கொள்ளவும் தெரிய வேண்டும். நீந்தப் பழக வேண்டும் என்பதை வலியுறுத்தி, விபத்தில் மாட்டித் தவிப்பவர்களைக் காப்பாற்றும் முறையையும் விளக்குகிறது இக் கட்டுரை.**

தோழர்களுடன் கடலுக்கு நீந்தி விளையாடச் சென்ற மகன், கடலில் மூழ்கி ஆளையே காண வில்லை என அறிக்கைகள் வருவதையும், அதனை அறிந்த பெற்றோர்கள் ஆற்றொணுத் துயருறுவதையும் பத்திரிகையில் படிக்கின்றோம். சிலர் தற்கொலை செய்யும் நோக்கமாக ஆற்றிலோ, குளத்திலோ, கிணற்றிலோ விழுவதையும், பின்பு உயிருக்காக அவதிப் படுவதையும் காண்கின்றோம்.

படகில் சென்ற பலரில், புயலின் காரணமாக படகு கவிழ்ந்து, சிலர் இறந்ததாகச் சில திடுக்கிடும் செய்திகளை அறிகின்றோம். இன்னும் சிலர் தற்செயலாக கிணற்றில் விழுந்து மூழ்கி இறந்ததையும் அன்றாட நிகழ்ச்சிகளாக தினசரிப் பத்திரிகைகளில் பார்த்து வேதனை அடைகிறோம்.

இவை எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம் நீந்தத் தெரியாமையே. நீந்தத் தெரிவதன் அவசியம்-பெரியோர், சிறியோர், ஆண் பெண் யாவருக்கும் பொதுவானது.

### நீச்சலின் அவசியம்

'புலிக் குட்டிக்கு பாய்ச்சலும், மீன் குஞ்சுக்கு நீச்சலும் பிறப்போடு கூடிய பழக்கம்'. எனவே பகுத்தறிவுள்ள மனிதனுக்கு நீந்தும் கலையும் தெரிந்திருப்பது நன்று. நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் இவற்றால் சூழப்பட்ட மனிதனுக்கு, இவை எவ்வாறு மனித வாழ்வுக்கு நன்மையோ அதேபோல் தீமையும் உண்டு. தீமையை நாங்களாகவே வருவித்துக் கொள்கின்றோம். புதுப் புது செய்கைகள், பழக்க வழக்கங்களை நுண்ணறிவில் அறியும் ஆற்றலுள்ள மனிதனுக்கு நீச்சலின் அவசியமும் இன்றியமையாதது.

ஆகையினால் ஒவ்வொரு பெற்றோரும் தம் அருமருந்தன்ன மக்களுக்கு நீச்சல் கலையையும் பழக்குதல் வேண்டும். இதைச் செய்யும் போது சில பெற்றோர்கள் மருட்சியடைவார்கள். காரணம் பிள்ளைகள் நீரில் மூழ்கி விடுவார்களோ என்ற பயமே. எனினும் கேள்வி அறிவுள்ள குழந்தைகளுக்கு நீந்தத் தெரிவதன் அவசியத்தையும், நன்மையையும் சொல்லிக் கொடுத்தல் வேண்டும். இதுமேல் நாடுகளில் ஒரு கலையாகவே மிளிர்கின்றது. 'கடற் குளிப்பு' எனவும் 'நீச்சல் தொட்டி' எனவும் பெயரமைத்து அதைச் சிறந்த முறையில் பயன் படுத்துகின்றனர்.

இலங்கையில் சில பெரிய நகரங்களில் இவை செயல் படுகின்றன. எனினும் குறைவேயாம். நீந்தத் தெரிவதனால் நீர்விபத்திலிருந்து தப்பிக்கொள்ளவும், நீர் விபத்தில் சிக்கியவரை மீட்கவும்-காப்பாற்றவும் முடி-

**வைத்திய கலாநிதி**
**நா. கந்தையா**

கின்றது. இதுவோர் அரிய பெரிய சேவை.

### நீச்சற் குளங்கள்

நம் நாட்டின் கிராமப் புறங்கள், தீவுப் பகுதிகள், நாட்டுப் புறங்களில் ஏராளமான குளங்கள் இருக்கின்றன. இவற்றை சன சமூக நிலையங்கள், இளைஞர் கழகங்கள் விருத்தி செய்து, இளம் சந்ததியினருக்கு நீந்தப் பழக்குவதுடன், ஆண்டுக் கொருமுறை நீச்சற் போட்டி வைத்து ஊக்குவித்தல் வேண்டும். இதனால் யாவரும் பயனடைவார்கள். அத்துடன் இது சிறந்த தேகப் பயிற்சியுங் கூட.

நீந்துவதன் காரணமாக உடல் முழுவதும் செயல்படுகின்றது. அத்துடன் மன உற்சாகத்தையும் அளிக்கின்றது. இதன் பேருக மாணவர்கள் சிந்தனை தூண்டப் படுவதுடன் தம் கல்வியிலும் கூடிய கவனமுடன் படிப்பார்கள். ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களும் இப் பயிற்சியில் ஈடுபடுதல் அவசியம். ஏனெனில் வருங்காலத் தாய்களல்லவா அவர்கள்?

### தண்ணீர் விபத்து

நீரில் ஒருவன் மூழ்கிவிட்டால் அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியாது தத்தளிப்பான். சிறு துரும்பு கிடைத்தாலும் அதை ஒரு மரக் கட்டையாக எண்ணிப் பற்றிக்கொள்ளுவான். உயிரின் பெறுமதியை அப்போது தான் உணருவான்.

தண்ணீரில் மூழ்கியவர்கள் தத்தளிப்பதைப் பார்த்தால் மிகவும் பயங்கரமாக இருக்கும். அதிர்ச்சியும் கூட ஏற்படும். இவர்கள் நீரின்கீழேயும், மேலேயும் வந்து அவஸ்தைப் படுவார்கள். அடிக்கடியும், அதிகமாகவும் சுவாசிப்பதனால், வாயினலும் சுவாசித்து நீரைக் குடிப்பார்கள்.

ஆற்றிலோ குளத்திலோ இவ்விபத்து ஏற்பட்டால், நீருடன் அடித்துச் செல்லப் படுவார்கள். கடலில் ஏற்பட்டால் அலைகளால் உந்தப் பட்டுக் கரையில் ஒதுங்குவார்கள். கிணற்றில் இவ் விபத்து ஏற்பட்டால் அடியில் அடைவதல்லாமல் சில சமயம் நீர்மேலும் மிதப்பார்கள். இப்படியான விபத்தில் சிக்கியவர்களை அரை மணி நேரத்துக்கு முன்பதாக எடுத்து தகுந்த உதவி முறைகள்-தூண்டுதல் செய்வதால் உயிர் பெறுவார்கள்.

### தடுப்பதும் காப்பதும்

நீரில் மூழ்கிய யாவரும் இறந்துவிட மாட்டார்கள். மூழ்கிய நேரத்திலிருந்து இருபது முப்பது நிமிடங்களின் பின்புதானும் எடுத்து தகுந்த தூண்டுதலின் பேருக பிழைப்பிக்கலாம்.

நீரில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருப்பவனைக் காப்பாற்றுவது எளிதான காரியமல்ல. காப்பாற்றச் செல்பவன் நீந்தத் தெரிந்தவனுகவும், மனேதிடமுள்ளவனுகவும், தைரியசாலியாகவும் இருத்தல் அவசியம். இல்லையெனில் "செட்டியார் கண்டு பற்றிய கம்பளி மூடை" போலாகிவிடும்.

நீரில் மூழ்கியவன் பயத்தின் காரணமாகவும், தப்ப வேண்டுமென்ற அவாவின் காரணமாகவும், காப்பாற்றச் சென்றவனை இறுகக் கட்டிப் பிடித்து, அதன் பேருக இருவரும் மூழ்கிவிடுவார்கள். அன்றியும் தண்ணீரில் தத்தளித்து மூழ்கிக் கொண்டிருப்பவனை சற்றும் நீந்தத் தெரியாத ஒருவனல் காப்பாற்ற முடியாது.

இப்பேர்ப்பட்ட நேரத்தில் உடனடியாகக் கிடைக்கும், வேட்டியை அல்லது சேலையைக் கிழித்து நீளமாக முடிந்து ஒரு பக்கத்தை அவன் காணக் கூடியதாக எட்டத்திலிருந்து எறிய வேண்டும். அவன் அதைப் பிடித்தவுடன் மெள்ள மெள்ள இழுக்க வேண்டும். நீந்தத் தெரியாதவர்களாக இருந்தால் நீரில் மூழ்கியவனிடம் உடனே செல்லல் நன்றல்ல.

எனவே நீரில் மூழ்கியவன், தத்தளிக்கும் சமயத்தில் அவனைப் பின் தொடர்ந்து, அவன் கையையோ அன்றித் தலை மயிரையோ பற்றிப் பிடித்து, நீருக்கு மேலே கொண்டுவராது, பக்க வாட்டில் இழுத்துக் கொண்டு வருதல் வேண்டும். இதுவும் நீருக்குக் கீழாலேயே கொண்டு வருதல் வேண்டும்.

### முதலுதவி முறைகள்

(1) மூழ்கியவனை கரை சேர்த்ததும் அவன் உடைகளைக் கழற்றி விடுதல் அவசியம். பின்பு உயிர்ப்புத் தூண்டல் முறைகளை கையாளுதல் வேண்டும்.

(2) நீரில் மூழ்கியவனை தலை கீழாகப் பிடித்துக் குலுக்குவதனலும், தலை கீழாகப் பிடித்து சுற்றுவதனலும், குடித்த நீர் யாவும் வெளிப்படும். அத்துடன் அவனின் நாக்கை இன்னெருவர் பிடித்து மெதுவாக இழுப்பதால், இரைப்பை சுவாசக் குழாய், சுவாசப்பை இவற்றில் சேர்ந்துள்ள நீர் வெளியாகும்.

(3) உடனடியாகக் கால், கைகளை சூடு பண்ணச் செய்தல் அவசியம். வேப்பிலைகளையோ, வேறு இலைகளையோ நெருப்பில் வாட்டி ஒத்தடம் கொடுப்பது நன்று. இதன் பேருகச் சுவாசம் நடைபெறும்.

(4) குளிர்ந்த காற்றுப் படாவண்ணம் கம்பளிப் போர்வையால் அல்லது கெட்டித் துணியால் போர்த்தல் வேண்டும். இப்போது அவன் பிரமையடைந்து கண்களை திறந்து பார்ப்பான். அப்போது சூடான கோப்பியோ, தேனீரோ கொடுக்கலாம்.

(5) சுவாசம் நடைபெற்றுங் கூட பிரமையடையாதிருந்தால் மிகக் கிட்டிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதோ அன்றேல் வைத்தியரின் உதவியை நாடுவதோ மிக மிக அவசியமாகும்.

இதன் மூலம், நீந்தத் தெரிவதன் அனுகூலமும், சிறப்பும் ஒவ்வொரு பெற்றோரும் அறிந்திருத்தல் சாலச்சிறந்தது.

## இலக்கியத்தில்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலியவற்றிலிருந்து மேற்கோள் காட்டவில்லை காரணம், அவை எல்லாம் 'இழிசனர் வழக்கு' என்னும் சேரி மொழியில் அமைந்தவை என்று கருதினர்கள். மக்களோடு தொடர்புபட விரும்பிய இலக்கியப் போக்கு அவர்கள் பார்வையில் இழிந்ததாகப் பட்டது.

சித்தர்கள் தோன்றி எளிய இனிய 'மக்கள் பாடல் நெறியி' லேயே உயர்ந்த நீதிகளை எடுத்துரைத்தார்கள். பிற்காலச் சமயவாணர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டு நெறிகளையும் ஏற்றுப் பாடியவர்களும் அவற்றை 'அடங்கல்முறை' 'பாடுதுறை' எனத் தனித் தனியாகவே பிரித்து நிறுத்தினர்கள். சீர்காழி அருணசலக் கவிராயர் போன்றவர்களும் தலபுராணங்களைப் புலவர் நடையிலும், நாடகக் கீர்த்தனைகளை மக்கள் பாட்டு முறையிலுமே பாடினர்கள்.

இந்தப் பாரம்பரியப் போராட்டம் பாரதியில் வந்துதான் முற்றுப் பெற்றது. மக்கள் பாடலாகிய சிந்துவைக் காவிய ஆக்கத்துக்குப் பயன் படுத்தலாம் என்று காட்டியவர் பாரதியே, அவருடைய பாஞ்சாலி சபதத்திலும் கண்ணன் பாட்டிலும் உள்ள பாடல்களில் பெரும்பாலானவை சிந்துப் பாடல்களே.

## இந்திய......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கம் ஏற்படுத்தவில்லை என்று எண்ணுவது, பூனை கண்ணை மூடிக்கொண்டு உலகமெல்லாம் இருட்டாகி விட்டதென்று சொன்னதைப் போன்றதே.

'நேருவையும் காந்தி அடிகளையும் ஒப்பிட்டு, காந்தி அடிகளால் இந்திய இலக்கியங்களில் ஏற்பட்ட தாக்கம் மிக்க ஆழமானது என்று வேண்டுமானல் கூறலாம். ஆனல் நேருவின் தனியாண்மை வீச்சு இந்திய, குறிப்பாக இந்தி இலக்கியத்தில் மாறுதலை ஏற்படுத்தவே இல்லை என்று கூறுவது முற்றிலும் தவறு',

## உங்கள் நோய் என்ன? எழுதுக! பதில் கிடைக்கும்

**நீங்கள் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த ஒரு முக்கிய அம்சம் 'சுதந்திர'னில் ஆரம்பமாகிறது. உங்களின் நோய் என்ன என்பதை சுதந்திரனுக்கு எழுதுங்கள். இலவசமாக தக்க வைத்திய ஆலோசனைகளைப் பெறலாம். வைத்தியத்துறையில் அனுபவமும் பட்டமும் பெற்ற ஒரு வைத்திய நிபுணர் உங்களின் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதிலளிக்க முன் வந்துள்ளார்.**

**இப்புதிய அம்சம்—அதுதான் "உங்கள் நோய்?" 17-10-1965 ந் திகதி முதல் சுதந்திரனில் தொடர்ந்து வெளிவரும்.**

கொழும்பில் மத்திய ஆயுள்வேத வைத்திய சாலையில் பணியாற்றும், சித்த ஆயுள்வேதத் துறையில் பல வருட அனுபவங்களைப் பெற்ற வைத்திய கலாநிதி நா. கந்தையா அவர்கள் சுதந்திரன் மூலம் நேயர்கள் கேட்கும் வைத்திய சம்பந்தமான கேள்விகளுக்கு இலவசமான சிகிச்சை முறைகளையும் ஆலோசனைகளையும் தெரிவிக்க முன் வந்திருக்கிறார்.

உங்களுக்கோ உங்கள் குடும்பத்தவருக்கோ உறவினருக்கோ அன்றேல் உற்ற நண்பர்களுக்கோ உள்ள வியாதிகளைப்பற்றி இனிமேல் நீங்கள் தாராளமாகக் கேள்விகளைக் கேட்கலாம்.

சுருக்கமான முறையில் நோயின் விபரத்தை எழுதுங்கள். ஒருவர் ஒரே தடவையில் ஒரு கேள்வி மட்டும்தான் கேட்கலாம். போதுமான இடமின்மையால் தான் இக்கட்டுப்பாட்டை நாம் அனுசரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். வசதி கிடைப்பின் மேலும் இப்பகுதியை விஸ்திரிப்போம்.

உங்கள் பெயர்கள் உங்கள் கேள்விகளுடன் பத்திரிகையில் இடம்பெறுவதை நீங்கள் விரும்பாவிடில், புனைபெயரையோ அல்லது பெயரின் முதல் எழுத்துக்களையோ பாவிக்கும்படி நீங்கள் எங்களுக்குக் கூறலாம். இருப்பினும் உங்கள் முழுப்பெயரும் முகவரியும் ஒவ்வொரு வினவுடனும் இருப்பது அவசியம். கூடுமான வரை நீங்கள் இரகசியமாகவே வைக்கப்படும்.

கீழ்கண்ட விபரங்களை தவருமல் தரவேண்டும்.

1. பெயர்
2. முகவரி
3. வயது
4. ஆணு பெண்ணு
5. நோய் ஆரம்பமான காலம்
6. நோயின் தன்மை.

கீழே தரப்பட்டுள்ள முகவரிக் கட்டத்தைக் கத்தரித்து விஞ அனுப்பப்படும் தபால் உறையின் மேல் ஒட்டி அனுப்புங்கள்.

குடும்பப் பெண்களுக்கு இப்பகுதி பெரும் பலனைக் கொடுக்கும். அத்துடன் வாசகர்கள் கலருக்கும் உபயோகமாகவும் இருக்கும். நோய்கள் வராமல் தடுப்பதற்கான வழிவகைகளும் அடிக்கடி தெரிவிக்கப்படுமாதலால் இப்பகுதி பலருக்கும் உபயோகமாகும் என்று நம்புகிறேம். நல்ல முறையில் பயன்படுத்தி, நோயற்று வாழ்வோமாக.

—ஆசிரியர்

**உங்கள் நோய்?**
**'சுதந்திரன்'**
**த. பெ. 1183,**
**கொழும்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடோடி மன்னன் வரலாறு

## சிதைந்து வளர்ந்த புரட்சி நடிகருக்கு ஏற்பட்ட பொல்லாத சோதனைகள்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தமதுசொந்தத் தயாரிப்பாக 'நாடோடி மன்னன்' படத்தைத் தயாரித்துக்கொண்டிருந்தார்.

தனிப்பட்ட ஒருவருடைய கருத்துக்குமட்டும் முக்கியத்துவம் அளிக்காமல் ஒரு சில எழுத்தாளர்களைக் கொண்டு கதை இலாகா ஒன்றை அமைத்தார். வித்துவான் வே. இலட்சுமணன் இக்குழுவில் பிரதம பாகமேற்றுக் கடமை புரிந்தார். ரவீந்தர் என்ற புனை பெயரில் புகுந்த ஒரு முஸ்லிம் இளைஞரும் இக்குழுவில் இருந்தார்.

'நாடோடி மன்னன்' ஒரு மேல் நாட்டுக் கதையைத் தழுவியதாகும். 'சந்தாவின் கைதி' (Prisoner of Zanda) என்ற கதையைத் தழுவியே நாடோடி மன்னன் உருவாகத் தொடங்கியது.

சொந்தத் தயாரிப்பில் முழுக்கவனத்தையும் செலுத்த எம். ஜி. ஆர். தலைப்பட்டதும், சினிமா உலகத்தில் பெரும் பரபரப்பு ஏற்படத் தொடங்கியது. புரட்சி நடிகருக்கு திரை உலகில் எழுந்த பெரும் புகழைக் கொண்டே தத்தமது தயாரிப்புகளில் புரட்சி நடிகரைப் புகுத்தி வெற்றி காண முயன்ற தயாரிப்பாளர்கள் பலர் திண்டாட ஆரம்பித்தவர்.

விக்கிரமாதித்தன், ராஜா தேசிங்கு, பக்தாத் திருடன் போன்ற பிரமாண்டமான தயாரிப்புகளில் பல இலட்சக் கணக்கான ரூபாய்களை தயாரிப்பாளர்கள் முடக்கிவிட்டு காத்திருக்கும் வேளையில் புரட்சி நடிகர் மும்முரமாக தமது படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். முரண்பட்ட முக்கியமான இருபாகங்களைத்தானே ஏற்றதுமல்லாமல், இப்படத்தின் இயக்குநராகவும் எம். ஜி. ஆரே பணிபுரிந்ததனுல் ஏகப்பட்ட சிரமங்களை ஏற்கவேண்டியிருந்தது. ஓய்வு ஒழிச்சலின்றி எம். ஜி. ஆர். உழைக்கலானுர்.

கதை இலாகாவிடம் பொறுப்பைக் கையளித்துக் கொண்டு, தாம் பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு, வேறு காரியம் பார்க்க அவர் விரும்பவில்லை. படத்திலே வரும் உச்சக்கட்ட நிகழ்ச்சிகள் யாவும் புரட்சி நடிகரின் சொந்தக் கற்பனைகளேயாகும். இவற்றை எமக்கு அவரே கூறினுர். தான் இப்படப் பிடிப்பின் போதுபட்ட சிரமங்களனைத்தையும் விபரித்தபோது நாமே துணுக்குற்ருேம்.

### பானுமதியின் மகன்—பரணி

கதாநாயகியாக பானுமதி நடிப்பதற்கு ஒப்பந்தமாகி பல்லாயிரக் கணக்கான அடிகள் படமாக்கப்பட்டும் விட்டன. ஆனுல் திடீரெனபானுமதி நடிக்க முடியாதெனக் கூறிவிட்டாராம். இதற்குக் காரணம் பல விருபபினும், 'நாடோடிமன்ன'னுக்காகத் தயாரான சில கட்டங்களை பரணி ஸ்டுடியோவிலுள்ள தியேட்டரில் திரையிடப்பட்டதும், அதனை பானுமதியின் மகன் பரணி பார்த்ததும் ஒரு காரணமாகவும் இருக்கலாம் என்று சினிமா உலகில் கதை அடிபட ஆரம்பித்தது.

பானுமதி—ராமகிருஷ்ணன் தம்பதிகளுக்கு ஒரே மகனுன பரணி கல்லூரிப் படிப்பை ஆரம்பித்திருந்தான். வாலிபப் பருவத்தை எட்டிப்பிடித்துவிட்ட பரணி தனது தாயார் புரட்சி நடிகருடன் காதல் கட்டங்களில் தோன்றி நடிப்பதை ஆட்சேபித்தானும். விவகாரம் மிகவும் வேகமாகவளர்ந்தமையினுல், வேறுவழியின்றி பானுமதியை நாடோடி மன்னன் படத்திலிருந்து கத்தரித்தெடுத்துவிட, முதுகிலே கத்தி பாய்ச்சவேண்டிய நிர்ப்பந்தம் எம். ஜி. ஆர். புரொடக்ஷன்ஸ் கதை இலாகாவுக்கு ஏற்பட்டு விட்டதாம்.

### தந்திரக் காட்சி

அதிவேகமாக பானுமதி குதிரையில் செல்லுவதையும் பின்புறமிருந்து ஓர் கத்தி வீசப்பட்டு அவருடைய முதுகிலே பாய்வதையும் படத்திலே பார்க்கின் றீர்கள் அல்லவா? உண்மையில் அக்குதிரையில் செல்லுவது பானுமதியல்ல- அவரைப்போன்ற வேருேர் உருவமே. குதிரையும் நிஜக்குதிரையல்ல மரத்தாலான ஆடுகுதிரை-போலியானது. மேடை ஒன்றின் மேல் குதிரைபோன்ற பொம்மையை ஏற்றிவைத்து அதற்குமேல் பானுமதியைப் போன்ற உருவமுடைய ஒருவரை வைத்து, அக்குதிரையை ஆட்டினுர்கள். இதே வேளையில் பின்புறமுள்ள வெண்திரையில், ஏற்கனவே ஒரு மோட்டாரில் வேகமாகச்செல்லும் போது எடுக்கப்பட்ட காட்சிகள், படம் காட்டும் கருவி (Projector) மூலம் காட்டப்பட்டன. முன்புறமாகவுள்ள 'காமிரா' இதனைப்படமாக்கியது. இம்முறையை 'பாக்கிறவுண்ட் புரோஜெக்ஷன்' (Back-ground Projection( என்று கூறுவார்கள்.

பானுமதி நீக்கப்பட்டதும் கதையில் திருத்தம் ஏற்படுத்தப் பட்டது. இத்திருப்பம் எம். ஜி. ஆருக்கு மிகவும் சிலாக்கியமாகிவிட்டது. தமது கொள்கையை இத்துறையிலும் புகுத்த அவரால் முடிந்தது.

### நான்கு இனமும் இணைந்தன

திராவிடம்—தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு பகுதிகளையும் உள்ளடக்கியதல்லவா? அத்தகைய திராவிட நாட்டுக்காகப் பாடுபடும் புரட்சி நடிகர் தமது படத்தில் மேற்படி நான்கு மொழியாளர்களுக்கும், சமசந்தர்ப்பம் அளிக்கத் தக்க பேற்றினைப் பெற்ருர்.

தமது தயாரிப்பினுல் தாரணியிலே பெரும்புகழை ஈட்டி விட நினைத்த புரட்சி நடிகருக்கு பானுமதியின் தகராறு ஓரளவு மன உறுதிக்குச் சோதனை ஏற்படுத்தியது என்பது என்னமோ உண்மைதான். எதற்குமே கலங்காத கடினமான உறுதியுடைய புரட்சி நடிகரின் உள்ளம் கலக்கமடைந்தது. ஆனுல் அக்கலக்கம் தெளிவடைந்ததும், புயலுக்குப்பின் ஏற்படும் அமைதியினை அவரிடம் கண்ட கலைஞர்களுக்கும் புத்துணர்ச்சி ஏற்பட்டது.

திராவிட இனத்தவர்களாகிய நால்வரையும் இணைக்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டதே என்ற திருப்தியும் மகிழ்ச்சியும் அனைவரிடத்திலும் ஏற்பட்டது.

புரட்சி நடிகரின் தாய்மொழி மலையாளமாகும். ஆகவே அவர் கேரள நாட்டைப் பிரதிபலிக்கிருர். பானுமதி தெலுங்கர். ஆந்திராவை அவர் பிரதிபலிக்க, மைசூரைத் தாயகமாகக் கொண்ட சரோஜாதேவி கன்னடத்தை பிரதிபலித்தார். எம். என். ராஜம் தமிழராதலால் தமிழகம் அவரின் மூலம் பிரதிபலித்தது. ஆகவே நான்கு இன மக்களுக்கும் இக்கதையிலேயே உறவு கற்பிக்கப்பட்டது. அத்துடன் மட்டுமல்லாமல், பட்டாபிசேகக் காட்சியிலும் நான்கு மொழிப் பாடல்களும் இடம் பெறுகின்றன.

மலையாளத்திலே பாடப்பட்ட பாடல், மலையாள கிராமியப் பாடல் மெட்டிலே, திராவிட நாட்டுப் பெருமையைச் சித்தரிக்கிறது. இப்பாடல் முழுவதும் படத்தில் இடம் பெறவில்லையெனினும் ஒரு இசைத் தட்டின் இரு பகுதிகளுக்குமாக—மொத்தம் ஏழு நிமிடங்கள் இப்பாடல் ஒலிப்பதிவானது. திராவிட நாட்டுச் சிறப்பினை மலையாளத்தில் பரவச் செய்ய வேண்டுமென்ற அவாவினுல் இப்பாடலின் பூரா பகுதியையும் இசைத்தட்டுகளிலே பதியவைத்து மலையாளம் எங்கும் ஒலிக்கும்படி எம். ஜி. ஆர். செய்து வைத்தார்.

### எம். ஜி. ஆருக்கு இலாபமில்லை

படம் ஓரளவு முடிவடைந்ததும், எண்ணற்ற சிரமங்களைத் தாங்கிய புரட்சி நடிகர், தமது படம் வெற்றி பெறும் என்பதில் சந்தேகப்பட ஆரம்பித்தார். இதன் விளைவாக படத்தின் உரிமைகளை மாவட்ட ரீதியாக, முழுப்படியாக [illegible] செய்துவிட்டார். மேலதிக வருமானத்தில் புரட்சி நடிகருக்குப் பங்கு வைக்காமல் வினியோகஸ்தர்களின் பொறுப்பி[illegible] முழுவதையும் விட்டுவிட்டார்.

புரட்சி நடிகரை அவநம்பிக்கை கொள்ளச் செய்த காரியங்களும் மிகவும் முக்கியமானவை, சில நந்திரக் காட்சிகள் களவாடப்பட்டமையே யாகும். தமது படத் தயாரிப்பின் போது, சந்தேகத்துக்குரிய நபர்கள் எவரையும் புரட்சி நடிகர் படப்பிடிப்பைப் பார்க்க அனுமதிக்கவில்லை. இருந்தும் நாடோடி மன்னனுக்குச் சுடப்பட்ட சில தந்திரக்

(13-ம் பக்கம் பார்க்க)

எழுதுவது:
'ஈழத்தரசன்







அங்கம்
ஆறு

---

அட்லாய் ஸ்டீபன்சன் — வாழ்க்கைச் சித்திரம் 5 — வெறஸ்



13. ஜெனரல் ஐசன்ஹோவருக்கு எதிராக, 1952ல் நிகழ்ந்த ஜனதிபதி தேர்தலில், ஜனநாயக கட்சி சார்பில் அட்லாய் ஸ்டீபன்சன் போட்டியிட்டார். 1956லும் மீண்டும் போட்டியிட்டார். இரு தடவைகளிலும் தோற்றலும் அவருடைய விளம்பர செயல் முறைகள் அமெரிக்க மக்களின் கவனத்தை ஈர்த்தது.



14. 1952ம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் 56 வரை சொந்த வாழ்வில் சில சாதனைகளைச் சாதிக்கலானுர். சட்டத்துறையில் மிகுந்த செல்வாக்குப் பெற்று வந்தாலும் உலகத்து மக்களுக்கான கடமைகளுக்கும் சிறு பொழுதை ஒதுக்கினுர். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளுக்கெல்லாம் சென்று, மக்களின் ஆக்க வேலைகளையும் [illegible] யும் அறியலானுர்.




15. 1961ம் ஆண்டு தை மாதம் ஜோன் எப் கென்னடி ஜனதிபதியான போது, சர்வதேச நலனில் அக்கறை கொண்ட, அனுபவசாலிகளின் உதவி அவருக்குத் தேவைப்பட்டது. கொம்யூனிச ஆக்கிரமிப்புகள் உலகத்து நாடுகளை விழுங்கிவிட எழுந்து ஆரவாரித்தன. அவற்றைக் கட்டுப்படுத்த விரிவான-விரைவான திட்டம் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உங்கள் வானொலியில்'..

இலங்கை வானொலியில் அவ்வப்போது நிகழும் விசேட நிகழ்ச்சிகளை வாராவாரம் இப்பகுதியில் நீங்கள் பார்த்து அறிந்துகொள்ளலாம்.

●

**3-10-65—ஞாயிறு**

காலை-7-00 மணி: நவராத்திரி-சகலகலாவல்லி மாலை.

பகல்-1-00 மணி: குதூகலம்

மாலை-5-15 மணி: பாட்டு கமலாவதி சபாரத்தினம்.

7-00 மணி: பாட்டு-நாகலட்சுமிசத்தியவாகீஸ்வரன்.

7-30 மணி: நாடகம்: 'உயிரோவியம்'.

சரஸ்வதி இராசதுரைஎழுதியது·

தயாரிப்பு: 'சானு'

8-00 மணி: முஸ்லிம் நிகழ்ச்சி.

9-15 மணி: மனைவிளக்கு-பெண்கள் பகுதி.

●

**4-10-65—திங்கள்**

காலை-7-00 மணி: நவராத்திரி-மகிஷாசுரமர்த்தினி ஸ்தோத்திரம்.

மாலை-5-05 மணி: வாணி விழா-நாதாஞ்சலி.

6-15-மணி: கிராமசஞ்சிகை இளம் விவசாயக் கழகம்.

6-45- மணி: வீணை-இலட்சுமி மாத்ருபூதன்.

7-15 மணி: பாட்டு-இராமேஸ்வரி பாலகிருஷ்ணன்.

8-45- மணி: இஸ்லாமிய பாடல்—ஏ. ஆர். ஜெய்னுல் ஆப்தீன்.

●

**5-10-65—செவ்வாய்**

மாலை-5-15-மணி: வளரும் பயிர்.

மாலை-6-15-மணி: கிராம சஞ்சிகை.

மாலை-7-00-மணி: வயலின் பத்மாவதி பூர்ணானந்தா, என். பாலசுப்பிரமணியம்.

இரவு-8-30 மணி: பேச்சு:- 'நாகூர் நாயகம்' எம். ஐ. எம். ஜலீல்.

இரவு-9-45-மணி: நாத சுரம்-எஸ். சிவசாமி.

●

**6-10-65—புதன்**

மாலை-6-15 -மணி: கிராம சஞ்சிகை-'விதியின் விளையாடல்'

மாலை-6-45-மணி: பாட்டு-லீலா துரைசிங்கம்.

மாலை-7-45- மணி: பேச்சு-'அகல இந்திய கீழ்த்தேய மாநாடு.'

மாலை-8-30 மணி: இஸ்லாமிய பேச்சு! முஸ்லிம்மாணவ இலக்கியம் ஏ. ரகுமான்.

இஸ்லாமிய பாட்டு-என்.எம். ஏ. பைதா.

●

**7-10-65—வியாழன்**

மாலை-7-15-மணி: வயலின் -ஏ. சங்கரஐயர்.

மாலை-7-45 மணி: தொடர் நாடகம் -டாக்டர் ரஞ்சிதம், 'கிருஷ்ணு' எழுதியது.

தயாரிப்பு: 'சானு'

மாலை-8-45-மணி: இஸ்லாமிய பாடல்-ஐனூபா அலீஸ்.

●

**8-10-65—வெள்ளி**

காலை-7-30- மணி: பக்திப் பாடல்- உருத்திராணி, ஸ்நலநாதன்.

மாலை-6-15 -மணி: கிராம சஞ்சிகை-'வாழ்வு வளம் பெற', 'யுனெஸ்கோ சித்திரம்'

மாலை-6-45 மணி 'முக்தி நெறி'

மாலை-7-15-மணி: பாட்டு-ரஞ்சிதம், அரியதுரை.

இரவு-8-15-மணி: முஸ்லிம் நாடகம்-'சாப்பாட்டு ரகளை' எம். ஏ. முகமது எழுதியது.

இரவு-9-15- மணி: பேச்சு-'பூமியின் மின் ஈர்ப்பு- வி. கே. நல்லையா.

●

**9-10-65----சனி**

மாலை-6-15-மணி: கிராம சஞ்சிகை-இளம் விவசாயக் கழகம்.

மாலை-7-00- மணி: இசைக் கச்சேரி-பரம் தில்லைராசா.

மாலை-8-15 மணி : முஸ்லிம் பேச்சு: விசுவாசியின் லட்சணம்-முகம்மது அலீஸ்.

இரவு-8-30 மணி: இஸ்லாமிய பாட்டு-ஏ. எச். எம். முகைதீன்.

இரவு-9-15- மணி: பேச்சு-'உலகநதிகள்'-நைல்-எஸ். செல்வநாயகம்.

இரவு-930-மணி: இலங்கைச் சித்திரம்:-இலங்கையின் [illegible] விழ்ச்சி-தயாரிப்பு: சி. வி. இராஜசுந்தரம்.

# ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்
## வேகமாக வளருகிறான்

கடைசி கண்டிய அரசனை ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் வரலாறு சரித்திர மாணவர்கள் நன்கு அறிந்ததே. ஆனால் இவ்வரலாற்றிலும் பல பேருண்மைகள் மறைக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம். கண்டியின் கடைசி மன்னனின் வாழ்க்கையை ஒட்டிய சகல மேலத்தேய-கீழத்தேயசரித்திர நூல்களையும் ஆராய்ந்து உண்மையான வரலாற்றை நாடகமாக்கியுள்ளார், கொழும்பு சிவசக்தி கலை அரங்கைச் சேர்ந்த திரு. ஆர். ஜெகசோதி.

சரித்திர மாணவர்களுக்கும், கலா இரசிகர்களுக்கும் பயனளிக்கத்தக்க வகையில் இந்நாடகத்தை மேடையேற்ற சிவசக்தி கலைஅரங்கு பெருமுயற்சிகளைச் செய்து வருகிறது. கண்டிய மன்னன் காலத்தை ஒட்டிய காட்சி அமைப்புகள், உடை அலங்காரம் மட்டுமல்லாமல், அக்காலத்துக்கேற்ற இசையையும் ஆராய்ந்தறிந்து அதற்கேற்றபடி சகல அமைப்புகளையும் செய்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

நவம்பர் மாதம் 6ம் திகதி யாழ். நகர மண்டபத்திலும் 8ம் திகதி பருத்தித்துறையிலும் இந்நாடகம் முதன் முதலில் அரங்கேற்றப்படும். கதை வசனம் பாடல்களை எழுதி இசை அமைத்த திரு. ஜெகசோதியே இயக்குநராகவும் பணி புரிகிறார். மொத்தம் 40 நடிகர் நடிகைகள் இந்நாடகத்தில் பங்கு கொள்ளுகின்றனர்.

கண்டிய நடை உடை பாவனைகளைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் மேடையேறும் முதல் நாடகம் இதுவாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கையின் பல பாகங்களிலும் இந்நாடகம் அரங்கேற்றப்பட விருக்கிறது. சரித்திர நாடகமாதலினால் ஒவ்வோர் நகரிலும் மாணவ மாணவிகளுக்கான விசேட காட்சிகளும் காண்பிக்கப் படுமாம். இந்நாடகத்துக்கு யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் வாய்ந்து விளங்கும் கண்ணன் மெல்லிசை வாத்தியக் குழுவினர் பின்னணி இசை அளிப்பர்.



பல தமிழ்ப் படங்களில் தோன்றி புகழீட்டிய முன்னணி நட்சத்திரமான திருமதி ராஜசுலோசனாவின் நாட்டிய விருந்து 6ம் திகதி வியாழக்கிழமை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற விருக்கிறது. வல்வை முத்துமாரியம்மன் கோயில் நிதிக்காக நிகழும் இந்நிகழ்ச்சியை சிவா பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். என். சிவசுப்பிரமணியம் ஏற்பாடு செய்துள்ளார். சினிமாஸ் அதிபர் திரு. கே. குணரத்தினம் தலைமை தாங்குகிறார்.

# கொழும்பில் நடனக் கலை விழா

கொழும்பு விவேகானந்த நடனமன்ற நிதிக்காக இத்திங்கள் 9, 10ம் திகதிகளில் கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் நடனக்கலை விழாவொன்று நடைபெற விருக்கிறது. இவ்விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிக்கு திரு. பி. நவரத்தினராசா கியூ. சி. தலைமை தாங்குகிறார். இரண்டாம் நாளைய நிகழ்ச்சிக்கு இந்தியத் தூதுவர் டாக்டர் பீம்சேன் சர்ச்சார் தலைமை தாங்குகிறார்.

திருமதி கமலா யோன்பிள்ளை நிகழ்ச்சிகளை நட்டுவாங்கம் செய்கிறார். திருவாளர்கள் த. இரத்தினம், வே. சங்கரலிங்கம், சுப்பையா ஆகியோர் முறையே மிருதங்கம், வயலின் கிளாரினட் வாத்தியங்களை மீட்டுவார்கள்.

இருநாளைய நிகழ்ச்சியிலும் பதினைந்துக்கு மேற்பட்ட நடனங்கள் இடம் பெறும்.






அசட்டு ராமுவின் மருண்ட பார்வையிலே துள்ளும் பயத்தை. துரத்தியடிக்க துணிவோடு முனைகிறான் இளைஞன் இளங்கோ இளங்கோ, ராமு இருவருடைய பாகத்தையும் ஏற்றிருப்பவர் யார் என்று நாம் கூறவேண்டியதில்லை. சினிமாஸ் அளிக்கும் தீபாவளி திரைவிருந்தான ''எங்க வீட்டுப் பிள்ளை'' பலவர்ணப் படம் பதில் கூறும்.

# நாடோடி மன்னன்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சிகளின் முறைகள் களவாடப்பட்டு, வெவ்வேறு படங்களில் புகுத்தப்பட்டு, அவை நாடோடி மன்னன் திரைக்கு வருமுன்னரே வெளியாகி இரசிகர்களின் பாராட்டுகளையும் பெற்றுவிட்டன. கருத்துக்களைக் களவாடி, அவற்றைத் தமது சொந்தக் கற்பனையாக்கி, விற்பனை செய்துவிடும் அசகாய சூரர்கள் இன்றும் திரைப் படத் துறையில் பிரபலஸ்தர்களாகவே விளங்கி வருகின்றனர்.

படம் முடியும் தறுவாயில் படப்பிடிப்புக்கான கச்சா பிலிம் கட்டுப்பாடும் அமுலுக்கு வந்தது. போதுமான படப் பிரதிகள் எடுக்கவும் இயலவில்லை. கேவாக் கலரில் சுடப்பட்ட கட்டங்கள் யாவும் பம்பாயில் கழுவிப் பிரதிகள் எடுக்கப்பட்டன. இதற்கும் போதிய அளவு பிலிம் கிடைக்காமல் பெரும் கஷ்டம் ஏற்பட்டது. இதற்கிடையில் காங்கிரஸ் ஆதிக்கத்திலுள்ள அரசாங்கம் நாடோடி மன்னன் படத்தின் கருத்துக்களைச் சிதைக்க, கத்தரிக்கோலை தணிக்கையாளரிடம் கொடுத்து வைத்திருந்தது.

கண்டத்துக்கு மேல் கண்டத்தை எதிர் நோக்கிக் கொண்டு, பெட்டிகளுக்குள் சுருண்டு கிடந்த நாடோடி மன்னன் வெளிவர முடியாமல் தவித்தான். உழைப்பால் உடல் சோர்ந்து வாடிய புரட்சி நடிகரின் உள்ளத்தை எண்ணற்ற ஈட்டிகள் சிதைத்துச் சின்னபின்னப்படுத்தின.



எழில் பூத்த இள நங்கை அருகே நிற்க ஏதோ வேறு சிந்தனையில் இளைஞன் தடுமாறுவதேனோ? சிலோன் தியேட்டர்ஸ் அளிக்கும் தீபாவளித் திரை விருந்தான வர்ணப் படம் 'புதிய பறவை'யில் சிவாஜி கணேசன், சரோஜாதேவி.

'பிலிம்' கிடைக்கவில்லை.

கருத்துக் களவு போனது.

பணம் யாவும் கரைந்து விட்டது.

கலையுலகம் கேவலப் படுத்தக் காத்துக் கிடந்தது.

அரசாங்கத் தணிக்கைக் குழு கண்களிலே விளக்கெண்ணெய் விட்டு, கத்தரிக்கோலுடன் காத்துக் கிடந்தது.

உயர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இடைப்பட்டியிலே நின்று திண்டாடிக் கொண்டிருந்த புரட்சி நடிகரின் உள்ளத்திலே புத்தொளி தோன்றியது. நம்பிக்கை சுடர் விட்டது. தனக்குத் தைரியமூட்டவும், தக்க பலத்தைத் தரவும் வல்ல ஒரு வேலையைத் திடீரெனச் செய்தார்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைப் பிள்ளையோடு; குழந்தையுள்ள மற்ற தாயின் கர்ச்சனை?

'யாரும் அடிக்கவில்லை; விளையாடுகிறார்கள். குழந்தைகள்தானே; சண்டை பிடிக்க நான் பார்த்துக் கொண்டிருப்பேனா?' நான் சமாதானம் சொன்னேன்; ஆனால் அவள்...? எதிர்பாராத அதிர்ச்சியினால் ஏற்கெனவே செவ்வலரியாக இருந்த சந்திரனின் பிஞ்சு முகம் பூவரசம் பூவாக மாறியிருந்த வேளையில் 'படக்' கென்று தன் நண்டுக் கையால் அவன் பாற்சொக்கத்தைத் திருகி ஒரு இடி யிடித்தாள். சந்திரனுக்கு இடிக்கவில்லையவள்; என் இருதயத்தையே திருகி இடித்துவிட்டாள்! பிள்ளையின் அல்லிக் கண்களில் பனித்துளிகள் போல் கண்ணீர்!

'தன் பிள்ளை பொன்; அயற் பிள்ளை மண்', என்ற எண்ணம் போலும் அந்தத் தாய்க்கு, காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு தான். இந் நிலையில் 'தாயன்பு' என்னும் பரந்து பட்ட சக்திக்கு அர்த்தம்......? எல்லோரும் கலைந்துவிட்டனர். நான் மட்டும் குருத்து மண்ணில் அமர்ந்து கொண்டு என் மனதையே குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தேன்.

இரண்டு மூன்று நிமிடங்கள் கூடக் கடந்திருக்காது; எங்கோ ஒரு இரைவு. உளறும் ஒலிபெருக்கியோ? அல்லது திரௌபதியம்மன் கோயில் தீப்பள்ளயத் திருவிழாவின் 'தவநிலை'க் கட்டம் நமக்குத் தெரியாமல் நடை பெறுகிறதோ? அதற்குக் காலம் கிடக்கிறதே; இது வெறும் பிரமை! அப்படியானால் அந்த இரைச்சல்? ஆமாம், குட்டி நாய் குரைக்கப் பெரிய நாய்கள் கடித்துக் கொள்ளுவது போல் சிறுவர்கள் விளையாடிய 'குஸ்தி' பெரியவர்களைப் படையெடுப்புக்குத் தூண்டியதன் எதிரொலிதான் அந்த இரைச்சல்! 'பெண்டுகள் கூடிடில் பெருத்த சண்டையாம்' என்றது உண்மை தானுக்குய்?

அச் சிறுவர்கள் என்ன வைரம் பாராட்டியா சண்டைபிடித்தனர். அழுக்காறில் குளித்துக்கொள்ள அரும் புள்ளங்கள்! அவைகள்! இயல் பூக்கத்தின் எழுச்சியால் ஏற்பட்ட ஓர் சிறு முயற்சி அந்தக் 'குஸ்தி'! போக்கைப் புரிந்து வழி நடத்தத் தெரிந்த பெற்றாரின் கூட்டத்தைச் சேர்ந்தவளாக இருந்தால் அந்தத் தாய் அப்படிச் செய்திருப்பாளா? சண்டைதான் வந்திருக்குமா? குழந்தையின் எதிர்காலம் வாழ்வதும் தாழ்வதும் பெற்றாரின் வழி நடத்துதலில்தான் தங்கியிருக்கிறது. இதை உணர்த்துபவர்களாக ஏன் அந்தத் தாய் இல்லை?

அறியாமை! அறியாமை!! அறியாமை!!!

குழந்தைகளின் உலகம் புதுமையானது! 'சுவை' என்னும் மையத்தில் சுழலும் 'எழுச்சி' யுலகம் அது. நல்லதும் கெட்டதும் கலந்துதான் இருக்கும். நெல்லில் பதரில்லாமற் போகுமா?

ஏனோ என் சிந்தனை அரட்டுத் தனமாக விரிகின்றது. யாரது? இரண்டு சிறுவர்கள் வருகிறார்கள்...? சீச்சீ, அவர்களாக இருக்காது? கண்கள் என்னுடைய 'கண்'கள் தாம். கதிரேசும் சந்திரனுமே தான்! இனிப்புச் சாப்பிட்டுக்கொண்டு வருகிறார்கள்! 'குஸ்தியும்' அதையடுத்த 'கொம்பலும்' ஓய்ந்து ஒரு 'சாமம்' கூட ஆகவில்லை. ஆனால் குழந்தைகளின் பாங்கு என் தத்துவச் சர்ச்சைக்கு விடை தந்துவிட்டது.

அந்த விடைதான் என்ன?

அவர்கள் குழந்தைகள்! பேசுவது மழலை! பெறுவது இன்பம்! வேண்டுவன சுவை! விளைவன விளையாட்டு!

(யாவும் கற்பனை)

# சங்கப் பலகை

## வரதரின் பல குறிப்பு 1965—66

பதிப்பு:
தி. ச. வரதராசன்,
'வரதர் வெளியீடு'

கிடைக்குமிடம்:
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விலை: ரூபா. 10.00

**1965**—1966-க்குரிய வரதரின் பல குறிப்பு வெளிவந்துவிட்டது.

இன்றையசமுதாய வாழ்க்கையில், தினமும் அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படும் பல விடயங்கள் அடிக்கடி வினாவாக எழும்பும்! வாழ்வில் மிக முக்கிய தேவைகருதி இவை தேவையாகின்றன. எல்லா விபரங்களையும் எவருமே தெரிந்து வைத்திருக்க முடியாத். அது மட்டுமல்லாது சில விடங்களின் முகவரியோ தன்மையோ கூடமாறி விடலாம், அவற்றை யெல்லாம் நினைவில் வைத்திருக்க வியலுமா?

புதிய சொற்களை நினைவுறுத்த அகராதி உதவுவது போன்று, புதிய அவசிய விடயங்களை நினைவுறுத்த மேலை நாட்டவர் 'டிறெக்ரறிகளை' உபயோகிப்பர். மேலை நாட்டாரது ஸ்தாபனங்களின் மேசையில் 'ஒரு டிறெக்ரறி' இருந்து எத்தனையோ பல வினாக்கள் முட்டும்போது—பிரச்சினை எழும்பும் போது—உடனுக்குடன் பதில் கொடுக்கும் சஞ்சீவியாக உதவும்.

இந்த அரிய உயரிய, பெறுமதி வாய்ந்த 'டிறெக்ரறி' ஒன்றை இலங்கைத் தமிழ் பிரசுரகர்த்தார்கள் எவருமே வெளியிட எண்ணவுமில்லை; முயலவுமில்லை. சிங்களத்தில் கூட ஒரு 'டிறெக்ரறி' உண்டு. இந்தியாவிலிருந்து தமிழில் வெளிவந்ததுண்டு. ஆனால், ஈழத்தில் .........! ஈழத்தில் எதிலுமே தனித்தன்மை (ஒரிஜினலிற்றி) குறைவுதானா? எல்லாவற்றிலும் முதுகு சொறிந்து சொறிந்து தனித்தன்மையை இழந்துவிட்டனரா?

'இல்லை! இல்லை, என்ற ஒலி கேட்கின்றது. இலங்கைத் தமிழ்ப் பிரசுரகர்த்தாக்களாலும் முடியும் என்று குரல் கொடுக்கின்றார் வரதர். குரலை மட்டுமா கொடுக்கின்றார்—செயலுருவும் கொடுத்தேவிட்டார்.

ஒருவர் செய்வதையே திரும்பத்திரும்ப மற்றவர் செய்யும் ஈழத்து அறிஞரது, பிரசுரகர்த்தர்களது பாதையை விட்டு விலகி, புதுமை செய்து காட்டி விட்டார் வரதர். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக 'டிறெக்ரறி' தமிழில்—வரதரின் பல குறிப்பு— ஆகி வெளிவந்துள்ளது. இது இரண்டாம் பதிப்பாகும். முதற்பதிப்பை விட எத்தனையோ அம்சங்களிலிது சிறப்புற்றதுடன், இன்னு மதிக விடயங்களையு மடக்கி வெளியாகியுள்ளது.

பலபகுதிகளாகப் பிரித்து, பகுதிகளாக்கி விபரம் தரப்பட்டுள்ளமையும், அகரவரிசையாக உடனடியாகப் பார்க்கக்கூடியதாக அமைத்துள்ளமையும், ஒரு தமிழ் மகனுக்கு இன்றைய தேவை யாவற்றையும் உற்று நோக்கித் தொகுத்துள்ளமையும் இதனை யுபயோகிப்பவருக்கு வசதியாகின்றது.

பாராளுமன்ற விபரங்கள், தாபனங்களின் விபரங்கள், வரலாற்றுக் குறிப்புகள், 1963—1964 முக்கிய இலங்கைச் சம்பவங்கள், அவசிய கட்டணங்கள், இறக்குமதி ஏற்றுமதிகள், முக்கிய தொழிற்சாலை விபரங்கள், குடிப்பரம்பல், பெரியார்களது நினைவுதினங்கள், நாடக மன்றங்கள், கலைஞர்களது முகவரிகள், பிரமுகர்களது முகவரிகள், எழுத்தாளரது முகவரிகள், பேச்சாளரது முகவரிகள், வைத்தியர்களது முகவரிகள், புத்தக விபரங்கள், பத்திரிகைகள்............ இப்படிப் பலப்பல இப்பல குறிப்பில் உண்டு 700 பக்கங்களுக்குமேல் உள்ள இந்நூல், இலங்கைத் தமிழ் மகனுக்கு உடனுக்குடன் வழிகாட்டும் ஒரு ஒப்பற்ற ஏடாகும்.

எல்லா தாபனங்களிலும் மட்டுமல்ல, ஒவ்வொருவர் மேசையையும் அலங்கரிக்க வேண்டியது 'வரதரின் பல குறிப்பு'—

இப்பல குறிப்பு ஆண்டினிடையில் வெளிவராது, ஆண்டு தொடங்கி 3 மாதங்களுக்குள்ளாகிலும் கிடைப்பின் நன்றாகும் என்பது எமது எண்ணமாகும்.

இப்பல குறிப்பின் அடுத்தடுத்த பதிப்புகள் இன்னு மதிகவிடயங்களைத் தாங்கி வர ஏதுவுண்டு. 'டிறெக்ரறி' என்பது ஆண்டாண்டு வளர வேண்டிய ஒன்றாகும்; எல்லாரது ஒத்துழைப்பும் அதற்குத் தேவை. வரதர் முயற்சியின் சிறப்பினால், தமிழுக்கு ஒரு புதிய ஏட்டையளித்து, சமுதாயத்தட்டில் நிறைவுபெற வழியாயமைந்தது. வரதர் வாழ்த்தப்பட வேண்டியவர்.

'புதுமைலோலன்'

பிறந்தகத்திற்கு

# பெருமை தேடிய பெரியார்

## கொல்லங்கலட்டிக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை பேச்சு

'தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் திறம்பட நடாத்த அதற்குரிய தலைவனைத் தந்துதவியது இக்கிராமமாகும். இதனால் நீங்களும் நாங்களும் பெருமைப் படுகிறோம்' என்று தமிழரசுத்தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் அமரர் வன்னியசிங்கம் பிறந்தகமாகிய கொல்லங்கலட்டியில், கொல்லங் கலட்டிப்பிள்ளையார் கோவில் வீதியில் மாவைக் கொல்லாங்கலட்டிசனசமூக நிலைய ஆதரவில் நடைபெற்ற அமரரின் மாபெரும் ஞாபகார்த்தக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு மேற்படி நிலையத்தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான திரு. வ. சரவணமுத்து அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தமிழரசுத் தந்தை தொடர்ந்து பேசுகையில் 'அமரர் வன்னியசிங்கம் தமிழரசுக் கட்சியைக் கட்டி வளர்த்த



திரு. செல்வநாயகம்

வரென்றும், ஓர் உயர் சைவ வேளால குலத்திற்பிறந்தும் அவரைப்போல் சாதிப்பாகுபாட்டை நீக்க வேறொருவரும் பாடுபடவில்லை யென்றார். அவர் சொல்வதைச் செயலில் செய்து காட்டும் வீரர். குறிப்பாக கடந்த தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயக்குழு முன் அவர் தொகுதி வாரியாக ஆதாரங்களுடன் எம் கட்சியின் பக்கத்தை எடுத்துரைத்தமையே அவரின் திறமைக்கு எடுத்துக்காட்டாகும்.'

திரு. அமிர்தலிங்கம், திருமதி. அமிர்தலிங்கம், ஜனாப் மசூர் மௌலானா, ஈழவேந்தன், தீவுப்பகுதி வாலிப முன்னணிச் செயலாளர் திரு. திருநாவுக்கரசு, மயிலணி சிவசண்முகநாதன், நியாயவாதி திரு. ஆலாலசுந்தரம், தெல்லிப்பளைக் கிராம சபைத் தலைவர் திரு. த. செல்வரத்தினம், வழக்கறிஞர் திரு. சு. நடராசா ஆகியோரும் பேசினர்.

அமரர் தினமான 17-9-65 வெள்ளிக்கிழமையன்று நண்பகல் கொல்லங்கலட்டி விநாயகப் பெருமான் ஆலயத்தில் தமிழரசு வாலிப முன்னணியினால் ஓர் பிரத்தியேக அபிசேகமும் பூசையும் அமரரின் ஞாபகார்த்தமாக மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டது.

# அண்ணல் அடி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் செய்தியை அறிந்தார் அண்ணலார். பெரிதும் வருந்தினார். அறப்போர் முறையினை அறியாதவர்களின் அறியாமையை அறிந்த அண்ணலார் அமைதியை நிலை நாட்டும் ஆக்க வேலைப் பாட்டில் ஈடுபட்டார்.

அமைதியான முறையில் அறப்போராட்டத்தை நிகழ்த்தும் அண்ணலே- இந்த நாட்டிலே நடக்கும் கலவரங்களுக்கெல்லாம் காந்தி அடிகளேதான் காரணம் எனக் கருதி அவர்மேல் வீண்பழியைச்சுமத்தி, அவரைக்கைது செய்து ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தனர். உடல் நோய் காரணமாக—ஆறு ஆண்டுகள் சிறைச்சாலையில் இருக்க வேண்டியவர்—இரண்டு ஆண்டுகளே அவரைச் சிறைச்சாலை விரும்பியது.

தேசிய உணர்ச்சிகொண்ட காந்தி ஏன் இவற்றை யெல்லாம் செய்தார்? இன்பமாகக் கழிக்க வேண்டிய வாழ் நாளைச் சிறைக்கூடத்தில் ஏன் கழித்தார்? சிறந்த சட்ட வல்லுனராகத் திகழ்ந்த காந்தி அடிகள் ஏன் சிறைச்சாலை சென்றார்? தனக்காகவா? அல்லது தனது குடும்பத்திற்காகவா? சிறைச்சாலை, இல்லையே—

### விடுதலை உணர்வு

பாரத இனங்கள்—பாரத மொழிகள்—அடிமைப் பட்டவையாக வாழக் கூடாது, என்ற தன் நோக்கத்தைக் [illegible] தனது இனத்தையும் தனது மொழியையும் சுதந்திரமாக வாழவைத்த பெருமை பெற்றார்.

உலகம் போற்றும் உத்தமராம் அண்ணல் காந்தி அடிகளுக்கு தனது நாட்டைப் பற்றிய எண்ணத்திலிருந்து விடுதலை பெறவில்லை. தனது நாட்டின் நிலையை மற்றைய நாடுகளுடன் ஒப்பு நோக்கினார். சமூகத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும், சமயத்துறையிலும், ஒற்றுமையிலும் பின் தங்கிய நாடாகவே காட்சி அளிக்கிறது என்பதை உணர்ந்தார். இத்துறை முன்னேற்றங்களுக்குரிய வழிவகைகளைக் காட்டினார். அவ்வழிவகைகளின் மூலம் நாட்டை முன்னேற்றினார்.

### இறுதி

வெள்ளையனே வெளியேறு என்று கோசமிட்டு தனது கடமையைக் கண்ணும் கருத்து மாகச் செயலாற்றி 1948ம் ஆண்டு சனவரித் திங்கள் 30ந் திகதி மாலை வழிபாட்டுக் கூட்டத்திற்கு பிர்லா மாளிகையை விட்டு அடிகளார் புறப்பட்டார். வழிபாட்டு மைதானத்தில் கூடி இருந்தவர்கள் அவர் வரவை மிக ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மேடை அருகில் வந்து கொண்டிருக்கையில் 'விநாயக நாதுராம் கோட்சே' வடிவில் வந்த அக்கூற்றுவன் அடிகளாரைக் கை கூப்பி வணங்கிய பின்னர் தன் மடியிலே வைத்திருந்த கைத் துப்பாக்கியால் அடிகளாரைச் சுட்டு வீழ்த்தினன்.

இந்திய நாட்டிலே பிறந்த இந்திய நாட்டிலே வளர்ந்த இந்திய நாட்டு மன்னனும் அண்ணல் இந்திய மக்களை விட்டுப் பிரிந்து விட்டார்.

அந்நாட்டின் மன்னிலே அன்பு விளக்காய்— அறிவுச் சிகரமாய்— ஆத்ம சோதியாய் நின்ற அடிகள், உலகம் போற்றும் உத்தமராம் அண்ணலின் அடிச் சுவட்டைப் பின்பற்றியோர் ஒரு காலமும் தோல்வி அடைய மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடலிலிருந்து மீட்கப்பட்ட நாடு

நெதர்லான்ட்சில் இருபது ஆண்டுகளுக்கு முன்பாக சைடர் கடலிலிருந்து மீட்கப்பட்ட வடகிழக்கு போல்டர் மாவட்டத்திற்கு இன்று தலைநகரமாக உள்ள எம்மிலூர்ட் கடந்த ஆண்டில், தான் தோன்றிய இருப்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. உள்நாட்டில் கடல் கொண்ட பகுதியாக விளங்கிய இப் பிரதேசத்தில் முற்றிலும் கடல்நீர் இறைக்கப்பட்டுவிட்டால் ஆறு லட்சம் ஏக்கர் நிலங்கள் மிகச் செழிப்பான பிரதேசமாக மாறிவிடும். இவ்வேலை இன்றும் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. ஏற்கனவே இங்கு 50,000 மக்கள் குடியேறி விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டு செழிப்பான வாழ்வு நடத்தி வருகின்றனர். வடகிழக்குப் போல்டர் பிரதேசமாக இன்று விளங்கும்பாகம் சைடர் கடலின் கீழ் இருபது ஆண்டுகளுக்கு முன்பாக அமிழ்ந்திருந்தது. இக்கடல், நாட்டை இரு துண்டுகளாகப் பிரித்து நிலத்தில் ஊடுருவி இருந்தது. புயற்காற்று, பெரும் அலைவீசும் காலங்களில் இங்கு படகுகள் கவிழ்ந்து விடுவதுடன், கடலோரம் வசிக்கின்ற மக்களுக்கும் பெருத்தசேதங்களை விளைவித்துவிடும்.

இங்கு கடலைத் தடுத்து குறுக்கே ஒரு பெரிய மதில் சுவர் எழுப்பிவிட்டால் இந்நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவந்து விடலாமென டாக்டர் சி. லெலி என்பவர் ஒரு திட்டம் வெளியிட்டார். இவருடைய பெயர் இன்றும் பொறி இயல் துறையில் மங்காப் புகளுடன் விளங்கி வருகிறது. இருபது மைல் நீளமுள்ள இந்த மதிற் சுவரைக் கட்டி முடிக்க ஐந்து ஆண்டுகளாயின. 1932-ல் வேலை முடிக்கப்பட்டது. கொந்தளித்துக் கொண்டிருந்த கடற்பரப்பு அமைதிகொண்டது. இதற்கு ஈசசு ஏரி என்று பெயர். அதனுள் பாயும் நதியின் பேரால் கொடுக்கப்பட்டது.

இன்று நதியிலிருந்து பாயும் நல்ல நீரினால் உப்பு நீர் குடிநீராக மாறிவிட்டது. கடலில் இருந்து மீட்கப்பட்ட தண்ணீர் பரப்பில் (அதாவது ஏரியின் மீது) ஐந்து மாபெரும் நிலப்பரப்புகளை உருவாக்க பொறியியல் வல்லுநர்கள் திட்டமிட்டனர். வடமேற்கில் ஐம்பதாயிரம் ஏக்கர் நிலப்பரப்புள்ள வயரிங்கர்மீர் போல்டர் என்ற பாகம் 1930-ல் முற்றிலும் வடிக்கப்பட்டது. வடகிழக்கு போல்டர் பாகத்தில் 1,35,000 ஏக்கர் நிலபரப்பைக் கொண்ட கிழக்கு பிளிவோலாந்து 1957-ல் மீட்கப்பட்டது. இன்னும் ஒரு லட்சம் ஏக்கரும், ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் ஏக்கர் கொண்ட இரண்டு பாகங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. இவ்வளவு நிலங்களும் மீட்கப்பட்ட பிறகும் மூன்று லட்சம் ஏக்கர் பரப்புள்ள நீர்ப்பாகம் ஏரியில் இருக்கும், இதன் மூலம் விவசாயத்திற்கு அவசியமான பாசனத் தண்ணீர் கிடைக்கும்.

வடகிழக்கு போல்டர் பகுதியில் இங்கு பிரவேசித்ததும் எங்கு நோக்கினும், எதைப்பார்ப்பினும் எல்லாம் புதுமையும், இளமையும்பெற்று மிளிரக்காண்கிறோம்.

சாலைகள் ஒரே நேர் கோடாக உள்ளன. குடியானவர்களின் வீடுகள் சிகப்பு நிறமாகவும், மரங்கள் சிறியவையாகவும், மெலிந்தும் காணப்படுகின்றன. இங்குமங்கும் புதிய, அழகான பெயர்கள் கொண்ட கிராமங்களுக்கு வழிகாட்டும் பலகைகள். கிராமங்கள் புதிதாகத் தோன்றிய காரணத்தினால் எங்கும் புதிய சாலைகளும் கட்டிடங்களும்; கோவில்களும், நேரான சாலைகளும் இருக்கக் காண்கிறோம். எந்தெந்த கட்டிடங்களைக் கட்டுவது, என்ன இடங்களை ஒதுக்குவது என்றெல்லாம் ஒவ்வொரு சிறிய சாக்கிரதையுடன் முன்பே திட்டமிடப்பட்டது.

இப்பகுதியில் ஊர்க், இசுகாத்லாண்ட் என்ற இரு தீவுகள் தான் கடல் பிரதேசமாக இருந்தபோது இருந்தன. ஆனால் இன்று அவைகள் நீர்ப்பபரப்பில் ஐக்கியமாகிவிட்டன. ஊர்க் தீவு முன்பு மீன் பிடிப்போர் குடியிருப்பாக இருந்ததினால் தெருக்கள் குறுகலாகவும், நவீன கால போக்குவரத்து சாதனங்கள் உட்புக முடியாத படியும் இருக்கிறது.

இங்கு குடியேறிய மக்கள் இளமை நோக்குடன் பிறப்பு விகிதம் அதிகமாகவும், இறப்பு விகிதம் குறைந்தும் உள்ளதாக வாழ்க்கை நடத்துகின்றனர். பிராட்சுடண்டுகள், கத்தோலிக்கர்கள்: மற்றும் இதர மதப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகவே வசிக்கின்றனர். அவரவர்களுக்குச் தனித் தனியே மாதாகோவில்களும், பள்ளிகளும் உள்ளன. இன்றும் ஒரு தலைமுறை சென்றால்தான் அவர்களுக்குள்ளேயுள்ள பேதங்கள் ஒழிந்து தாங்கள் யாவரும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சியில் வாழ்வார்கள்.

முன்பு தீவாகவிருந்த சாக்வாந்தில் ஒரு பொருட்காட்சிசாலை சிறந்து விளங்குகிறது. சைடர் கடலில் என்னென்ன பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டனவோ அவைகளெல்லாம் இங்கு இடம் பெற்றுள்ளன. நீங்கள் யாராவது சாவந்திற்குச் செல்ல நேரிட்டால்; சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் கப்பல்கள் ஓடிக்கொண்டிருந்த, இன்று பசுமையான விவசாய நிலங்களாகக் காட்சியளிக்கும் இந்தப் பிரதேசத்தைக் காணத் தவறாதீர்கள்.

ஆதாரம்: தி நெதர்லாண்ட்ச

## விரைந்தோடி வாராயோ?

—'ஈஸ்வரி'—

அன்னையே! தாயே! அன்பி னுருவே
என்னையே வெறுத்து எங்கோ ஏகினையே
உன்னையே நினைந்து ருகுமடி யேனில்
என்ன பிழைகண் டின்று வெறுத்தனையோ?

தளர்கின்றேன் தவிக்கின்றேன் தாயேயுனை
யிழந்து துடிக்கின்றேன் துவள்கின்றேன்
உளல்கின்றேன் துன்பத்தில் ஒப்பற்றவுன்
கழல்களைக் காணாது கண்ணீர் வடிக்கின்றேன்

தாயே கலைச்செல்வி தாமதமேன்
தூய இதயமலர் தனையளித்து
நீயே தஞ்சமென நினையடைந்த
நாயேனை யாட்கொள்ள விரைந்தோடி
வாராயோ

## தேன் துளிகள்

தொகுப்பு:
வீ. த. யோகராசா

ஒரு செயலைச் செய்பவன் செய்ய வேண்டிய முறை யாவது, அச் செயலை முன்பு செய்தவனுடைய அனுபவ அறிவைத் தான் அறிந்து கொள்ளலாகும்.

—திருவள்ளுவர்.

மொழி மனிதனுடைய உடலில் ஊறுவதாக இருக்கலாம். ஆனால் அவனுடைய மூளையை உருவாக்கியது அதுவே.

—மு. வரதராசன்.

நல்ல நோக்கத்துக்காகச் சாவுக்கும் அஞ்சாமல் போராடும் வீரத்தை நான் என்றும் போற்றக் கூடியவன்

—சவகர்லால் நேரு.

பணக்காரனுக்குப் புகழ் வந்தால் அவனுக்குப் பணம் சேரும். ஏழைக்குப் புகழ் வந்தால் இன்னும் பரம ஏழையாக்கும்.

—அகிலன்.

## விநோத சொல் வேட்டைப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 — சி | வ | ள | தி | மா | ஆ | ல் | ம |
| ன் | ன | ர் | ம | மா | லு | கா | ட |
| சு | வீ | டு | ன் | மா | ர் | ம | ம் |
| த | ந் | தி | ர | ண | வ | ன் | ற |
| து | மா | மா | மி | க | ல் | னி | ம் |
| ம | க | ள் | ரி | ணி | வி | த | ன |
| ந | மை | பா | பா | லே | யே | ந் | ம் |
| பு | து | ரீ | ர் | லே | க | ரு | ம் |

1. சின்னவீடு
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................
8. ..............................

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

வளர்மதி உறுப்பினர் எண் ..............................
(உறுப்பினராயின்)

இங்கே கத்தரிக்கவும்

இது மிகவும் சுலபமான போட்டி. இங்குள்ள சதுரத்தில் காணப்படும் எழுத்துக்களில் பல சொற்கள் மறைந்திருக்கின்றன. தொடங்கும் எழுத்தில் இருந்து மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ அல்லது வலது பக்கமாகவோ மாறி மாறிச் செல்லும் அடுத்தடுத்துள்ள எழுத்துக்களால் ஆன இந்தச் சொற்கள் வளர்மதி வாசகர்களுக்கு மிகவும் பழக்கமானவையாகும்.

நீங்கள் இந்தச் சொற்களைக் கண்டு பிடித்து ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய எழுத்துக்களை பேனாவினால் கோடிட்டு இணைத்துவிட வேண்டும். இவ்வாறு இணைக்கப்பட்ட ஒரு சொல்லை அடுத்து, அதோடு தொடர்புடைய மற்றொரு சொல்லும் வந்தால் அதே கோட்டினால் அந்தச் சொல்லையும் இணைத்து விடுங்கள்.

[உதாரணமாக 'சின்ன வீடு' (சின்ன + வீடு) என்ற சொற்களுக்குரிய எழுத்துக்கள் கோடிட்டு இணைக்கப்பட்டு 1 என இலக்கமிடப் பட்டிருப்பதைப் பாருங்கள்.]

நீங்கள் கண்டு பிடித்து இணைத்த சொற்றொடர்களையும் இவ்வாறு 2, 3, 4...என இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் வரிசைப்படி இலக்கமிட்டு அவற்றை எழுதி அனுப்பவும். ஒரு முறை பேனாவினால் கோடிட்ட எழுத்துக்களை மறுமுறை உபயோகிக்கக் கூடாது.

எல்லா எழுத்துக்களையும் உபயோகிக்க வேண்டுமென்ற அவசியமுமில்லை.

ஆகக் கூடுதலான எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடரை எழுதி அனுப்புபவரே பரிசுக்கு உரியவர்.

★ இப்போட்டி அமரர் வன்னியசிங்கம் நினைவாக நடாத்தப்படுகிறது.

போட்டி விதிகள்:

★ இங்கு பிரசுரிக்கப்பட்டிருக்கும் படிவத்திலேயே விடைகளை எழுதி அனுப்பப்படவேண்டும்.
★ விடைகள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.
★ ஆகக் கூடுதலான தொகை எழுத்துக்களாலான நீண்ட சொற்றொடரை எழுதி அனுப்புபவரே பரிசைப் பெற உரித்துடையவர்.
★ ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஆகக் கூடுதலான ஒரே தொகை அளவு எழுத்துக்களைக் கொண்ட சொற்றொடர்களை எழுதியனுப்பி யிருந்தால் பரிசு அதிர்ட்டச் சீட்டு முறையில் தேர்ந்தெடுக்கப்படும்.
★ இந்தப் போட்டியில் வளர்மதி உறுப்பினர்கள் மட்டுமன்றி உறுப்பினரல்லாத வாசகர்களும் பங்குபற்றலாம். பரிசு பெறுபவர் வளர்மதி உறுப்பினராக இருந்தால் அவருக்கு வளர்மதி சிறப்புப் பரிசாக மேலும் 5-00 ரூபா கொடுக்கப்படும். வளர்மதி உறுப்பினர் அல்லாதவராக இருந்தால் அவருக்கு 5-00 ரூபா பரிசாக வழங்கப்படும்.
★ இப் போட்டியின் முடிவுத் திகதி 13-10-65.
★ கீழேயுள்ள முகவரியைக் கத்தரித்து கடித உறையில் ஒட்டி அனுப்பப்படும் விடைகள் மட்டுமே பரிசிலனைக்கு எடுக்கப்படும்.
★ இது வெறும் விநோதப் போட்டியே. பிரவேசக் கட்டணம் கிடையாது.

அமரர் வன்னியசிங்கம்
நினைவுப் போட்டி,
மே/பா வளர்மதி,
த. பெ. எண் 1183,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான

4வது வாரம்!

கிங்ஸ்லி
பிளாஸா
நவா
விஜயா
[மட்டக்களப்பு]
ஸ்ரீகிருஷ்ணு
[திருகோணமலை]
மொடேர்ன்
[பதுளை]
மொடேர்ன்
[பண்டாரவளை]
லட்சுமி விஜிதா
[இரத்தினபுரி] [அட்டன்]
தீவொளி
[நுவரெலியா]

6வது வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)



# கை கொடுத்த தெய்வம்

சிவாஜி கணேசன்,
சாவித்திரி,
ராஜேந்திரன்,
கே. ஆர். விஜயா
புஷ்பலதா,
எம். ஆர். ராதா,
ரங்கராவ்,
சகஸ்ரநாமம்,
நடித்தது

---

# தீபாவளி

நன்னாளில்
தேன் சொட்டும்
திரை விருந்து!

சினிமாஸ் அளிக்கும்

# எங்க வீட்டுப் பிள்ளை



காணத் தயாராகுங்கள்!

---

யாழ்ப்பாணம் வின்சா திரையில்
இரசிகர்களை மகிழ்வூட்டுகிறது!

## வெகு விரைவில்!

எல்பின்ஸ்டன் ரெக்ஸி
இம்பீரியல் ஓடியன்
(மட்டக்களப்பு) (கண்டி)
ஆகிய திரைகளுக்கு வருகிறது!

* புதுமையான கதை அமைப்பு
* பூரிக்க வைக்கும் காட்சிகள்
* குளிர்ச்சியூட்டும் பலவர்ணத்தில் தயாரான

சிவாஜி கணேசன் அளிக்கும்

# புதிய பறவை

சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி, நாகேஷ், வி. கே. ராமசாமி
நடித்தது.



3வது வாரம்!

செல்லமகால்
மற்றும்
திரைகளில்!

தந்தையைக் கொன்ற
கொலைஞனைத் தேடி
பழிதீர்க்கப் புறப்படும்
தலைவன் படும் பாட்டைச்
சித்தரிக்கும் பாங்கான
படம்.

முத்துராமன்,
சௌகார் ஜானகி,
சந்திரகாந்தா,
டி. கே. ராமச்சந்திரன்,
வி. கே. ராமசாமி
மனோரமா,
எஸ். ராமராவ்
தோன்றும்

# நினைப்பதற்கு நேரமில்லை

---

## ஜனத்திரள் மிக்க தியேட்டர்களில் 2வது வாரமாக ஓடிக்கொண்டிருக்கிறது!

★ இப்படம் விசேஷமாகப் பெண்களுக்குரிய படமென்பதைப் படத்தின் பெயரே பறைசாற்றுகிறது! அப்பொழுது மற்றவர்களுக்கு இப்படம்......?
அவர்களுக்கும் இது தேனாகவே இனிக்கும்! ஏன் தெரியுமா?
கதை சலிப்பில்லாமலும், டைரக்ஷன் திறமையாகவும், நடிப்பு உயர்தரமாகவும் இருப்பதால்!



சென்ட்ரல்
(மருதானை)



ஈரோஸ்
பாமன்கடை



ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை) லிபேர்டி (ஹட்டன்) லிபேர்டி (பதுளை) ஆனந்தா (கம்பளை)

ஆதித்தன், வசந்தா, ஷீலா, நாகேஷ்,
ராதா, அசோகன், ராமதாஸ் நடித்த

# விளக்கேற்றியவள்

பாடல்கள் : கண்ணதாசன், ஆலங்குடி சோமு ★ டைரக்ஷன் : ஜோசப் தளியத் ★ இசை : டி. ஆர். பாப்பா

[illegible] !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில்
1965-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.